www.tamilarangam.net

# எரிமலை

நவெம்பர்-டிசெம்பர் 1999



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நீ களம் புகுந்தால்...!

எங்கும் மலர் மணக்கும் மலைச்
சாரல்!
மருளும் விழிகளுடன் மேய்கிறது
மான் கூட்டம்!
பயங்கரமான உறுமல்! பாதை மீது
புலி தோன்றி பாய்கின்றது
புள்ளிமான் கூட்டம் எதிர்த்தா
நிற்கும்?
துள்ளியோடி சிதறுகிறது!

காரிருள் மண்டிக் கிடக்கிறது!
கிழக்கே மெல்ல மெல்ல கதிரவன்
எழுகிறான்!
இவனது ஒளிக் கற்றைகள்
இருளை விரட்டி அடிக்கின்றன!

பாரம் மிகுந்த வண்டி
மணல் பறக்க கல் பிளக்க
இழுக்கிறது
செருக்கு மிக்க எருது!
அது செல்லமுடியாத இடமும்
உண்டோ?!!

வலிய கரம் கொண்ட
வாள் வீரர் தலைவனே!
போர்க் களம் புகுந்தாய் எனில்
உன்னை எதிர்த்துப் போரிட்டு
உன் மண்ணை கைப்பற்றும்
வீரம் மிக்க பகைவரும் உளரோ?

அதியமானின் வீரத்தைப் பாட வந்த ஔவை மேற்கண்டவாறு பாடிய பாடலை புறநானூறு நமக்குக் கூறுகிறது.

புலியை எதிர்க்கும் திண்மை மான்களுக்கு இருக்கப் போவதில்லை. இது இயற்கை நெறி.

ஆனால், சிங்கத்தை அல்ல சிங்கக் கூட்டத்தையே சீறிப் பாய்ந்து விரட்டி அடிக்கும் புலிகள் ஈழத் திருமண்ணில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. ஔவை இன்று இருந்திருந்தால் சிங்கத்தை வெல்லும் சினப்புலியின் வீரத்தை வியந்து பாராட்டியிருப்பார்.

சிங்களப் படையை சிதறடித்து வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றுவரும் விடுதலைப் புலிகளின் வரலாறு தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாறாகும் —

மண்ணை மீட்கும் போரில் எதிரிகளோடு வீரத்துடன் போராடி களத்திலே வீழ்ந்து பட்ட ஒவ்வொரு மாவீரனின் வரலாறும் புதிய புறநானூறு எழுதுவதற்கான செய்திகளாகும்.

ஒவ்வொரு மாவீரனும் ஒவ்வொருஅதியமானாக விளக்குகிறான்! அன்றைய அதியமானின் வீரத்தைப்பற்றி ஔவை பாடிய பாடல் இதோ! இது இன்றைய அதியமான்களான புலிகளுக்கும் பொருந்துகிறது.

உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழும்
சாரல்

மறப்புலி உடலில் மான்கணம்
உளவோ
மருளின் விசும்பின் மாதிரத்து ஈண்டிய

இருளும் உண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கிப் பாருற்று இயங்கிய

பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய
அரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்

பெருமிதப் பகட்டுக்குத் துறையும்
உண்டோ?
எழுமரம் கடுக்கம் தாள்தோய் தடக்கை

வழுவில் வன்கை மழவர் பெரும
இருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரும் உளரோ நீகளம் புகினே.

(புறநானூறு 254)

பழ.நெடுமாறன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...




தேசியத்தலைவரின்
மாவீரர் நாள் உரை
பக்கம்– 04





போர்க்களக் காவியம்
ஓயாத அலைகள் - 3
பக்கம்– 08





மடுத் தேவாலயம் மீதான
சிங்களத்தின் தாக்குதல்
பக்கம்– 16

தமிழீழ விடுதலை
பேச்சுவார்த்தை மூலமா...?
யுத்தத்தின் மூலமா...?
பக்கம் – 12

பெண்கள் மீதான
பாலியல் வன்முறைகள்
பக்கம் – 24

நேர்காணல்
பக்கம் – 30

தமிழீழ மக்களின்
பாரம்பரிய பிரதேசம்
பக்கம் – 37

சிறுகதை
பக்கம் – 42









தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைவரின் சிந்தனையில் இருந்து...



மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்; சுதந்திரச் சிற்பிகள்; எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினெட்டாம் ஆண்டு

நவெம்பர்-

டிசெம்பர்

1999

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

# புதுயுகம் எமக்கானது! எமக்கானது!

தமிழீழ விடுதலைப்போராட்டம் நவம்பர் 99–ல் பெரும் அரசியல், இராணுவ திருப்புமுனைகளை கண்டுள்ளது. ஓயாத அலைகள் 3 நடவடிக்கை சிங்கள இராணுவக் கட்டுமானத்தை சிதைத்து மனோபலத்தை அழித்துப் பெரும் வெற்றிகளை தமிழீழத்திற்கு ஈட்டிக்கொடுத்து வருகின்றது. உலக சமூகம் இந்த ஒப்பற்ற இராணுவ சாதனைகளை அவதானித்து வருகின்றது. தமிழ்த் தேசியம் இவ்வெழுச்சியின் உந்துதலால் பெருமிதமும் நம்பிக்கையும் பெருகிட வைராக்கியம் பெற்று நிற்கின்றது.

இவ் வெற்றிகளானது வெறும் இராணுவ பலத்தை மட்டுமல்ல அரசியல் இராஜதந்திர பலத்தையும் தமிழீழத்திற்கு ஈட்டிக் கொடுத்துள்ளது. சிங்களம் தான் கண்ட தோல்விகளின் தாக்குதலால் அரசியல் பலம் இழந்து இராஜ தந்திர வீச்சிழந்து நிலைகுலைந்துள்ளது. கடந்த வருடம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்கள் பேச்சுக்கள் மூலம் சமாதானமாக பேசித் தீர்ப்பதற்கான அழைப்பை விடுத்திருந்தார். இதனை உதாசீனம் செய்து தனது இராணுவ பலத்தில் நம்பிக்கை வைத்து செயற்பட்ட சிங்களத் தலை மைகள் இன்று பலவீனமான நிலையில் முரண்பட்டு நிற்கின்றனர்.

மறுபுறம் எமது தேசியத் தலைவர் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவீரர் நாள் உரையை இவ்வருடம் நிகழ்த்தியுள்ளார். வெற்றியின் உச்சத்தில் நின்று தாயகத்தினை மீட்கும் பலம் கொண்டவர்களாக இருந்துகொண்டு ஆற்றப்பட்டது இவ் உரை. தேசியத் தலைவர் சிங்கள பேரினவாதத்தைச் சாடினார்; பேச்சுவார்த்தைகளை இரகசியமாக நடாத்தும் சந்திரிகாவின் ஏமாற்றுத்தனத்தை பகிரங்கப்படுத்தினார். சந்திரிகாவை மிக மோசமான இனவெறியாளர் என்பதை இடித்துரைத்தார். அதேவேளை சமாதான முறையூடான இணக்க முயற்சிகளுக்கான கதவுகள் திறந்துள்ளது என்பதை வலியுறுத்தினார்.

சந்திரிகா அரசு போர் வெறி பிடித்து அலைந்தது; பெருந்தொகைப் பணத்தைக் கொட்டி இராணுவ விரிவாக்கலைப் புரிந்தது. இவை அனைத்தும் கடலோரம் கட்டப்பட்ட மண் வீட்டுக்கு நிகழ்ந்த கதையைப் போல ஓயாத அலைகளால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது என சுட்டிக்காட்டியுள்ள தலைவர் இன்று நாம் நடத்துவது நிலத்தை மீட்பதற்கான சமர் என வரையறைசெய்தார்.

எமது தேசியத் தலைவர் தமிழ்மக்களுக்கு விடுத்த அறைகூவலில் அடுத்த யுகம் எமக்கானது என்பதையும் தமிழீழம் வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும் என்பதையும் தெட்டத்தெளிவாக பிரகடனம் செய்துள்ளார். எதுவித குழப்பங்களும் அற்று ஒரு கம்பீரமான தலைமைக்குரிய அரசியல் ஞானத்துடன் எமது தேசியத் தலைவர் விடுத்துள்ள செய்தி புகலிடத் தமிழர்களால் உணர்வு பூர்வமாக கிரகிக்கப்பட்டது.

இதேவேளை சிங்கள தேசம் இவ் உரையினை விவாதப்பொருளாக்கும் வரலாற்றுக்காலம் உருவாகியது. தமது தலைமையை தேர்வதற்கான சிங்களத் தேர்தலில் "பிரபாகரன்" மையப்பொருளாக நின்றார். உலக சமூகம் சிங்களத்தின் இராணுவ - அரசியல் அணுகுமுறையில் வைத்திருந்த நம்பிக்கை உடைவடைந்த வேளையில் அவ் இடைவெளியில் தமிழீழத்தின் நியாயபூர்வமான அரசியல் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் புனிதப்பணியை எமது தலைமை சிறப்பாக நிறைவேற்றியுள்ளது.

இவ்வெழுச்சியின் வீச்சு, இவ்வாண்டு உலகம் பூராவும் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளில் தெளிவாகப் புலப்பட்டது. மக்கள் வெள்ளம் அமெரிக்க - ஐரோப்பிய கண்டத்தில் மட்டுமல்ல ஆபிரிக்கக் கண்டத்திலும் உணர்வுடன் எழுந்தமை தேசியத் தலைவர் குறிப்பிட்டது போன்று புதுயுகம் எமக்கு சொந்தமானது என்ற உண்மைக்கு பலம் கொடுத்துள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத் தேசியத்தலைவரின்
# மாவீரர்நாள் உரை 1999

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.
27.11.1999

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

*இன்றைய நாள் எமது தேசத்து விடுதலை வீரர்களின் நினைவு நாள்.*

*தாயக விடுதலையை தமது உயிரிலும் மேலாக நேசித்து, அந்த இலட்சியத்துக்காகப் போராடி மடிந்த எமது தேசத்தின் சுதந்திர வீரர்களை இன்று நாம் எமது இதயத்துக் கோயில்களில் சுடேற்றிக் கௌரவிக்கிறோம்.*

எமது தாயக தேசத்தின் விடுதலைக்காக ஆயிர மாயிரம் புலி வீரர்கள் களமாடி வீழ்ந்தார்கள். எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத் தாய் அவர்களை அரவணைத்துக் கொண்டாள். ஆயிரமாயிரம் தனிமனித உயிர்கள் சரித்திரத்தின் கருவூலத்தில் சங்கமித்தன. அவ்வுயிர்கள் கருவாகி, காலத்தால் உருவம்பெற்று, தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற்று வருகிறது. தமிழீழம் என்ற அந்தச் சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும். அந்த சுதந்திரதேசத்தின் ஆன்மாவாக ஆளுமையாக எமது மாவீரர்கள் என்றும் எம்முடன் நிலைத்து வாழ்வார்கள்.

எமது வீர விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய திருப்புமுனையில் நின்றவாறு இன்று எமது மாவீரர்களை நாம் நினைவு கொள்கிறோம்.

எமக்கு முன்னால், கால விரிப்பில், ஒரு புதுயுகம் எமக்காக காத்து நிற்கிறது. எமக்குப்பின்னால் கடந்த காலத்தில் இரத்தம் தோய்ந்த விடுதலை வரலாறு நீண்டு செல்கிறது. மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்றுப் பெருமையுடன் எமது விடுதலை இயக்கம் பிறக்கப்போகும் புதுயுகத்தில் காலடி வைக்கிறது.

இப்புதுயுகம் எமக்குச் சொந்தமானது. அநீதியையும் அடக்குமுறையையும் எதிர்த்து நீதிக்கும் சுதந்திரத்துக்குமாகப்போராடிய மக்களுக்குச் சொந்தமானது. இப்புதுயுகத்தில் எமது மக்களின் நெடுங்காலக் கனவு நிறைவு பெறும். இத்தனை காலமும் எமது மக்களைப் பீடித்த துன்பமும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். எமது மண்ணுக்கு விடுதலை கிட்டும். எந்த இலட்சியத்துக்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அந்தப் புனித இலட்சியம் இப் புது யுகத்தில் நிறைவுபெறும்.

ஒப்பற்ற மாபெரும் இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்றவாறு இன்று நான் மாவீரர் நினைவுரையை நிகழ்த்துகிறேன்.

இந்த மகத்தான இராணுவ வெற்றி முழு உலகத்தையும் வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்தியிருக்கிறது. இது ஒரு சாதாரண போரியல் சாதனைஅல்ல. போரியற் கலையின் ஒரு ஒப்பற்ற உலக சாதனையாகவே இவ் வெற்றி கருதப்படும். இந்த வெற்றியின் விஸ்வரூப பரிமாணம் கண்ட எமது எதிரி மட்டுமல்ல எதிரிக்குப் பக்கபலமாக நின்று பயிற்சியும் ஆயுதமும் பண உதவியும் வழங்கி வந்த உலக நாடுகளும் மலைத்துப்போய் நிற்கின்றன. "ஓயாத அலைகள் மூன்றாக" குமுறிய இப் பெருஞ் சமர் ஒருசில நாட்களில் இமாலய சாதனையைப் படைத்தது.

முழுப்பலத்தையும் ஒன்றுகுவித்து, பெரும் படையெடுப்புக்களை நடாத்தி வருடங்களாக மாதங்களாக தொடர் சமர்களை நிகழ்த்தி, ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலி கொடுத்து சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருந்த வன்னியின் வளமிகு பகுதிகளை எமது வீரர்கள் கடுகதி வேகத்தில் மீட்டெடுத்தனர். வன்னி மண்ணில் அகலக் கலூன்றிய எதிரி தொடர் வலையமாக நிறுவிய படைத்தளங்களும், கட்டளைப் பீடங்களும், இரும்புக் கோட்டைகளாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களும், மிகக்குறுகிய காலத்தில், மிக்கூடிய வேகத்தில் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த அற்புதம், உலகத்தின் புருவத்தை உயர்த்தியது. வன்னியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழம்பெரும் பட்டினங்களிலிருந்து எதிரி இராணுவம் விரட்டப்பட்டது. அங்கெல்லாம் இப்பொழுது புலிக்கொடி மார்தட்டி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெருமையுடன் பறக்கிறது. காட்டுத் தியாகப் பரவிய இப் பெருஞ்சமரில் எமது தாயகத்தின் இதய பூமியான மணலாற்றின் ஒரு பகுதி மீட்கப்பட்டதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். காலம் காலமாத் தமிழர் வாழ்ந்த இப்புனித மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து, தமிழர்களைக் கொன்றொழித்து, அங்கு சிங்களக் குடியேற்றங்களை நிறுவிய சோக வரலாற்றினை எமது மக்கள் நன்கறிவர். வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாக இணைத்து, வன்னியின் மிகச் செழிப்பான நிலங்களைக் கொண்ட எமது தேசத்தின் இதயபூமி, மீண்டும் எமது கட்டுப்பாட்டில் வந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். இந்த மண் மீட்பு எமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

போரியற் கலையில் புலிப்படை, வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த 'ஓயாத அலைகள் மூன்று' என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்திற்கு நிரூபித்துக்காட்டியிருக்கிறது. எமது படையணிகளின் சமரிடும் வேகமும் வீச்சும், குலையாத கூட்டுச் செயற்பாடும், துரித கெதியில் படை நகர்த்தும் ஆற்றலும், எதிர்த்துத்தாக்கும் உத்திகளும், அபாரமான துணிவும், நேர்த்தியான கட்டுப்பாடும் உலக இராணுவ நிபுணர்களை வியக்கச்செய்து வருகிறது.

**எமது போராட்ட இலக்கு, ஒளிமயமான எதிர்காலமாக எமது கண்களுக்குத் தெரிகிறது நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம். எமக்கு முன்னால் எழக்கூடிய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து செல்வோம். நாம் ஒரே மக்கள் சக்தியாக, ஒன்றுபட்ட தேசமாக, ஒருமித்தெழுந்து எமது இலட்சியப் பாதையில் விரைந்து செல்வோம். சாவைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காக காத்துநிற்கிறது.**

இந்த வரலாற்றுச் சமரில் களமாடி வீரசாதனை படைத்த சகல போராளிகளுக்கும், படை நகர்த்திய தளபதிகளுக்கும், இச்சமரில் பங்குகொண்டு போராடிய எல்லைக் காப்புப் படையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இந்தப் பெருஞ்சமரில் எமது போராளிகளுக்கு ஊக்கமளித்து, உணவளித்து, இரத்தமளித்து, பின் கள வேலைகளில் உதவிபுரிந்து பெரும் பங்காற்றிய தமிழீழ மக்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி.

நில மீட்பிற்காகவே இந்தப் போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

தமிழீழம் எமக்குச் சொந்தமான நிலம். வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான நிலம். எமது வாழ்விற்கும் வளத்திற்கும் ஆதாரமான நிலம். நாம் பிறந்து, வாழ்ந்து, வளர்ந்த நிலம். எமது தேசிய அடையாளத்திற்கு அடித்தளமான நிலம். இந்த நிலத்தை தனது சொந்த நிலம் என்கிறான் எதிரி.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத் தீவில் சிங்கள இனவாதிகள் ஆட்சிப்பீடம் ஏறிய காலத்திலிருந்து தமிழர் நிலம் விழுங்கப்பட்டு வருகிறது. தமிழர் நிலத்தை அபகரித்துச் சிங்கள மயமாக்குவது ஒரு புறமும், தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து, அதன் வளங்களை அழித்து, அங்கு வாழ்ந்த மக்களை அகதிகளாக்குவது இன்னொரு புறமுமாக எமது நிலம் மீது கொடுமை நிகழ்ந்து வருகிறது. இந்த அநீதிக்கு எதிராகவே நாம் போராடுகிறோம். ஆகவே, சாராம்சத்தில் எமது விடுதலைப் போரானது ஒரு மண்மீட்புப் போராகும்; எமக்குச் சொந்தமான நிலத்தை மீட்டு அந்த நிலத்தில் எமது ஆட்சியுரிமையை இறைமையை நிலைநாட்ட நடைபெறும்போர்.

இந்தப் போரின் நோக்கம், குறிக்கோள் என்ன என்பதை எமது மக்கள் இப்பொழுது நன்கு உணரத் தொடங்கியுள்ளனர். சொந்த நிலத்தை இழந்து, அந்த நிலத்தில் அமைந்த வாழ்வை இழந்து, அகதிகளாக அலையும் மக்களுக்குச் சொந்த மண்ணின் மகிமை புரியும். அந்த மண்ணில் ஆக்கிரமிப்புக் காலூன்றி நிற்கும் அந்நியனை விரட்டவேண்டிய அவசியம் புரியும். இந்தப் புரிந்துணர்வால் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக, இந்த மண்மீட்புப் போரில் எமது மக்கள் எமக்குப் பக்கபலமாக நின்று, பல்வேறு வழிகளில் பங்களித்து வருகிறார்கள். இன்று, எமது தேச விடுதலைப் போரானது விரிவடைந்து மக்கள் போராக வளர்ச்சியும், எழுச்சியும் பெற்றுவருகிறது.

எனது அன்பார்ந்த மக்களே,

ஆண்டுதோறும் எனது மாவீரர் நினைவுரையில் நான் சமாதானத்தையும், சமாதான வழியிலான அரசியற் தீர்வையும் வலியுறுத்தத் தவறவில்லை. அதே வேளை, சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சிங்களப் பேரினவாதம் தயாராக இல்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

சிங்களத்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தி, மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறிவரும் இரு பிரதான சிங்களக் கட்சிகளும் சாராம்சத்தில் இனவாதக் கட்சிகளே! இவ்விரு கட்சிகளும் சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தில் வேரூன்றி வளர்ந்தவை. அந்த வெறி பிடித்த, தமிழ் விரோதச் சித்தாந்தத்தில் திளைத்தவை. கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக தமிழினத்திற்கு எதிராக ஒடுக்குமுறையை முடுக்கிவிடுவதில் போட்டியிட்டு செயற்பட்டவை. இந்த இன ஒடுக்குதல்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாற்றில்; என்றுமில்லாத வகையில் தமிழருக்குக் கொடுமை இழைத்த பெருமை சந்திரிகாவின் ஆட்சியையே சாரும்.

சந்திரிகாவின் ஐந்தாண்டு ஆட்சிக் காலம் தமிழினத்துக்கு ஒரு சாபக்கேடாக அமைந்தது. தொடர்ச்சியான போரும், வன்முறையும், சாவும் அழிவும், பசியும், பட்டினியும், இடப்பெயர்வுமாக இக் காலகட்டத்தில், எமது மக்கள் எதிர்கொண்ட பேரவலம் மிகக் கொடுமையானது. இருண்ட, இரத்தம் படிந்த வரலாற்றுப் பக்கங்களைக் கொண்டதாக சந்திரிகாவின் அடக்குமுறை ஆட்சிக்காலம் நீண்டது. இந்தக் கொடிய ஆட்சியானது, தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் என்றும் அழியாத வடுவை ஏற்படுத்தியது.

உள்நாட்டில் தமிழருக்கு எதிராக ஒரு பயங்கரவாத ஆட்சியை நடத்திக்கொண்டு, வெளியுலகில் சமாதானம் விரும்பும் ஒரு ஜனநாயக தேவதையாக நாடகமாடினார் சந்திரிகா. தமிழர் தாயகத்தை முழுமையாக ஏப்பம் விடும் ஒரு நாசகாரப்போர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு, அதனை ஒரு சமாதானத்திற்கான போர் முயற்சியாகவே வர்ணித்தார். முழு உலகமும் அவரை நம்பியது. அவரது சமாதானப் போக்கு ஆதரவு வழங்கியது. முழு உலகத்தையும் கண்கட்டி ஏமாற்றிய அரசியல் பரப்புரை வித்தைகளில் தமிழினத்துரோகிகளே சந்திரிகாவுக்கு பக்கத்துணையாக நின்றனர்.

நாம் சந்திரிகாவை நம்பவில்லை. தமிழரின் தேசிய பிரச்சினையை நீதியான முறையில் தீர்த்துவைக்கும் நேர்மையும் உறுதிப்பாடும் அவரிடம் இருக்கவில்லை. சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் நவயுகப் பிரதிநிதியாகவே நாம் அவரைக் கண்டோம். எனவேதான், நாம் சந்திரிகா அரசுடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்த விரும்பவில்லை. ஆயினும் நாம் சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை. சர்வதேச சமூகத்தின் முன்னிலையில், மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்ள நாம் தயாராக இருப்பதாகச் சென்ற ஆண்டு மாவீரர் நினைவுரையில் நான் அறிவித்தேன்.

நாம் சர்வதேச மத்தியத்துவத்தை வேண்டிய போதும், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏற்றதான சமாதானப் புறநிலைகள் உருவாக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினோம். போர் நெருக்கடி நீங்கிய நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பும், பொருளாதார நெருக்குவாரங்களும் அகன்ற ஒரு இயல்பான, நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்பதை நாம் தெளிவாக விளக்கியிருந்தோம்.

சமாதானப் பேச்சுக்களுக்கு உகந்ததான ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்ற எமது யோசனையை, சந்திரிகா அரசு ஏற்க மறுத்தது. போருக்கு ஓய்வு கொடுக்கவோ, நில ஆக்கிரமிப்பை நிறுத்தவோ, பொருளாதாரத் தடைகளை நீக்கவோ சந்திரிகா விரும்பவில்லை. போரையும் பொருளாதாரத் தடைகளையும் தமிழர் மீதான அரசியல் அழுத்தங்களாகப் பாவிக்கவே அரசு விரும்பியது.

'சமாதானத்திற்கான போர்' என்ற சந்திரிகா அரசின் கோட்பாடு ஒரு இராணுவத் தீர்வையே குறித்து நிற்கிறது. போர் மூலமாக தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்து, தமிழினத்தை அடிமை கொள்வதே இத்திட்டமாகும். கடந்த ஐந்தாண்டு காலமாக இப் போர்த் திட்டத்தை செயற்படுத்தவே அவர் ஓயாது உழைத்தார். எத்தனையோ பேரழிவுகளைச் சந்தித்தபோதும், அவர் தனது இராணுவத் தீர்வுத் திட்டத்தை கைவிடவில்லை. இதனால் சமாதான வழிமுறைகள் பற்றியோ, சமாதானப் பேச்சுக்கள் பற்றியோ அவர் அக்கறையோடு சிந்திக்கவில்லை. அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை.

போரைத் தொடர்ந்து நடத்தியவாறு, சில வரையறைகளுடன், இரகசியமாகப் பேச்சுக்களை நடத்தலாமென மூன்றாம் தரப்பு மூலமாகச் சந்திரிகா எமக்குச் தூது அனுப்பியிருந்தார். நாம் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு புறம் போரை நடத்திக் கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சை நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது. அத்தோடு அபத்தமானதும் கூட. தொடரும் போரினால் எமது மக்கள் சாவையும், அழிவையும், அவலங்களையும் சந்தித்து நிற்க, நாம் எதிரியோடு கைகோர்த்து சமரசம் பேசுவது முடியாத காரியம். அத்துடன் எந்தவொரு நிபந்தனையோடும், காலவரையோடும் பேச்சுக்களை நடத்த நாம் தயாராக இல்லை. சந்திரிகா உண்மையில் சமாதானத்திற்காக அன்புக்கரம் நீட்டவில்லை. பேச்சு என்ற போர்வையில் ஒரு பொறியை வைக்க முயன்றார். நாம் அந்த சமாதானப் பொறிக்குள் சறுக்கிவிழத் தயாராக இல்லை.

கடலோரம் கட்டிய மணவீட்டுக்கு நிகழ்ந்த கதிபோலச் சந்திரிகாவின் போர்த்திட்டத்தை விடுதலைப் புலிகளின் 'ஓயாத அலைகள்' அடித்துச் சென்றுள்ளது. இச்சமரில் நாம் ஈட்டிய மாபெரும் வெற்றியின் விளைவாக இராணுவ சமபலம் எமக்குச் சார்பாகத் திரும்பியிருக்கிறது. புலிகள் இயக்கத்தைப்பலவீனப் படுத்தி; இராணுவ மேலாதிக்க நிலையைப் பெற்றுவிடவேண்டும் என்ற சந்திரிகாவின் ஐந்தாண்டு கால பகீரத முயற்சியை நாம் ஒரு சில நாட்களில் முறியடித்துள்ளோம்.

ஆட்பலம், ஆயுதபலம், ஆன்ம பலம் மக்கள் பலம் என்ற ரீதியில் சகல பலத்தோடும் நாம் வலுப்பெற்று நின்றபோதும், எமது தாயகத்தை மீட்டெடுக்கும் போரியல் சக்தி எம்மிடம் இருந்த போதும் நாம் சமாதானப் பாதையைக் கைவிடவில்லை. உயிரழிவையும் இரத்தக் களரியையும் தவிர்த்து, சமாதான வழியில், நாகரீகமான முறையில், தமிழரின் சிக்கலைத் தீர்க்கவே நாம் விரும்புகிறோம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமாதானப் பேச்சுக்கள் ஒரு சமாதான நல்லெண்ணப் புறநிலையில் மூன்றாம் தரப்பு சர்வேதச மத்தியத்துவத்துடன் நடைபெறவேண்டும் என்பதையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். சமாதானப் புறநிலை எனும்பொழுது போர் ஓய்ந்து, பொருளாதாரத் தடைகள் அகன்று, எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் படைகள் விலகிய ஒரு இயல்பு நிலையையே நாம் குறிக்கிறோம்.

போரையும், நில ஆக்கிரமிப்பையும், பொருளாதார நெருக்குவாரங்களையும் தமிழர் மீது அழுத்தம் செலுத்தும் உத்திகளாகப் பாவிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. எவ்வித புறநிலை அழுத்தங்களும் இல்லாத இயல்பு நிலையில், சமத்துவமும் புரிந்துணர்வும் நிலவும் நல்லெண்ண சூழ்நிலையில் பேசுவதையே நாம் விரும்புகிறோம்.

நாம் பேச்சுக்கான கதவைத் திறந்தபடி சிங்கள தேசத்திற்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டுகிறோம். ஆயினும் நாம் வேண்டுவது போன்று ஒரு சமாதான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்குச் சிங்கள அரசியற் தலைமைகள் இணங்கப் போவதில்லை என்பது எமக்குத் தெரியும். நீண்ட காலமாக கடைப்பிடித்துவரும் இராணுவ வன்முறைப்பாதையை சிங்கள இனவாதிகள் இலகுவில் கைவிடப்போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும். எனவே, சிங்கள அரசியற் தலைமைகளுடன் பேசி, இணக்கம் கண்டு, எமது தேசியச் சிக்கலுக்கு தீர்வுகாணலாமென நாம் கற்பனையில் வாழவில்லை.

மனித உரிமைகளை மதியாத சிங்கள இனவாத அரசியலும், அதன் தமிழர் விரோதப் போக்கும் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு மாற்று வழியையே திறந்து வைத்திருக்கிறது. அதுதான் போராடிப் பிரிந்துசென்று தனியரசை உருவாக்கும் ஒரே வழி. இந்த வழியில் தான் சிங்கள தேசம் தமிழினத்தை தள்ளிக்கொண்டிருக்கிறது.

சுதந்திர தமிழீழத் தனியரசே எமது தேசியப் பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதோ தீர்மானித்து விட்டார்கள். எமது மக்களின் சுதந்திர அபிலாசையை சிலுவையாக தோளில் சுமந்து, இத்தனை ஆண்டுகளாக எமது இயக்கம் இரத்தம் சிந்திப் போராடி வருகிறது. இன்று, எமது சுதந்திரப் பயணத்தில், அந்த நீண்ட விடுதலை வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்து விட்டோம்.

எமது போராட்ட இலக்கு, ஒளிமயமான எதிர்காலமாக எமது கண்களுக்குத் தெரிகிறது.

நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம்.

எமக்கு முன்னால் எழக்கூடிய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து செல்வோம்.

நாம் ஒரே மக்கள் சக்தியாக, ஒன்றுபட்ட தேசமாக,ஒருமித்தெழுந்து எமது இலட்சியப் பாதையில் விரைந்து செல்வோம்.

சாவைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காக காத்துநிற்கிறது.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'
வே.பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர்க்களக் காவியம்






## ஓயாத அலைகள் 3

வன்னி மண்ணில் ஓயாத அலைகள் வீரவரலாறு படைத்து வருகின்றது. இதனை நில மீட்புச் சமர் என அடையாளமிட்டுள்ளார் தமிழீழ தேசிய தலைவர் மேதகு.வே. பிரபாகரன் அவர்கள்.

பெரும் படைப்பல சக்தியை உடைத்து ஊடறுத்து சிதைத்தழித்த இச்சமரானது ஒரு இராணுவ சாதனை மட்டுமல்ல ஒரு அரசியல் - இராஜதந்திர தாக்க முள்ள நுட்பமான நகர்வாகும். சிங்கள இராணு வத்தை மட்டுமல்ல அரசியல் அமைப்பையும் அதன் வெளிவிகாரக் கோட்பாடுகளையும் நிலைகுலைய வைத்துள்ள இச்சமரின் கன பரிமாணத்தை தலைவர் அவர்கள் தன் மாவீரர் நாள் செய்தி யில் கோடிட்டுக் காட்டியுள்ளார். இங்கே அதன் இராணுவ - அரசியல் பரிமாணத்தை பரிசீலிப் போம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓயாத அலைகள் 3 தொடரும் போர்ச் சாதனை

'எல்லோரும் மனோபலம் இழந்து விட்டோம்'

'நாங்கள் வெற்றிகளைப் பெற கடுமையாக உழைத்தோம். (ஆனால்) இப்போது அனைத்தும் இழக்கப் பட்டுவிட்டது.

– வாசிங்டன் போஸ்ட் நிருபரிடம் மூத்த சிங்கள இராணுவ உயரதிகாரி ஒருவர் கூறியது. (06.11.99)

வன்னி பெருநிலப்பரப்பு சிங்கள இராணுவத்தின் பிரதான போர்க் களமாகவும் மூலோபாயத்தின் அடித் தளமாகவும் திகழ்ந்தது. 4 பிரதான படைப்பிரிவுகளையும் பல துணைப் படைகளையும் குவித்து தன் போர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்திய சிங்களம் நவம்பர் 2–ம் திகதி அதி காலையிலிருந்து தொடரும் புலி களின் பிரமாண்டமான இராணுவ நகர்வுகளினால் சிதைவுண்டு சித றுண்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பகுதியினைக் கடந்த வருடம் கைப்பற்றிய சிங்களப் படையினர் இங்கு நிறுவப்பட்ட இராணுவ வலயம் ஊடாக முல்லைத் தீவு பிராந்தியத்தையே அச்சுறுத்த ஆரம்பித்தனர்.

கஜபாகு றெஜிமன்ட் இங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதன் பின்னே நீண்டு விரிந்து கிடந்தது சிங்கள இராணுவத்தின் இராட்சத பலம். ஒட்டுசுட்டானுக்கு மேற்கே கடற் படையினரும் தெற்கே விஜயபாகு படையணி, சிங்க படையணி என் பனவும் நிறுத்தப்பட்டிருந்தன. இவ் அரண்களுக்குப் பின்னே கஜபாகு றெஜிமண்டின் தலைமை பணிமனை யும் மேற்கே 55–வது படைப்பிரிவு சிறப்புப்படை தலைமையகமும் அமைந் திருந்தது. 563–வது பிரிகேட் தலை மையகமும் விஜயபாகு படையணி யின் தலைமையகமும் இப்பிராந் தியத்தில் அமைந்திருந்தன. இவற் றிற்குப் பின்னே கனரகாயன் குளத் தில் 56–வது படைப்பிரிவின் தலைமை யகமும் 55–வது படைப்பிரிவின் தலைமையகமும் அமைக்கப்பட்டிருந் தன. மேலும் நெடுங்கேணியூடாக இராணுவ வலயமாக்கிக் கிடக்கும் மணலாறும் கரிப்பட்டு முறிப்பு – மாங்குளம் ஊடாக நீண்டு கிடந்த பல இராணுவத் தளங்களும் ஒட்டு சுட்டானை அசைக்க முடியாத இரும்புக் கோட்டை என நினைக்க வைத்தது. நவம்பர் 2–ம் திகதி அதி காலை இவ் நிலைகளை புலிகள் சிதைத்து அழித்த போது சிங்களத் தின் இராணுவ கோட்டைகள் உடை யத் தொடங்கின.

ஒன்றன்பின் ஒன்றாக ஓமந்தை வரை புலிகளின் படையணிகள் விடு வித்தன. ஏராளமான இராணுவ நிலைகள் அழிந்தன, சிதைந்தன,. படைமுகாம்கள் வீழ்ந்தன. வன்னி யின் கிழக்குப் பிராந்தியத்தை விடு வித்த புலிகள் மேற்கு நோக்கி நகர்ந்து மடுப்பிராந்தியத்தை விடுவித்தனர். 18–ம் திகதி இப்பிராந்தியத்தில் புலிகள் நடாத்திய பெரும் 12 மணி நேரச் சமரில் பள்ளமடு, பெரியமடு, பள்ளம்பிட்டி, தட்சணாமருதமடு பகுதிகளிலும் அமைந்திருந்த சிங்கள இராணுவ முகாம்களும் நிலைகளும் அழிக்கப்பட்டன. மாந்தை பிரதேசம் விடுதலையாகியது. இக் கட்டுரை அச்சுக்குச் செல்லும் வரை ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கை பெரும் புயலாக வீசிக்கொண்டுள்ளது.

இவ் இராணுவச் சாதனையானது புலிகளின் மரபு வழிச் சமர் ஆற் றலை வெளி உலகிற்கு வெளிப்படுத் தியதுடன் பெரும் இராணுவ வளங் களை ஈட்டிக்கொடுத்தது.

இச் சமரில் அகப்பட்ட சிங்களப் படை தன் கட்டுமானத்தை இழந்தது. சிறீலங்காவின் வன்னிக்கான தலை மைத் தளபதியாக விளங்கிய மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா தூக்கி வீசப்பட்டார். 6 மூத்த தளபதிகளை வன்னிக்கு புதிதாக அனுப்பி உடை வடைந்து சென்ற இராணுவ கட்டு மானத்தை சிறீலங்கா பாதுகாக்க முற்பட்டது. தரைப்படைத் தளபதி களும் வவுனியாவில் பல இரகசிய மாநாடுகளை நடத்தியபடியிருக்க வன்னியில் புலிகள் நகரங்களை தொடர்ச்சியாக மீட்டுவந்தனர்.

இச் சமரானது சிங்கள படை யினர் மத்தியில் பீதியையும் தப்பி யோடும் மனோநிலையையும் ஏற் படுத்தியது. இரு இராணுவப் பொலி சார் தப்பியோடிய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். சிங்கள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிங்களப் படைகளை ஒன்றுபட்டு இருக்குமாறு கோரினர். தொடர் இராணுவ இழப்புக்கள் பீதியை ஏற்படுத்துவதால் செய்தித் தணிக்கையை எதிரி அரசு அமுல் படுத்தியது.

தொடரும் இப் போர் நடவடிக் கைகளும் தமிழீழ விடுதலைப் போரின் இராணுவ பரிணாமத்தை வெளிக் காட்டும் பெரும் சாதனைகளாக விளங்குகின்றன.

இன்று தமிழர்களின் இராணுவம் மரபுவழி சமரை நுட்பமாக நடாத்தும் போராற்றல் கொண்டதாய் உலக அரங்கில் வியக்கப்படுகின்றது. பீரங் கிப் படைகளும் கவச வாகனப் படைப் பிரிவுகளும் போரை முன்னெடுத்து பிரதேசங்களை விடுவித்துவருகை யில் மக்கள் போரின் பின்னரங்கங் களை பாதுகாக்கின்றனர். புலிகளின் போர் ஆற்றல் ஒரு எல்லைக்கு அப் பால் செல்லமுடியாமைக்கு ஆட்பலம் ஒரு காரணமாய் அமையும் என உலக இராணுவ விற்பன்னர்கள் ஊகம் கூறிவருகையில் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய எல்லைக் காவல்படை புலிகள் போர் நகர்வு களின் பின்னே பெரும் துணைச் சக்தியாக நிற்கின்றது.

இன்று போரின் இராணுவச் சமநிலை தமிழர்களுக்கு சாதகமாக திரும்பியுள்ளது. அதிகரிக்கப்பட்ட ஆயுதபலம், ஆட்பலம் என்பவற் றுடன் பெரும் மனோபலமும் அனு பவமும் பெற்ற புலிகள் பலவீனப் படுத்தப்பட்டு சிதைந்து கிடக்கும் எதிரியை எதிர்கொள்கின்றனர்.

சிங்கள அரசு தமது சர்வதேச பின்னணி மூலம் நவீனரக உயர் தொழில்நுட்ப ஆயுதங்களை கொள் வனவு செய்து போரை நடாத்த முயல்வர். போர்க்களத் தோல்வி களை சில தளபதிகள் மீது போட்டு மீள சிங்கள இராணுவ கட்டு மானத்திற்கு மனோபலம் திரட்ட முற்படுவர். எனினும் தமிழீழ தேசியத் தலைவரின் போர் வியூகமானது இவ் ஊகங்களையும் உள்வாங்கி தீர்க்க மானதாய் எழும்!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓயாத அலைகள் 3

# மணலாறு! மீட்கப்படும் இதயபூமி

**வெ**லியோயா (மணலாறு) இராணுவ ரீதியாக முக்கியமானது. நாங்கள் இங்கு இருப்பது வடக்கையும் கிழக்கையும் இணைய அனுமதிக்காது. நாங்கள் இங்கு இருக்கும் வரை பயங்கரவாதிகளால் ஈழத்தை வெல்ல முடியாது. நாங்கள் போனால் பதவியா, கெப்பிட்டிகொலாவ என்பனவற்றிற்கு ஆபத்து ஏற்படும். அனுராதபுரம் கூட அச்சுறுத்தப்படும்.

– பிரிகேடியர் கிரான் கெலன் கொட, சிங்கள தளபதி–

ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை தமிழீழத்தின் இதயபூமி என வர்ணிக்கப்படும் மணலாற்றின் ஒரு பகுதியை மீட்டுள்ளது. இராணுவ – அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக இது வரலாற்றில் பதியப்படும். சிங்களத்தின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு போர் மூலோபாயத்தை கூறி வைத்துள்ள இவ் இராணுவ நடவடிக்கை தமிழீழ போராட்டத்தின் பலம் மிக்க ஒரு நடவடிக்கையாகும்.

வட – தென் தமிழீழப் பிரதேசங்களை இணைக்கும் புவியியல் பாத்திரத்தை மணலாறு வகிக்கின்றது. 1980 களின் ஆரம்பத்தில் ஜே.ஆர் அரசின் அரசியல் இராணுவ திட்டமிடல்களிற்கு ஏற்ப இவ் பிரதேசத்தை சிங்களம் பறிக்க முற்பட்டது. அன்றைய இராணுவ அமைச்சர் லலித் அத்துலத் முதலி மணலாற்றை விட்டு தமிழர்களை விரட்டினர். இவருக்கு துணையாக காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்க, கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியு, மாவலி அபிவிருத்தி சபையின் தலைவர் பண்டிதரட்ண ஆகியோர் செயற்பட்டனர்.

வடமேற்கே நெடுங்கேணி, தென் மேற்கே பதவியா, வடகிழக்கே கொக்கிளாய், தென்கிழக்கே தென்னமரவாடி ஆகியவற்றை எல்லையாகக் கொண்ட சிறப்பு பிரதேசமாக லலித் கும்பல் மணலாற்றை தனிமைப்படுத்தியது. இதற்கு வெலியோய என பெயர்சூட்டப்பட்டது. 1988–ல் சட்டபூர்வமாக மணலாறு வெலியோயா வாக பெயர்சூட்டப்பட்டது. 42 தமிழ்க் கிராமங்கலைச் சேர்ந்த 13 288 குடும்பங்களை 48 மணிநேரத்தில் விரட்டியடித்து சிங்கள சிறைக் கைதிகள் குடும்பம் குடும்பமாக அழைத்து வரப்பட்டனர். மணலாற்றில் பண்ணைத் திட்டங்களில் ஈடுபட்டிருந்த 14 தமிழ் நிறுவனங்கள் விரட்டியடிக்கப்பட்டன. ஒதியமலைக் கிராமத்தில் 29 தமிழர்களை சிங்கள இராணுவம் படுகொலை புரிந்து, 72 மில்லியன் ரூபாய்களை செலவிட்டு வெலியோயாவை(?) சிங்கள அரசு அபிவிருத்தி செய்தது. இப்பிரதேசத்தை பாதுகாக்க சிங்களம் தன் சிறப்பு படைகளை பாவித்தது. வடக்கு மீதான இராணுவ நடவடிக்கைகளும் ஒரு பின்தளமாக இருப்பமற்கு மணலாறு தயார் செய்யப்பட்டது. 6–ற்கு மேற்பட்ட முகாம்களும் பல துணைமுகாம்களும் நிறுவப்பட்டன. சிங்கள இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜனாக பெரேரா இங்கு நிலைகொண்டு சிங்களத்தின் இராணுவ அரசியல் திட்டத்தை வழிநடத்தினார்.



மணலாற்றில் பெறப்பட்ட வெற்றியானது எமது தேசிய தலைவரின் போர் வியூகத்தின் நுட்பத்தைக்காட்டுகின்றது. ஒரு முக்கிய பிரதேசத்தை மிக திட்டமிட்ட முறையில் மீட்டெடுத்ததன் மூலம் சிங்களத்தின் முழு இராணுவ அரசியல் திட்டங்களுக்கும் தலைவர் ஒரு 'செக்' வைத்துள்ளார்.

தமிழீழ தேசிய தலைவர் இவ் சிங்கள திட்டங்களை தெளிவாக இனம் கண்டிருந்தார். மணலாற்றை இதய பூமி என்றுதான் தலைவர் வர்ணித்து வந்துள்ளார். இங்கு அமைந்திருந்த இராணுவ முகாமை புலிகள் தாக்கியழித்தனர். எனினும் தொடர்ச்சி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யான பலப்படுத்தல் மூலம் சிங்கள அரசு மணலாற்றை முற்றாக கபளீகரம் செய்ய முற்பட்டது. இப்பிராந்தியத்தில் 20 000 மேற்பட்ட ஆயுதம் தரித்த இராணுவத்தினரையும் ஊர் காவல் படையினரையும் சிங்களம் குவித்து வைத்திருந்ததாக கூறப்படுகின்றது. 1997–ல் ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் போது செய்தியாளர்களைச் சந்தித்த சிங்கள மேஜர் டீ. வீரசிங்க தாம் ஜெயசிக்குறுய் மூலம் பெற்ற வெற்றியால் வெலியோயவை முற்றாக பாதுகாத்துவிட்டதாகவும் இனிமேல் வெலியோயவை ஒரு 2–ம் லெப்ரினன்ட்டால் பாதுகாக்க முடியும் எனவும் கூறினார்.

இவ்வாறு பாதுகாக்கப்பட்ட இராணுவ வலயத்தை புலிகளின் படைப்பிரிவு ஊடறுத்து தாக்கியது. நெடுங்கேணியூடாக நுழைந்து சிலோன் தியேட்டர் முகாம் உட்பட பல முகாம்களையும் இராணுவ நிலைகளையும் அழித்த புலிகள் மணலாற்றின் ஒரு பகுதியை மீட்டெடுத்தனர். மணலாற்றில் குடியமர்த்தப்பட்ட சிங்களவர்கள் பதவியா ஊடாக தமது சொந்த இடங்களுக்கு செல்ல தொடங்கினர். இராணுவ நிலைகளை பின்னே தள்ளியவாறு புலிகள் நில மீட்பு சமர் ஒன்றினை புரிந்துள்ளனர்.

இன்று மணலாற்றின் எஞ்சிய பகுதிகளைப் பாதுகாப்பதற்காக தென் தமிழீழத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தினை இங்கு எதிரி அரசு நகர்த்தியுள்ளது. அனுராதபுரம், திருமலை நகர்களில் உள்ள சிங்கள இராணுவ நிலைகளை புலிகள் தாக்கிவிடுவார்கள் என்ற அச்சமே இதற்கு உடனடிக் காரணம் எனச் சொல்லப்பட்டாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய புவியியல் – அரசியல் – இராணுவ நிலையொன்றை காப்பாற்ற எதிரி எடுக்கும் இறுதி முயற்சி இது.

மணலாற்றில் பெறப்பட்ட வெற்றியானது எமது தேசிய தலைவரின் போர் வியூகத்தின் நுட்பத்தைக்காட்டுகின்றது. ஒரு முக்கிய பிரதேசத்தை மிக திட்டமிட்ட முறையில் மீட்டெடுத்ததன் மூலம் சிங்களத்தின் முழு இராணுவ அரசியல் திட்டங்களுக்கும் தலைவர் ஒரு 'செக்' வைத்துள்ளார்.

# ஓயாத அலைகள் 3

## சந்திரிகாவின் சிதைந்த போர்க்கனவு!

அரசின் இராணுவ கொள்கை வகுப்பாளர்கள் 16 வருடப்போரில் இராணுவத்திற்கு ஏற்பட்ட மிக மோசமான தோல்வியுடன் சிக்கல் பட்டுக் கொண்டிருக்கும் போது டிசம்பர் 21–ல் இடம்பெறவுள்ள தேர்தல்களில் இவ் படுதோல்வியால் தனக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் என்ன என அளவிட்டுவருகின்றார்.

–ஏசியா வீக் நவம்பர் 1999–

சந்திரிகா அரசு தமிழர்களின் விடுதலைப் போரை நசுக்குவதற்கு போரே சரியான தீர்வு என தன் பரப்புரைகள் ஊடாக உலகை நம்ப வைத்தது. போர் மூலம் சமாதானம் என்ற சுலோகத்தின் மறைவில் சிங்கள அரசு பெரும் இனப்படுகொலையைப் புரிந்த போதும் போர் மூலம் புலிகளை வென்றால் மட்டுமே சமாதானம் சாத்தியமாகும் என உலகிற்கு கூறப்பட்டது. இவ் திட்டத்திற்கு ஏற்புடைய இராணுவ உதவிகள் பெறப்பட்டன. அமெரிக்க அரசு தமிழர்களின் விடயத்தில் சந்திரிகாவின் போர் – படுகொலை நடவடிக்கைகளுக்கு துணைபோனது.

பெரும் இராணுவ தளபாடக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. தளபதிகள் மேற்கத்தைய போர் நுட்ப கல்விகளைப் பெற்றனர். போரை முடிவுக்கு கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையில் பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் ஓயாத அலைகள் 1–ம் 2–ம் இவ் போரை வெல்லலாம் என்ற சந்திரிகாவின் பரப்புரையை சந்தேகத்திற்குரியதாக்கியது. ஓயாத அலைகள் 3 நடவடிக்கை சந்திரிகாவின் இராணுவ பலத்தை மட்டும் அல்ல போரிற்காக அவர் கட்டியெழுப்பிய பரப்புரைகலை தோல்விபெறச் செய்துள்ளது.

போரின் மூலம் தமிழர்களின் இராணுவ – அரசியல் நலன்களை நசுக்கலாம் என்ற கோட்பாட்டை ஓயாத அலைகள் செல்லுபடியற்ற தாக்கிய அதேவேளை போரின் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டு தமிழர்களின் சார்பாக அது திரும்புவதை





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவதானிக்க முடிவதை உலக ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். அமெரிக்க ஹவாட் பல்கலைக்கழக பேராசிரியரும் உலக சமாதான நிறுவனம் எனக் கூறப்படும் ஒரு அமைப்பின் தலைவவுமான றொபேர்ட் நுட்போ என்பவர் பொஸ்டன் குளோப் ஏட்டின் எழுதிய ஆய்வில் இவ் இடைவெளியை மறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளார். சிங்கள அரசின் தீவிர ஆதரவாளரான அவர் போரின் போக்கை தடுத்து நிறுத்தி சிங்கள இராணுவத்தை பலப்படுத்தும் அதே வேளை புலிகளை பலவீனப்படுதேத அமெரிக்கா, பிரித்தானியா என்பன உழைக்க வேண்டும் எனவும் போரின் போக்கு மாற்றம் கண்ட பின்னர் நோர்வே போன்ற நாட்டின் உதவியுடன் மத்தியத்துவம் மேற்கொள்ளப் படவேண்டும் எனவும் கூறியுள்ளார். சந்திரிகாவின் போர் வியூகம் உடைவடைந்துவிட்டதால் புதியதொரு வியூகம் ஏற்படுத்த வேண்டும் என்பதே அவரது வேண்டுதல் ஆகும்.

ஓயாத அலைகள் நடவடிக்கை சிங்களத்தின் அரசியல் – இராஜதந்திர தன்னம்பிக்கை மீதும் பெருத்த அடியை கொடுத்துள்ளது. உலக சமூகம் மத்தியில் அதீத கூக்குரல் இடும் வெளிவிவகாரக் கொள்கையையும் தமது நாட்டுக்குள்ள இறைமையை பெரும் புனித கொடை போல் பாவனைபண்ணிய கதிர்காமரின் வெளிவிவகார அமைச்சு ஓயாத அலைகள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தால் நிலைகுலைந்து போயுள்ளது. போர் மூலம் சமாதானம் என்ற பரப்புரையையும் தலையீடு தேவையில்லை என்ற பரப்புரையையும் தூக்கிப் பிடித்து தலையில் வைத்தாடிய வெளிவிவகார அமைச்சு போர் மூலம் சிங்களம் ஒன்றுமே சாதிக்கமுடியாது என்ற உண்மையை புலப்பட்ட நிலையில் செயலிழந்து போயுள்ளது. உலகம் பூராவும் புகலிடத் தமிழர்களை குறிவைத்து தாக்கிப் பயணம் செய்த சிங்கள வெளிவிவகார அமைச்சர் இன்று மாவீரர் நாள் 99–ல் உலகம் பூராவும் ஏற்பட்ட எழுச்சியைப் பற்றி வாயே திறக்கவில்லை. ஓயாத அலைகள் நடவடிக்கை மூலம் ஒரு வெளிவிவகாரத் தோல்வியை தலைவர் சிங்கள அரசுக்கு கொடுத்துள்ளார்.

**மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் வேண்டாம், புலிகள் ஆயுதங்களை கீழே போடவேண்டும், நிபந்தனையுடன்தான் பேசுவோம் என கூக்குரல் எழுப்பியவர்கள் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் சகஜநிலை தோன்றிய பின்னர் தீர்வு பற்றிப் பேசலாம் என எமது தேசிய தலைவர் வகுத்த நிகழ்ச்சித் திட்டத்தில் இயங்கவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுவிட்டனர்.**



சந்திரிகாவின் உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகள் இராணுவ வெற்றியின் பிடியில் இருந்தது. தன்னை சிங்கள போர் வெற்றியின் கதாநாயகியாக சந்திரிகா கற்பனை பண்ணினார். அடுத்த தேர்தலில் தன்னை சிங்கள் மக்கள் ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு சந்திரிகா போரைக் காரணம் காட்டினார். இன்று நிலவரம் தலைகீழாகிவிட்டது. ஓயாத அலைகள் அவரது கணிப்பை பொய்யாக்கிவிட்டது. போரை வெல்ல அவரால் முடியாது என சிங்களம் புரிந்துகொண்டது.

இவ்வாறு 5 வருட காலத்து அரசியல் – இராஜதந்திர சாதனைகள் அனைத்தையும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கை கேலிக்குரிய தாக்கியது. பேச்சுவார்த்தை பற்றிய புதிய கருத்துக்களை ஓயாத அலைகள் 3–ன் எதிரொலியால் வெளிவிடப்படுகின்றன. மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் வேண்டாம், புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும், நிபந்தனையுடன்தான் பேசுவோம் என கூக்குரல் எழுப்பியவர்கள் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் சகஜநிலை தோன்றிய பின்னர் தீர்வு பற்றிப் பேசலாம் என எமது தேசிய தலைவர் வகுத்த நிகழ்ச்சித் திட்டத்தில் இயங்கவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு விட்டனர்.

**– நாதன் –**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓயாத அலை, மூன்று

இருட்டித்திமிருடைத்து எழும் எமது
ஒளிச்
சுழிப்பில்
கூசிக்
கசிகிறது சந்திரிகையின்
சீழ்

பட்டிப்
படல் தெறிக்கச் சிதறும்
மந்தைகளின்
புழுதி ஒவ்வாமையில் அட
காற்றுக்கும்
வாந்தி

ஆண்டுகள் இரையெடுத்து
நெளிந்து
நீண்ட
பாம்பின் தலையை
நாட்களின் குதிகாலால் 'நச்'சென
நசுக்கிச்
சிதைத்த எம் தலைவரின்
தெளிவில்
குழம்பித் திகைக்கும்
யுத்த
யுக்தி

சூரழித்து வெறியாடும்
வேல்
குளிரப் பூச்சொரிந்த
வானூர்தி
ஓய்வெடுக்கும் முருகப்
பசிநாள்
ஆயுதங்கள் விழுங்கி ஏப்பம்
விடுகின்றன
பேரப்
புலிகள்

மருத்துவச்சிக் கைவாகில்
உடையச்
சம்மதித்தாயிற்று ஆம் ஆம் ஆம்
ஈழப்
பனிக்
குடம்

எங்கெங்கோ இரைந்து கிடக்கும்
உறவுகளின்
தூக்கம் கெடாத கனவுகளுக்குள்
நுழைந்து
நுழைந்து மெல்ல வருடி, தாய்நிலத்துப்
பனைச்சிலுப்பில் நிலாகுடிக்க
ஆயத்தமாகச் செல்லும்
மாவீரர் தம் ஓயாத அலை

அறிவுமதி





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலை...

## பேச்சுவார்த்தை மூலமா...? யுத்தத்தின் மூலமா...?

ஓயாத அலைகள் மூன்று இரா ணுவ நடவடிக்கை, சிங்களத் தின் ஆக்கிரமிப்புக் கனவின் மைய நிலையை கசக்கி அழித்துவிட்டது. இனி,சிங்களம் இத்தகு கிறுக்குத் தனமான இராணுவ ஆசைகளை கனவில்கூட சிந்திக்குமா? என கேட் கத் தோன்றும் விதமாய் பலத்த அடி வழங்கப்பட்டிருக்கின்றது. அமெ ரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளில் பயிற்சி பெற்று அனுபவமும் இரா ணுவ அறிவும் வாய்க்கப் பெற்றவர் களாக களம் இறங்கிய படையதிகாரி களின் திட்டங்கள் படை நடத்து கைகள் யாவும், புயலடித்த வேகத் தில் தவிடுபொடியாகியுள்ளது. இரண்டு வருடங்களுக்கு மேலாக ஆயிரக் கணக்கான இராணுவத்தினரை உயிர் விலை கொடுத்து ஏராளமான ஆயு தங்கள், இராணுவத் தளபாடங்களை இழந்து சிங்களப் படையினர் அங் குலம் அங்குலமாக அரக்கி அரக்கி ஆக்கிரமித்த நிலப்பரப்பை விடுத லைப் புலிகள் ஒரே வாரத்தில் முற் றாக மீட்டுள்ளனர் என்பது மாபெ ரும் இராணுவச் சாதனை அன்றி வேறென்ன. சிங்களத்தின் இராணு வத் தனமான மதர்ப்புத் தோற்றம் துகிலுரியப்பட்டு வெறும் அப்பிரா ணியை அடிவாங்கி ஓய்ந்து ஒடுங்கிப் போய் இருக்கும் பரிதாபத்தில் சிங் களம்.

இதில் வியப்பிற்குரிய விடயம் என்னவென்றால் கடந்த வருடங்க ளில் நடைபெற்ற தேர்தல்களின் வெற்றிக்குத் தோதாக பல குறியீட் டுப் பெயர்களுடன் பல கட்டங்க ளாக சிறீலங்கா அரசு பல இராணுவ நடவடிக்கைகளை நடத்தி முடித்தி

**சிங்களத்தின் தேர்தல் வெற்றிக்கு தமிழர்கள் வதைக்கப்படவும் தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படவும் வேண்டும் என்ற சிங்களத்தின் பேரினவாதத்தின் வினோதமான கொடூரமான ஆசைகளுக்கு சாவுமணி அடிக்கின்ற நாளை தலைவர் எதிர்பார்த்திருந்தார்.**





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருக்கின்றது. பெரும் நிலப்பரப்பை ஆக்கிரமித்திருந்தது. தனது தேர்தல் பிரச்சாரத்தின் பிரதான கருத்தாக, விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டு வருகிறார்கள், அவர்கள் வசமிருந்து இத்தனை சதுரக் கிலோமீற்றர்களை கைப்பற்றியுள்ளோம், இங்கு கைப்பற்றினோம், அங்கு கைப்பற்றினோம் என்ற கதையளப்புக்களாகவே இருந்தன.

ஆனால் சிங்களத்தின் பரிதாபம் என்னவென்றால் சிறீலங்கா ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் அதன் பிரதான முக்கியமான ஜனாதிபதித் தேர்தலுக்கு சற்று முன்னதாக மிக மோசமாக அடிவாங்கியுள்ளது. இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு திகதி அறிவிப்பதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னதாகக் கூட முப்படைத் தளபதிகளை அழைத்து, உயர்மட்டப் பாதுகாப்பு மாநாட்டை நடாத்திய சந்திரிகா பெரும் இராணுவ வெற்றி ஒன்றை பெற்றுத் தருமாறு கட்டளை இட்டிருந்தார்.

தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டாகிவிட்டது. பொது மக்களின் பிரச்சினையில் தான் முன்பு வழங்கிய வாக்குறுதிகளை சரிவர நிறைவு செய்யாத சந்திரிகா தனது தேர்தல் வெற்றிக்கு இராணுவ வெற்றி ஒன்றின் துணையை நாடிக் காத்திருந்தார். ஆனால் தமிழீழத் தேசியத் தலைவரோ இவ்விதமான வியாதிகளுக்கு ஓரேயடியாக மருந்தைக் கொடுத்து சுகப்படுத்திவிட கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார்.

சிங்களத்தின் தேர்தல் வெற்றிக்கு தமிழர்கள் வதைக்கப்படவும் தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படவும் வேண்டும் என்ற சிங்களத்தின் பேரினவாதத்தின் வினோதமான கொடூரமான ஆசைகளுக்கு சாவுமணி அடிக்கின்ற நாளை தலைவர் எதிர்பார்த்திருந்தார்.

ஓயாத அலைகள் மூன்று தலைவரின் உள்ளத்தில் கருவாகி உருவாகி குமுறிக்கொண்டிருந்தது. அதற்குரிய நாளில் அதற்குரிய நேரத்தில் அதற்கே உரித்தான வேகத்தில் அதன் இலக்குகள் ஒவ்வொன்றாக தாக்கியழித்தபடி ஓயாத அலைகள் மூன்று வன்னி மண்ணின் மையப்பரப்பிலிருந்து புறப்பட்டது. சிங்களத்தின் எல்லைப் பகுதி நோக்கி அது தன் இலக்குத் தேடி முன்னேறுகின்றது.

சந்திரிகா அரசின் இந்தப் பரிதாபத்திற்குரிய நிலை தமிழகக் கவிஞர் ஒருவரின் கவிதை வரிகளை ஞாபகப்படுத்தக்கூடும்.

பட்டுவேட்டி பற்றிய கனவில் இருந்தபோது

கட்டியிருந்த கோமணமும் களவாடப்பட்டது.

இதுதான் அக்கவிதை வரி. இதற்கு



**ஓயாத அலைகள் மூன்று தலைவரின் உள்ளத்தில் கருவாகி உருவாகி குமுறிக்கொண்டிருந்தது**

முழுமையாக ஒத்துப் போகின்ற விதமாகவே சந்திரிகா அரசின் இன்றைய நிலை உள்ளது. சந்திரிகா அரசு தேர்தல் வெற்றிக்காக சிறிய இராணுவ வெற்றி ஒன்றை எதிர்பார்த்திருக்க அதன் முன்னைய வெற்றிகளையும் விழுங்கி அதனையும் மீறி விடுதலைப் புலிகள் தமிழர் தாயகப் பிரதேசத்தை மீட்டெடுத்துள்ளனர்.

இப் பெரும் வெற்றியின் திளைப்பில் தமிழீழ மண்ணும் மக்களும் இருக்கின்ற போதும் இச் சந்தர்ப்பத்தில் கூட தமிழீழத் தேசியத் தலைவர் சமாதானப் பேச்சுக்கு சிங்களத்தை அழைத்திருக்கின்றார். சமாதானத்தின் பேரிலான அக்கறையை வெளிப்படுத்தியிருக்கின்றார். அதற்கு அடையாளமாக மாவீரர் நாளின் போது யுத்தக் கைதிகளாக இருந்த ஏழு இராணுவத்தினரை விடுதலை செய்ய பணித்திருக்கின்றார்.

இதனை சிங்களம் எவ்வகையில் கையாளப்போகின்றது என்பது கேள்விக்குறி. மக்கள் பிரச்சனை குறித்தோ, தீவின் பிரச்சனை குறித்தோ அலட்டிக்கொள்ளாத சந்திரிகா அரசு தேர்தல் பிரச்சனை குறித்தே அக்கறைப்படுகின்றது.

என்னதான் வரலாற்றில் என்றுமே இல்லாத வகையில் இராணுவத் தோல்வியும் இராணுவ அவமானமும் வந்து சேர்ந்துள்ள போதும் இராணுவப் பாதையைக் கைவிட்டு சமாதானப்பாதையை கையாளப் போவதாக அறிவிக்க சந்திரிகா தயாராக இருப்பார் என எதிர்பார்க்கமுடியாது. இராணுவ ஆக்கிரமிப்பு அகன்ற பொருளாதாரத் தடை, பிற தடைகள் அழுத்தங்களின்றி இயல்பான நிலை ஒன்று ஏற்படுத்தப்பட்டு மூன்றாந் தரப்பு மத்தியத்துவத்துடன் பேசலாம் என தமிழீழத் தேசியத் தலைவர் அறிவித்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் எனவும், விடுதலைப் புலிகள் ஒடுக்கப்படவேண்டியவர்கள் எனவும், அவர்களை ஒடுக்க இன்னும்

**– சுப்பு –**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பட்டுவேட்டி பற்றிய கனவில் இருந்தபோது கட்டியிருந்த கோமணமும் களவாடப்பட்டது.





சொற்ப காலம் போதும் எனவும் கதையளந்த சிங்கள அரசு எந்த முகத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேசப்போவதாக அறிவிக்கும். சிங்களத்தால் பொய்யான கருத்துக்கள் ஊட்டப்பட்டு, யுத்தம் தொடர்பான பிழையான கருதுகோள்களுடன் பிரமையான உலகத்தில் சஞ்சரித்த சிங்களப் பேரினவாதிகளே சந்திரிகா அரசு, எப்படி சமாதானம் செய்யும்.

ஆக யாவும் சிக்கலாய்ப் போய் விட்டது. சிங்களத்திற்கு ஒவ்வொரு இராணுவ வெற்றிகளையும் தளபதிகளே உச்சி மோந்து சுய பாராட்டும் செய்துகொண்ட சந்திரிகா அரசு இப்போதைய இராணுவத் தோல்வியை யாராவது சிலரின் தலையில் கட்டிவிட முயற்சிக்கின்றது. ஒட்டிசுட்டான், நெடுங்கேணியை விடுதலைப் புலிகள் மீட்ட கையுடன் அவசரஅவசரமாக இராணுவத் தளபதி வவுனியா சென்றார். முக்கியமான தளபதிகள் வவுனியா அனுப்பப்பட்டனர். அங்கு கட்டளை அதிகாரிகளாக இருந்த சிலர் மீது தோல்விக்கான காரணத்தை சுமத்திவிட்டு மேற்கொண்டு தோல்விகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டாகிவிட்டது என சந்திரிகா அறிவித்தார்.

ஆனால் ஓயாத அலைகளில் ஒவ்வொன்றாக சிங்களத்தின் பலம் வாய்ந்த தளங்கள், முகாம்கள் வீழ்ந்தவண்ணம் இருந்த போது சிங்களத்தின் வீரதீர பராக்கிரமம் நிறைந்த தளபதிகளால் வவுனியாவிலிருந்து தமது தோல்விகளை கணக்கிடத்தான் முடிந்தது.

இராணுவம் தற்போது போரிட அஞ்சுகின்றது. அது ஓடித் தப்பவும், சரணடையவும் முற்படுகின்றது. இப்பெரும் நிலப்பரப்பை விடுதலைப்புலிகள் மிகக் குறுகிய காலத்தில் மீட்டிருப்பதானது, அடிப்படையில் சிங்களப் படையினர் மனோதிடத்தை தவிடுபொடியாக்கி இருக்கும். அதன் கட்டமைப்பு குலைந்து எதிர்த்து நின்றுபோரிடும் ஆற்றல் மறைந்து, மரபு இராணுவத்திற்குரிய எந்தச் சிறப்பு அம்சங்களும் இன்றி அது பலவீனப்பட்டுப்போய்விட்டது

**தமிழீழத் தேசியத் தலைவர் வலியுறுத்திய இயல்பு நிலையை ஏற்படுத்தி மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்துடன் விடுதலைப்புலிகளுடன் சிறீலங்கா அரசு பேசப்போகின்றதா? அல்லது தொடர்ந்து போர்ச் சூழலை பாதுகாத்தபடி தானே அழிந்து தமிழீழ உருவாக்கத்திற்கு அக, புற சூழ்நிலைகளைத் தோற்றுவித்து உதவப் போகின்றதா? இதில் ஏதோ ஒன்றை தேர்வு செய்யவேண்டிய கட்டாயம் சிங்களத்திற்கு.**

என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக மிகப் பெரும் வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றனர். இராணுவ சம பலத்தில் விடுதலைப்புலிகளின் கை ஓங்கியுள்ளது. பலம் வாய்ந்த இராணுவ இயந்திரத்தை வைத்துக்கொண்டே இத்தனை காலமும் தமிழர்பூமியை ஆக்கிரமித்து இன அழிப்பை புரிந்து வந்த சிங்களம் தற்போது தனது இராணுவக் கரங்கள் பலவீனப்பட்டுப்போயிருப்பதை வேறு வழியின்றி உணரவே வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் வலியுறுத்திய இயல்பு நிலையை ஏற்படுத்தி மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்துடன் விடுதலைப்புலிகளுடன் சிறீலங்கா அரசு பேசப்போகின்றதா? அல்லது தொடர்ந்து போர்ச் சூழலை பாதுகாத்தபடி தானே அழிந்து தமிழீழ உருவாக்கத்திற்கு அக, புற சூழ்நிலைகளைத் தோற்றுவித்து உதவப் போகின்றதா? இதில் ஏதோ ஒன்றை தேர்வு செய்யவேண்டிய கட்டாயம் சிங்களத்திற்கு.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது தாயகத்து உண்மை நிலைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்கவேண்டும்



கடந்த பல தசாப்தங்களாகச் தமிழருக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளும் அட்டூழியங்களும் அத்தாட்சிப் பத்திரங்களோடும், புள்ளிவிபரச் சான்றுகளோடும் சர்வதேச உலகிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஈழத்தமிழர்களின் மீது இனவழிப்புப் பரிமாணத்தில் ஒடுக்குமுறை நிகழ்ந்து வருகின்றது என்பதை உலக மனித உரிமை நிறுவனங்கள் எடுத்துக் கூறி வந்திருக்கின்றன. காலம் காலமாக தமிழ் மண்ணில் சிங்களப் பேரினவாதம் நிகழ்த்திவரும் ஊழிக்கூத்தினால் அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் அழிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் சர்வேதச உலகம் அறியாததல்ல. அத்தோடு, நீண்ட காலமாக எமது தேசத்தில் நிகழ்ந்து வரும் போரின் போக்குப்பற்றியும், இருதரப்பினரும் கையாண்டுவரும் போரியல் தந்திரோபாயங்கள்,உத்திகள் பற்றியும் உலக இராணுவ நிபுணர்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள் என்பதும் எமக்கு தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழருக்கு எதிராக இழைக்கப்படும், கொடுமைகளின் கண்கண்ட சாட்சிகளாக எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்கள் உலக நாடுகள் எங்கும் தஞ்சம் புகுந்து வாழ்கிறார்கள். இந்த உண்மையை உலக சமூகம் அறியும். அப்படியிருந்தும் தமிழீழ மக்கள் அனுபவித்து வரும் பேரவலம் உலகத்தின் புருவத்தை உயர்த்தவில்லை என்பது எமக்கு ஒருபுறம் ஆச்சரியமாகவும், மறுபுறம் வேதனையாகவும் இருக்கிறது. இன்றைய உலக ஒழுங்கில் ஒவ்வொரு நாடும் தனது சொந்த தேசிய அபிலாஷைகளிலும் வர்த்தக நலனிலும் அக்கறை கொண்டு செயற்படுகிறது என்பது எமக்குத் தெரியாததல்ல. எனினும் மனித உரிமை, மனித சுதந்திரம் என்ற பொதுமையான விழுமியங்களுக்கு நாகரீக உலகம் முதன்மை கொடுக்கத் தவறவில்லை. இந்த நாகரீக உலகத்திற்கு தலைமை தாங்கும் நாடுகள் சிறீலங்காவில் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்படும் அநாகரீகமான ஒடுக்குமுறைக்கு எதிராக குரலெழுப்பத் தயங்குவது எமக்கு துயரத்தைத் தருகின்றது. எனினும் நாம் மனம் தளர்ந்து போகவில்லை. என்றோ ஒரு நாள், தமிழீழத்தின் புதைகுழிகளுக்குள் மூடப்பட்டு உறங்கும் உண்மைகள் வெளிவரத்தான் செய்யும். அவ்வேளை சிங்களப் பேரினவாதத்தின் முகமூடி கிழியும். அப்போது எமது மக்களின் சோகக் கதை உலகத்தின் இதயத்தை உலுப்பும். அதுவரை அனைத்துல்கமெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் உலகத்தின் மனச்சாட்சியை உறுத்தும் வகையில், தாயகத்து உண்மை நிலைகளை சர்வதேச சமூகத்துக்கு இடித்துரைத்து வரவேண்டும்.

*(1998 மாவீரர் நாள் உரையிலிருந்து)*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனஅழிப்பின் மடுத்திருப்பதிப்

**சர்வதேசம் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதினால் மீண்டும் ஒரு மனிதத்துவக் கொலையினை மடுவில் உலகு தரிசிக்கின்றது**




1999–ம் ஆண்டு கார்த்திகை 20 –ம் நாள் மற்றொரு இனஅழிப்பை உலக வரலாற்றில் பதிவாக்கி கொண்டது. சிறீலங்கா அரசாங்கம் நடாத்தி வரும் இனஅழிப்பு நோக்கிலான யுத்தத்திலிருந்து தமது உயிரையும் தம் பிள்ளைகளின் உயிர்களையும் பாதுகாக்கவென மருதமடுத் திருப்பதியில் தஞ்சம் அடைந்து இருந்த அப்பாவித் தமிழீழ மக்கள் மேல் சிறீலங்கா அரசாங்கப் படைகள் ஏவிய குண்டு விழுந்து வெடித்ததில் தலத்திலேயே 37 பேர் கொல்லப்பட 60 பேர் வரை காயப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் இப்பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை மேலும் எட்டுப்பேர் இறந்துள்ளமையால் இச்சம்பவத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்துள்ளது. இந்த சம்பவம் யுத்தத்தால் ஏற்பட்ட சம்பவமல்ல. சிறீலங்கா அரசாங்கத்தின் தமிழின அழிப்பு நடவடிக்கையின் மற்றொரு வடிவம். 2 வயது குழந்தை முதல் 65 வயது முதியவர் வரை பல்வேறு வயதுகளில் உள்ள தமிழர்கள் இந்தக் கொடிய தாக்குதலில் சிறீலங்காவால் அழிக்கப்பட்டனர். ஒரு தாயின் 4 குழந்தைகளும் பலியான கொடுமை – ஒரு குடும்பத்தின் கிட்டிய உறவினர்கள் எட்டு பேர் கொல்லப்பட்ட பரிதாபம் – போன்ற எத்தனையோ சோக நிகழ்வுகளை சுமந்து நிற்கிறது இந்தச் சம்பவம். எமது சகோதரர்கள் துடிதுடித்துச் சாவதையும் பரிதவித்து வாழ்வதையும் கண்டு புலம்பெயர் தமிழர்களாகிய எமது நெஞ்சங்கள் தாங்கொணா வேதனையடைகின்றன. தங்கள் சொந்தங்களை இழந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உச்சக்கட்டம் படுகொலைகள்

தவிக்கும் ஒவ்வொருவருக்கும் ஆறுதல் கூறுவதுடன் காயங்களுக்கு மருத்துவ சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் குணமாகி வீடு திரும்பிட வேண்டுமென ஆசிக்கின்றோம்.

## இன்றைய உலகின் மனச்சாட்சிக்கு சவால்

மனித உரிமைகளே ஒரு நாட்டில் ஜனநாயகம் உண்டா இல்லையா என தெரிந்து கொள்வதற்கான அளவுகோல் என ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச அவதானிகளும் இடித்துரைத்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில் ஆலயத்தில் அபயம் தேடுங்கள் என அறிவித்து பின்னர் அம் மக்களையே குறிவைத்து இனஅழிப்பு செய்யும் சிறீலங்காவும் தன்னை ஒரு ஜனநாயக நாடு என உச்சாடனம் செய்து கொண்டு உலாவுவதை உலகு எத்தனை நாட்களுக்கு அனுமதிக்கப்போகிறது என்பதே மடுத் திருப்பதி இனப்படுகொலைகள் உலகின் மனச்சாட்சிக்கு விடுத்துள்ள சவால்.

இவ்வாறு சிறீலங்கா ஆலயத்துள் தஞ்சமடைந்த அகதிகளை இனக்கொலை செய்தல் இதுதான் முதல் தடவையல்ல.தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் முதல் நவாலி புனித பீற்றர் ஆலயம் வரை இந்து கிறிஸ்தவ ஆலயங்களில் தமிழர்கள் பகிரங்கமாக சிறீலங்காப் படைகளால் கொல்லப்பட்ட எத்தனையோ சோகக் கதைகள் தமிழீழ மக்களின் இன்றைய வரலாறாக காட்சியளிக்கின்றது. அவற்றையெல்லாம் தமிழீழ மக்கள் அந்த அந்த நேரங்களில் சர்வதேச உலகிற்குச் சுட்டிக் காட்டத் தவறவில்லை. அதிலும் குறிப்பாக நவாலி புனித பீற்றர் தேவாலயத்தில் இதே இன அழிப்புச் செயலை சிறீலங்கா நடத்திய பொழுது புலம்பெயர் தமிழர்களாகிய நாம் எத்தனையோ வழிகளில் அதனை உலகிற்கு சுட்டிக் காட்டினோம். இவற்றுக்கெல்லாம் அவற்றைத் தடுக்கக்கூடிய உரிய நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்க மறந்ததினாலேயே இன்று மீண்டும் மடுவில் இந்த மனிதத்துவக் கொலைகளை உலகு தரிசிக்கின்றது. இந்நிலையில் மடுத் திருப்பதிப் படுகொலைகள் குறித்து அதனை எவ்வாறு நோக்க வேண்டியுள்ளது என்பதை இங்கு சுருக்கமாக எடுத்து நோக்குவது சர்வதேச உலகின் கடமையினை நினைவுறுத்த வேண்டிய நம் பொறுப்பை நாம் வலுப்படுத்த உதவும்.

## தமிழர்கள் என்பதால் இனஅழிப்பு

மடுத்திருப்பதியில் இந்த அப்பாவித் தமிழீழ மக்கள் ஏன் உயிரிழந்தனர்? அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே அவர்கள் சிறீலங்காவினால் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த மக்கள் எந்தவித ஆயுதங்களும் தாங்காத அப்பாவிப் பொது மக்கள். சிங்கள பௌத்த பேரினவாத இனவெறி சிங்கள சிறீலங்கா தமிழர்களை அழிக்கப்பட வேண்டிய எதிரிகளாகக் கருதுவதால் தமிழர்கள் மேல் குண்டுவீசுவது என்பது சிங்கள மக்களின் மதிப்பை ஆதரவைத் திரட்டித் தரும் செயல்முறையாக கையாளப்பட்டு வருகிறது. இந்த உண்மையை உறுதி செய்வதுபோல் சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா சந்திரிகா தனது ஜனாதிபதி தேர்தலுக்கு முன் மடுவைக் கைப்பற்ற வேண்டுமென்று சிறீலங்கா இராணுவத்திற்கு விடுத்த கட்டளையாலேயே இக் கோரச்சாவுகள் ஏற்பட்டதாக பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார். சிங்களக் கட்சிகளின் வாக்கு வேட்டைக்கு பலியாக்கப்படும் பகடைக் காய்களாக தமிழ் மக்களை சிங்கள அரசாங்கங்கள் கருதுகின்றனவேதவிர அவர்களை குடிகளாக கருதவில்லை என்பதையே மடுத்திருப்பதி இனஅழிப்பு உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது. இந்த இனஅழிப்பு முதலில் ஒரு அரசியல் நடவடிக்கை அடுத்ததாகவே அது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நடவடிக்கை என்பதை உலகு தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டிய நேரம் இது. தமிழர்கள் இத்தகைய கோரச் சம்பவங்களுக்கு இனியும் பலியாகாமல் இருப்பதற்கு தமிழர்கள் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உரிய சகல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

## கலாச்சார ஒன்றிப்பைக் கூட சிறீலங்கா அனுமதிக்கவில்லை

கலாச்சார ரீதியாகக் கூட சேர்ந்து வாழும் தன்மையை சிங்கள சிறீலங்கா அரசாங்கம் விரும்பவில்லை என்பதை மடுத்தேவாலயத்தின் திரு இருதயநாதர் சிற்றாலயத்தின் மேல் விழுந்து அதனை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேதமாக்கியுள்ள குண்டு உலகிற்கு எடுத்து விளக்குகின்றது. ஏனெனில் இந்த ஆலயத்தை ஆக்கிரமித்தபொழுது சந்திரிகாவின் படத்தையும் மடு அன்னையின் படத்தையும் இணையாகப்போட்ட சுவ ரொட்டி அடித்து ஒட்டி மடுவை மீட்ட வீராங்கனையாக சந்திரிகா தன்னைக் காட்டி மாகாணசபைத் தேர்தலுக்கு வாக்கு வேட்டையாடினார். ஆனால் இன்று அங்கு தமிழர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர் என்றவுடன் தமிழர்களை அழிப்பதற்காக குண்டுகளை வீசி தமிழர் களையும் ஆலயத்துடைய புனிதத்தையும் பழமையையும் அழித்துள்ளது சந்திரிகா அரசாங்கம். இது தமிழர்களு டன் கலாச்சார ரீதியாகவும் சேர்ந்து வாழ சிறீலங்கா தயாராக இல்லை என்பதை உணர்த்தியுள்ளது. சிறீ லங்கா என்றால் அதனை முழு பௌத்த சிங்கள நாடா கவே சந்திரிகா அரசாங்கம் கருதுகின்றது. ஆனால் பேச் சளவில் மட்டும் பல்லின சமுதாய நாடாக சிறீலங்காவை சந்திரிகா சித்தரிக்கிறனர். தமிழர்களுடைய பாதுகாப்பு தமிழர்களிடம் இல்லாமையினாலேயே இந்தக் கோர இனக்கொலைகள் நிகழ்ந்துள்ளன. தமிழர்களுடைய பாதுகாப்பு தமிழர்களிடம் இல்லாமல் போனதற்கு காரணம் பிரித்தானிய காலனித்துவம் தமிழர்களுடைய இறைமையையும் சிங்களவர்களுடைய இறைமையையும் பொதுவாக வைத்தமையே. இந்த தனியான இறைமை களுள்ள நாடுகளாக இலங்கைத் தீவு விளங்க வேண்டிய தன் அவசியத்தை மடுத்திருப்பதியில் நிகழ்ந்துள்ள இன அழிப்பு உலகிற்கு மீண்டும் உறுதியாக்கியுள்ளது.

## சிறீலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பே இவ்வினக் கொலைகளின் காரணி

எந்தவிதமான குற்றச் செயல்களையும் செய்யாத இந்த அப்பாவித் தமிழர்களின் உயிரிழப்புகளுக்கு அப்பகு தியில் உள்ள சிறீலங்காப் படைகளே காரணமாகியுள் ளன. சிறீலங்கா தனது படைகளை பாதுகாப்பு படைகள் என கூறிவருகின்றது. ஆனால் அப்படைகளோ தமது செயல்களினால் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குகிக்கின்றன. இதன் மூலம் பழிவாங்கல் நடவடிக்கைக ளுக்கு பயமுறுத்தல் நடவடிக்கைகளுக்கு உரிய எதிரி களாக தமிழ் மக்களை சிறீலங்காப் படைகள் கருது கின்றன. இதனால் சிறீலங்காப் படைகள் தமிழ் மக்களை பாதுகாக்கும் நோக்கில் அல்ல ஆக்கிரமிக்கும் நோக்கி லேயே அங்கு சிறீலங்காவின் ஆயுத அமைப்பாக இயலு மானவரை தமிழர்களைக் கொன்று குவிப்பதை தங்கள் தேசியக் கடமையாக கருதிச் செயல்பட்டு வருகின்றனர். இதனாலேயே அகதிகளாக ஆலயத்தில் சரணாகதிய டைந்து வாழும் மனிதர்கள் என்று கூடப் பாராது தமிழர்கள் மேல் குண்டுவீசி அவர்களை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை மடுத்திருப்பதி படுகொலைகள் மீண்டும் நிரூபித்துள்ளன. சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகள் தமிழர் தாயகத்தில் இருந்து விலகினாலே தமிழர்கள் பாதுகாப்பான அமைதியை பெறமுடியும் என்பதையே மடுத்திருப்பதி இனக்கொலைகள் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது.

## ஆயுதப் போராட்டத்தின் தேவையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது

ஆனால் சிறீலங்கா தனது படைகளை விலக்கி தமிழர்களது சுயநிர்ணய உரிமை வாழ்வுக்குப் பாதை விடத் தயாராக இல்லை. சிறீலங்கா முழுவதும் பௌத்த சிங்கள நாடென்ற இனவெறியால் தமிழர்களை இன அழிப்பு செய்தாகிலும் அவர்களின் தமிழீழத் தாயகத்தை அடிமைகொள்ளத் துடியாய்த் துடிக்கின்றனர். இந்த இனவெறித் தன்மையால் தாங்கள் அழிக்கப்படாமல் தப்புவதற்கு உள்ள ஒரே வழி ஆயுதப்போராட்டத்தின் மூலம் சிறீலங்காவின் இனஅழிப்பை எதிர்கொள்வது ஒன்றேயாகும். இந்த இயல்பான செயற்பாடே தமிழீழ மக்களின் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம். இந்த தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களிடை இருந்து உருவான அவர்களின் மேலான மதிப்புக்கும் உயர் அரசியல் பணிவுக்குமரிய தேசிய விடுதலை இயக்கம். இதனாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் பெருவெற்றிகளை ஈட்டும் நேரமெல்லாம் அந்த வெற்றிகளுக்கு பொறுப்பான உரித்தான தமிழீழ மக் களை தாக்குவதை அவர்களின் தேசத்தை உருக்குலைப் பதை சிறீலங்கா தனது பழிவாங்கல் நடவடிக்கையாக தொடர்ந்து செய்து வருகிறது. இந்த சிறீலங்காவின் இராணுவத்தைக் கொண்டு மக்களை அழிக்கும் கொடு மையை தடுத்து நிறுத்த தமிழ் மக்கள் தமக்கான சக்தி மிக்க தேசியப் படையொன்றை நிறுவி நிற்பது காலத்தின் தேவையாகியுள்ளது. சர்வதேச உலகு இந்த யதார்த்தத் தன்மையை உணர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் தமிழர்களை மீட்கிறேன் – பயங்கர வாதிகளுக்கு எதிராகப் போராடுகிறேன் – சமாதா னத்திற்காக யுத்தம் செய்கிறேன் என்றபோலிக்கோஷங் களால் தன் இனஅழிப்பினை மறைத்து ஒரு அரசாங் கத்தின் பாதுகாப்பு நடவடிக்கை போல் அதனை உல குக்கு வெளிப்படுத்தும் சதிச்செயலை தடுக்க வேண்டும்.

## சர்வதேச விசாரணையின் தேவையை உணர்த்துகின்றது

மக்கள் மேல் யுத்தம் செய்வது முற்றுகையிடுவது சர்வதேச யுத்தக் குற்றச் செயல், சிறீலங்கா மடுத்திருப்ப தியில் அப்பாவி மக்கள் மேல் ஒரு யுத்தத்தை நடாத்தி யுள்ளது. இதனை சர்வதேச யுத்தச் செயல் என நிரூ பிப்பதற்கான போதிய சாட்சியங்கள் உண்டு. இருந்த போதிலும் அங்கே சிறீலங்காவின் படைகளின் அழுத்தங் களுக்கு இடையில் உண்மைகளை வெளிக்கொண்டு வருவது அங்குள்ள ஒவ்வொருவருக்கும் மிகமிக கடின மான ஒன்று என்பது யாம் கூறத்தேவையில்லை. இதனை மாற்றி இது சர்வதேச யுத்தக் குற்றச் செயல் எனக் கண்டறிய வேண்டிய கடமை சர்வதேச உலகின் கடமை. பாரபட்சமற்ற சர்வதேச நீதி விசாரணை ஒன்று மடுவில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரம்பிக்கப்பட்டாலே அங்கு இனக்கொலைக்கு உள்ளான தமிழீழ மக்களுக்கு நீதி கிடைக்கும். உலகின் இந்த நீதி விசாரணைக்கு வழியேற்படுவதைத் தடுக்கும் வகையில் சிறீலங்கா இந்த கொலைகள் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் ஏற்பட்டது போன்ற ஒரு பிரமையைத் தோற்றுவிக்கும் நரித்தனமான முயற்சிகளிலும் பரப்புரைகளிலும் இறங்கியது. இதை வன்மையாக மறுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் சிறீலங்காவே இந்த ஈனத்தனமான மனிதப்படுகொலைகளுக்கு முழுப்பொறுப்பு என ஆணித்தரமாக எடுத்து விளக்கியுள்ளனர். சிறீலங்கா தான் செய்யும் இனக்கொலைகளின் உண்மை ரூபங்கள் உலகிற்கு வெளிவராமல் காட்ட அவற்றை யுத்தத்தின் விளைவாகவோ அல்லது தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட செயலாகவோ வார்த்தை ஜாலங்கள் செய்வது வழமை. இந்த வழமை மாறவேண்டுமானால் தமிழர்களை சிறீலங்கா இனப்படுகொலை செய்வதை உலகு உள்நாட்டு பிரச்சினையாக கருதும் தன் நிலையை உடன் மாற்ற வேண்டும். ஒரு அரசாங்கம் தன் குடிகள் எனக் கருதப்படும் ஒரு பகுதியினருக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்கும் ஆற்றலற்றதாக மட்டும் திகழவில்லை. தமிழர்களுடைய அமைதியையும் பாதுகாப்பையும் அழிக்கும் ஆக்கிரமிப்பு அரசாகவும் விளங்குகின்றது என்பதை மடுத்திருப்பதி இனப்படுகொலைகள் மீண்டும் நிரூபித்துள்ள இந்நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபை மடுத்திருப்பதியில் நிகழ்த்தப்பட்டுள்ள இனஅழிப்பு குறித்து சர்வதேச விசாரணைக்கு உத்தரவிடல் வேண்டும்.

## கலாச்சார சின்னங்களை அழிக்கும் திட்டம் மற்றொரு சர்வதேச யுத்தக் குற்றச் செயல்

மருதமடுத் திருப்பதி தமிழர்களின் கிறிஸ்தவ கலாச்சார சின்னங்களில் முதன்மையானது. இந்த திருப்பதி 450 ஆண்டு கால பழமைவாய்ந்த தமிழ் கிறிஸ்தவ கலாச்சார வரலாற்றைக் கொண்டு விளங்கின்றது. இந்த திருப்பதியின் கலாச்சாரத் தன்மையை ஏற்று விடுதலைப் புலிகள் இந்தப் பகுதிகளை யுத்த சூன்யப்பிரதேசமாகப் பேணும் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளரின் அனைத்து முயற்சிகளுக்கும் முழு ஆதரவை நல்கினர். ஆனால் சிறீலங்கா தமிழர்களின் கலாச்சார சின்னமாக விளங்கும் இவ்வாலயத்தையும் அகதி மக்களுடன் சேர்த்து அழிக்கும் நோக்கில் மூன்று குண்டுகளை பண்டிவிரிச்சான் பக்கத்திலிருந்து வீசிய போதிலும் தெய்வீகமாக ஒன்று மட்டுமே வெடித்ததாக மக்கள் சாட்சிகள் கூறியுள்ளனர். குண்டுகள் மூன்றுமே வெடித்திருந்தால் எண்ணிப்பார்க்க இயலாத பயங்கர விளைவுகள் ஏற்பட்டிருக்குமென மக்கள் நாத்தளம்பக் கூறியுள்ளனர். மக்களின் இந்தச் சாட்சியங்கள் சிறீலங்காவின் கலாச்சார சின்னங்களை அழிக்கும் போக்கை தெளிவாக்கியுள்ளன. இது குறித்து ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாச்சார அமைப்பு கவனம் செலுத்தி சிறீலங்காவின் மற்றொரு யுத்தக் குற்றச் செயலான தமிழீழ மக்களின் கலாச்சார சின்னங்களை அழிக்கும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

## ஐக்கிய நாடுகள் சபைக்கு முகத்தில் கரிபூசியுள்ளது

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களை நுளம்புக்கு மலோத்தியன் அடிக்கும் அமைப்புக்களாக கிண்டல் செய்ய சிறீலங்காவின் படைகளோ ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்களால் யுத்த சூன்ய பிரதேசமாக மட்டுமல்லாது திறந்த வெளி அகதி முகாம்களுக்கு சிறந்த உதாரணமாகவும் ஆய்வறிக்கையில் காட்டப்பட்டு வந்த மடு ஆலயப்பிரதேச்சில் குண்டு வீசி இன அழிப்புச் செய்து முகத்தில் கரிபூசியுள்ளனர். ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்களின் யுத்த சூன்ய பிரதேச வேண்டுகோளை கடைப்பிடித்து யாருக்கு அமைதியின் மேல் உண்மையான அக்கறையுள்ளது என்பதை நிரூபித்து வருகின்றனர். இதனை கவனத்தில் எடுத்து இனியாவது சர்வதேச அமைப்புக்கள் தமிழர்களின் நியாயமானதும் உயிர் வாழ்தலுக்கு இன்றியமையாததுமான அவர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமான தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் அதன் இலக்கை எய்தி தமிழ் மக்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வுபெற சிறீலங்கா பேச்சுவார்த்தைக்கான இயல்பு நிலைகளை தோற்றுவிக்க உதவவேண்டுமென்பதே புலம்பெயர் தமிழர்களின் வேண்டுகோளாக உள்ளது.

## கத்தோலிக்க திருச்சபையின் பொறுப்பு உண்மைக்கு சாட்சி சொல்லல்

உண்மைக்கு சாட்சி சொல்லவே நான் வந்தேன் என்பது இயேசுவின் வாய்மொழி. இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைக்கு மடுமாதா உண்மைக்கு சாட்சி சொல்ல வேண்டிய ஒரு வரலாற்று நிலையைத் தோற்றுவித்துள்ளார். இதனை உணர்ந்து செயற்பட்டால் இன அழிப்பு குற்றவாளியான சிறீலங்காவை உலகு விரைவாக இனங்காணும். திருத்தந்தை 2-ம் சின்னப்பர் அருளப்பர் ஆலயத்தில் மரணித்த மக்களுக்காக பிரார்த்தித்துள்ளமை அனைத்து தமிழர்களாலும் நன்றியோடு நோக்கப்பட்டுள்ளது.

ஆனால் பிரார்த்தனையுடன் உண்மைக்கு சாட்சி சொல்ல வேண்டிய பெரும் பொறுப்பை அவர் சுமந்துள்ளார் என்று தமிழீழ மக்கள் நம்புகின்றனர். தமிழீழ மக்களின் நம்பிக்கை பொய்க்காது உண்மைகள் வெளிவர திருத்தந்தை சின்னப்பர் அருளப்பர் அவர்கள் சர்வதேச அமைப்புக்களிடம் இது குறித்து சர்வதேச விசாரணைக்கு கோரவேண்டும் என தமிழ்க் கத்தோலிக்கர்கள் கோரியுள்ளனர். அத்துடன் தமிழ் மக்களுடைய தேசிய விடுதலைப்போராட்டத்தை இந்து பௌத்த சண்டை என்றும் பயங்கரவாதப் பிரச்சினை என்றும் கொச்சைப் படுத்தாது உண்மைச் செய்திகளை உலக தொடர்பு சாதனங்கள் வெளியிட வேண்டிய தேவையினை மடுத் திருப்பதி கோர இனக்கொலைகள் உலகச் செய்தியாளர்களுக்கு உணர்த்தியுள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கள் தலைவனுக்கு இதயத்தால் ஒரு வாழ்த்து!

கொதிக்கும் தாருக்குள் குளித்த தமிழனின்
விழிக்குள் இருந்து விரிந்தவன் தலைவன்!
மிதித்த சிங்கள மிருகத்தின் பாதத்தில்
மிடறு நசிங்கிட... விழிகள் பிதுங்கிட
சகிக்க முடியாத் துன்பத்திற் துடித்துத்
துவண்டு சரிந்த தமிழனின் நெஞ்சிலே
முகிற்குள் எழுந்த முன்னவர் தோன்றலாய்த்
தெறித்த மின்னலே எங்கள் தலைவனாம்!
பசியெடுத்திடும் போதெலாம் பாவியர்
பலியெடுத்திட வந்து புகுந்து நாம்
வசித்த பூமியை வதைத்துக் குதறிட
வலியிற் கத்தியே வக்கற்று வீதியில்
திசைகள் எட்டும் நாம் சிதறிய போதிலெம்
சிந்தை செய்த நல் நோன்புகள் தானெம்முன்
தசையும் தேகமும் தரிசனத் தாகமும்
தாங்கி இன்னொரு தலைவனாய் வந்ததே!



காத்திடும் எனக் கரம்கூப்பித் தேவர்கள்
கண்களில் நீருடன் வேண்டிய போதிலே
கூத்தன் நெற்றியிற் குமரனார் தோன்றிய
கொள்கை போலெங்கள் தமிழர் குலத்திடை
பூத்தவன் இந்தப் பிரபாகரன் எனும்
புண்ணியச் செல்வன் பூமியிற் தமிழர்கள்
ஆத்தலைந்திடல் ஆகாது என்பது
போற் பிறந்தவன் பல்லாண்டு வாழியவே!

யார் நினைத்தனர் நமக்குளே இத்துணை
வீரவேங்கையின் வித்து விழும் என்று!
பார் திகைத்திடப் பகைவர் நடுங்கிடப்
போர் தொடுத்திடல் முற்றும் புதுமையே!
தீர்வை வைத்திடும் சிங்கள அரசெனும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீர்வில் நித்திரை செய்த தமிழர்க்கு
ஓர்ம மாத்திரை உள்ளத்தில் ஊட்டிய
உத்தமன் எங்கள் உயர்ந்த தலைவனே!

பரணி யென்றொரு பாவது நம்மிசை
பாடப் பெற்றது உண்மையா என்றும்
பிறரின் கால்களைப் பிடித்துத் தருவதைப்
பெற்று வாழ்வதே பிறவியின் பேறென்றும்
அறிஞர் கூறியே அடிமைகளாக்கினர்!
அந்தக் காலத்தை அடியோடு மாற்றிடப்
பரிதியாய் எம்முன் புலியெனப் பிறந்தவன்
புகழைப் பாடிடல் புலவரின் கடமையே!

இன்று விழித்திடல் இல்லையேற் தமிழர்கள்
என்றும் விழித்திடல் இல்லையென்றாகுமாம்!
கொன்று குவித்திடும் கொடியவர் படையதன்
கொட்ட மடக்கிடக் கொடியுடன் போரிடும்
குன்றுகள் எங்கள் வேங்கையர் அணியிலே
கூட்டம் கூட்டமாய் நாங்களும் சேர்ந்திடின்
வென்று வாழுவோம் விதியினை மாற்றுவோம்
வீர மண்ணிலே விளைந்திடும் செல்வமே!

வாழி தலைவனே! வண்டமிழ்த் தாயவள்
வரமாயுந்தனை வையத்திற் தந்தனன்!
தோளில் வீரமும் தோற்றத்தில் வீறதும்
தேசம் தாங்கிடும் தெளிவான சிந்தையும்
தூரதரிசனம் தோற்காத நெஞ்சுரம்
தொடுத்த இலட்சியம் தொடர்ந்திடும் பாங்கதும்
போரிற் தர்மத்தைப் போற்றிடும் நேர்மையும்
போர்த்தி நிற்கின்ற புதல்வனே வாழி நீ!

வன்னிப் போரது வருவிக்கும் வெற்றிகள்
வா! வா! என்றுனை வரவேற்கும் எம் மக்கள்...
மின்னி மறையுமுன் மோதல் நடந்திட
முச்சுத் திணறிடும் ராணுவ ராட்சகர்...
காற்றில் நீரினைக் கொணர்கின்ற காட்சிகள்...
காலத் தாயவள் கொடுக்கின்ற மீட்சிகள்!
விண்ணைத் தாவிடும் விடுதலைக் கொடியிலே
வேங்கை பாடிடும் விடியலின் தோற்றங்கள்!

மண்ணைத் தாங்கிடும் மைந்தரின் தலைவனே!
மறத்தமிழ் எனும் மரபினைக் காத்தவா!
உன்னைத் தாங்கிய அன்னையை மறப்பமோ?
உடன் வளர்ந்த உன் தோழரை மறப்பமோ?
எண்ணத்தால் உனை ஏற்றுத் தலைவனாய்
எதிர் ஆதிக்கம் தொலைத்திடும் பணியிலே
தம்மைத் தந்த தியாகிகள் யாகிகள்
தீபமானவர் திரும்பவும் பிறப்பரே!

வீர மண்ணிலே விளைந்திடும் செல்வமே!
வாழிய பல்லாண்டு வாழியவே!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள்

பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள், கொடுமைகள் உலகின் ஒவ்வொரு மூலையிலும் தினம் தினம் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன. உலகின் சரிபாதி சனத்தொகையினராக உள்ள பெண்ணினம் உலக உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் அச்சாணியாக விளங்கும் பெண்ணினம் ஆணாதிக்க வெறியின் கோரப்பிடியில் சிக்கி சீரழிவது இன்று நேற்று நடைபெறும் ஒரு நிகழ்வல்ல.

பெண்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள ஒடுக்குமுறைகளில் மிகவும் கோடூரமானதும், வெறித்தனமானதுமான பாலியல் ரீதியான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமே உள்ளன. வீதிகளில், வேலைத்தலங்களில் பெண் எதிர்நோக்கும் ஆண்களின் பாலியல் சேட்டைகள் ஒருபுறமிருக்க பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் அவள் மீது புரியப்படும் உச்சக்கட்ட கொடுமைக்கு உதாரணங்களாகிறது. பெண்கள் பாதுகாப்பிற்கென எத்தனையோ சட்டமூலங்கள் இயற்றப்பட்டுவிட்ட போதிலும் உயிரை உலுக்கும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் உலகெங்கும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இனங்களை ஆக்கிரமிக்கும் எதிரிப்படைகள் உட்பட சமூகத்தில் வாழும் காம வெறியர்கள் வரைக்கும் பெண்கள் மீது புரியும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கு தமிழீழமும் விதிவிலக்கல்ல. உலக நாடுகளோடு ஒப்பிடுமிடத்து மிக மிகக் குறைந்த எண்ணிக்கையாயினும் தமிழீழத்திலும் இக் கொடுமைகள் இடம்பெற்ற வண்ணமே உள்ளது.



— சிமிழ் —

தமிழீழச் சட்டத்தில் பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் ரீதியான துன்புறுத்தல் போன்றவற்றுக்கு மிக்க கடுமையான சட்ட வரைவுகள் உள்ளபோதிலும் ஆங்காங்கே சில சம்பவங்கள் இடம்பெறத்தான் செய்கின்றது.
திட்டமிடப்பட்ட ரீதியில் எம் மக்கள் மீது குறிப்பாக பெண்கள் மீது சிறீலங்கா அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள கொடிய யுத்தத்தின் விளைவுகள் ஒருபுறம் எனில் சமூகப் பொறுப்பற்ற பாலியல் வக்கிரவெறி கொண்ட ஆண்களின் மிருகத்தனமான வேட்டைக்கு பெண்கள் பலியாவது இன்னொருபுற அவலமாகிறது.

ஆதிக்க வெறியும் பெண் வெறும் போகப் பொருள் என்ற உணர்வும் சமூகத்தில் உள்ள பெரும்பான்மை ஆண்களிடம் காணப்படும் இயல்பாகி உள்ள நிலையில் பெண்களின் எதிர்கால பாதுகாப்பான வாழ்நிலையானது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும் பாதிப்பிற்குள்ளாக நேரிடுகிறது.
பெண்ணை ஒரு மனித உயிராக மதியுங்கள் என்ற வேண்டுகோளும் உங்கள் சினேகிதியாக, தாயாக, சகோதரியாக உணர்ந்து நடவுங்கள் போன்ற புரிந்துணர்வு கருத்துக்களும், ஆதிக்க திமிர்கொண்ட சில ஆண்களை இன்றுவரை சிந்திக்கத் தூண்டவில்லை என்பதே தமிழீழ நீதிமன்றுக்கு வந்த, மற்றும் வெளிவராது மறைக்கப்பட்ட சில பல பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள், பாலியல் வன்முறைகள் எடுத்துக்கூறும் உண்மையாகிறது.
பெண்களின் வாழ்வில் நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்தவல்ல பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை எதிர்கொண்டு சமாளிக்க வேண்டிய தேவை எமது பெண்களின் தலைகளிலேயே விழுகிறது.
தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கட்டாய நிலை சமுதாயத்தில் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்பட்டுள்ளது என்பது வெளிப்படை. இயற்கை அளித்துள்ள நகமும், பற்களும் கூட பெண்ணை பாதுக்காக்கும் ஆயுதங்களாக இருந்த போதிலும் ஆண் பலமானவன் எதிர்ப்பதால் பயனேதும் இல்லை என்ற தாழ்வு மனப்பான்மையே பெண்ணை பெரும்பாலும் அடங்கிப்போகும் நிலைக்குத் தள்ளிவிடுகின்றதென்பதே நடைமுறை உண்மை.
ஆண்கள் வலிமையானவர்கள் என்ற கருத்தை விடுத்து தன்னிடமும் வலிமை தற்காக்கும் திறமை அதிகமாக இருக்கிறதென்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்து கொள்ளவேண்டும். மாறாக தாழ்வு மனப்பான்மை கொண்டு ஆரம்பத்திலேயே மனரீதியான சோர்விற்கும் நம்பிக்கையினத்திற்கும் இடம்கொடுக்கும் பெண்களே இறுதியில் முழுமையான விபத்திற்கு ஆட்படுகிறார்கள்.

இந்த மண்ணின் எதிரிக்கு எதிரான போரியல் முழக்கமே அவலத்தைத் தந்தவனுக்கே அதை திருப்பிக்கொடு என்பதுதான். இது சமூகத்தில் உள்ள சாதாரண பெண்களுக்கும் பொருந்தும். அவலத்தைத் தர நினைப்பவனுக்கு பேரவலத்தைக் கொடுக்கும் இயல்பிற்கு ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் தன்னை தற்காத்துக் கொள்ளும் வேளையில் சம்பந்தப்பட்ட ஆணை கொலை செய்துகூட தம்மை காத்துக்கொண்ட பெண்களை உலகில் ஆங்காங்கே நாங்கள் காண்கிறோம். தற்காப்பு யுத்தத்தில் கொலைகள் மிகவும் அத்தியாவசியமானவையாகவே அமைகின்றன. இதை ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் மனதில் கொள்ளவேண்டும். சட்டம் செய்வேண்டிய ஒன்றை ஒரு பெண் தனது கையில் எடுக்கலாமா என்ற கேள்விக்கே இடமில்லாத நிலை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குற்றங்கள் நடந்து முடிந்த பின்னரே

**பெண்ணை ஒரு மனித உயிராக மதியுங்கள், தாயாக, சகோதரியாக, நண்பியாக உணர்ந்து புரிந்துண்ர்வுடன் அணுகுங்கள்**


தண்டனை வழங்கும் நிலையில் இருக்கும் எவ்வாறெனினும் ஒரு பெண் தன்னைக் காத்துக்கொள்ள எத்தகைய முயற்சியையும் எடுக்க முடியும் என்பதை தமிழீழ சட்டம் ஏற்றுக்கொளவே செய்கிறது.
ஒரு உயிரை உருவாக்கித் தரும் இயல்புகொண்ட பெண் ஒரு உயிரை அழிக்கலாமா என்ற கேள்வி எழின், உயிரை உருவாக்கித்தரும் மகத்துவம் மிக்க தாய்மை இயல்பை தன்னகத்தே கொண்ட பெண்களை மிருகவெறியோடு சின்னாபின்னப்படுத்தி அவனை துன்புறுத்த முனையும் ஒரு காமுகனுக்கு இதைத் தவிர வேறெந்த தண்டனையுமே இல்லை யென்பதே பதிலாகும்.
தனக்கெதிராக இழைக்கப்படும் எல்லாவிதமான கொடுமைகளுக்கும் எதிராக கிளர்ந்தெழும் குணம்கொண்ட பெண்களாக தம்மை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற வேகம் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படவேண்டும். இத்தகைய எதிர்ப்பு மனோபாவம் கைவரப்பெற்ற பெண்களால் பாலியல் ரீதியான கொடுமைகளை நிச்சயம் வெல்ல முடியும்.
எதிரியிடமிருந்து தன்னை தற்காத்துக்கொள்ளமுடியும். தன்னால் இயலும் என்ற தன்னம்பிக்கையும் மன உறுதியும்தான் சட்டங்களை விடவும் ஒரு பெண்ணுக்கு உயர்ந்த பாதுகாப்பரணாக முடியும். எந்த கொடுமையானாலும் நடந்துமுடிந்த பின்னர் தான் ஏனையவர்களால் உதவிக்கு வரமுடியும். ஆனால், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், திடமும் ஒரு பெண்ணுக்கு எதையும் வரமுன் காக்கும் கவசங்களாக ஆகின்றதென்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.
பாலியல் வல்லுறவானது ஒரு காம வெறியனின் திமிர்த்தனத்தால் இடம்பெறுகின்ற ஒரு வக்கிர வன்முறை. இதைப் பெண்ணின் உடலுக்கு நேர்ந்த விபத்தாக கருதாமல் அவள் வாழ்வில் ஏற்பட்ட பாரிய களங்கமாகவும் கறையாகவும் கருதுவது, அவளை இழிவானவளாக நோக்குவது போன்ற பிற்போக்குத்தனமான சமூகக் கருத்துக்கள் நெருப்பில் இடப்பட வேண்டியவை குறிப்பிட்ட குற்றவாளியையே திருமணம் செய்துகொள்ள நினைப்பதும் அதன்மூலம் இந்த விபத்தை சமூகப் பார்வையில் களங்கத்தை சீர்செய்ய முனைவதும், தற்கொலை செய்துகொள்ள நினைப்பதும் தென்னிந்திய தமிழ் சினிமா திரைப்படங்களின் கருத்துத்திணிப்புக்களின் விளைவுமட்டுமே.
தண்டிக்கப்படவேண்டிய ஆணானவன் இயல்பாக சமூக



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓட்டத்தோடு கலந்து போகும்போது பெண் மட்டுமே தனக்குள்ளே ஒடுங்கிப் போவதும் ஆரோக்கியமான செயற்பாடல்ல என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்துகொள்ளவேண்டும். பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு ஒருவகை எனில் சிறுமிகள் மீதான பாலியல் வல்லுறவு இன்னொருவகை கொடூரமாகும். காமவெறி கொண்ட ஆண்களின் மிருகத்தனமான செயற்பாட்டிற்கு சிறுமிகள் மீதான பாலியல் வல்லுறவுகளுக்கும் உதாரணங்களாகின்றன. பாலியல் உணர்வுகளோ, தமது பாலுறுப்புக்களின் இயல்புகள் செயற்பாடுகள் பற்றியோ எதுவும் தெரியாத பெண் குழந்தைகள் மீதான (பெரும்பாலும் 30 வயதிற்கு மேற்பட்ட திருமணமான ஆண்கள்) பாலியல் உறவானது சிறுமிகளின் எதிர்கால உடல் உள ஆரோக்கியத்தை சீர்குலைக்கும் ஒரு நிகழ்வாக மாறிவிடுவது கண்கூடு. எமது சமூக அமைப்பே வெட்கப்படவேண்டிய ஒரு நிகழ்வாக இது அமைந்துவிடுகிறது. சிறுமிகள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கு பிள்ளைகள் மீதான பெற்றவர்களின் கவனக்குறைவும் ஒரு முக்கிய காரணியாகிறது. ஆட்களை அறிந்து ஓரளவேனும் பிள்ளைகளைப் பழகவிடுதல். பாலியல் உறுப்புக்கள் மீதான மற்றவர்களின் தொடுகைகள் போன்றவற்றை அனுமதிக்கக்கூடாது என்பதை இலகுவாக புரியக்கூடிய வகையில் கற்றுக்கொடுத்தல் போன்றவை ஓரளவேனும் இத்தகைய நடவடிக்கைகளை குறைக்கும் செயலாகலாம். தமது பிள்ளைகளின் எதிர்கால உடல் உள நலனில் அக்கறையுள்ள ஒவ்வொரு பெற்றோரும் கருத்தில் எடுத்து செயற்படவேண்டிய மிக முக்கிய விடயம் இது. இத்தகைய விபத்திற்குள்ளாகும் சிறுமிகள் பிற்காலத்தில் எதற்கெடுத்தாலும் பயந்தவர்களாகவும் கூடப்பிறந்த சகோதரன், தந்தை



போன்றவர்களை கண்டு கூட நடுங்குபவர்களாகவும் ஒட்டுமொத்த ஆண் இனத்தையே வெறுப்பவர்களாகவும் பாலியல் உணர்வுகளையே வெறுத்து ஒதுக்குபவர்களாகவும் அறிவு, ஆளுமை பண்புகள் இல்லாதவர்களாகவும் மாறிவிடக்கூடிய ஒருநிலை உருவாகிவிடும் என்பதை பெற்றவர்கள் கவனத்தில் கொள்வது அவசியமாகும். பாலியல் வல்லுறவு, மற்றும் பாலியல் வன்முறைகள் போன்றவற்றிற்கு மிகக்கடுமையான (மரணதண்டனை உட்பட) தண்டனைகள் தமிழீழச்சட்டத்துள் உள்ள போதிலும் சமூக அழுத்தங்களுக்குப்பயந்து பிள்ளைகளின் பெயர்கள் கெட்டுவிடும் என்று உறவினர்கள் சட்டத்தின் உதவியை நாடுவது மிகக்குறைவாகவே உள்ளது. ஏதேற்சையாக சட்டத்தின் வாசலுக்குள் வந்துவிட்ட சம்பவங்களில் கூட சில சம்பவங்கள் குறிப்பிட்ட சில நாட்களின் பின் பெற்றோரும், உறவினர்களும் வாபஸ்பெறமுயல்கின்றனர். இந்நிலை மிகவும் வேதனைக்குரியதொன்றாகும். பெற்றவர்களின் உறவினர்களின் கணிப்பில் இது சிலவேளை சரியாக இருப்பினும் இது ஒரு சமூகத்தின் எதிர்கால பயமற்ற நிம்மதியான வாழ்க்கை முறையையே சீர்குலைக்கக்கூடியதொன்றாகும். சட்டத்தின் பார்வையில் இருந்து இவற்றை மறைப்பதன் மூலம் மிகப் பாரிய குற்றங்களை புரிந்த குற்றவாளிகள் தண்டனையில் இருந்து தப்புவது ஒருபுறமிருக்க குறிப்பிட்ட குற்றவாளிகள் இதே குற்றத்தை எந்தவித பயமோ சஞ்சலமோ இன்றி மேலும் மேலும் தொடர்ந்து, பல பெண்களின் வாழ்வில் பெரும் விபத்துக்களை ஏற்படுத்திவிடும் நிலைக்கு உந்துசக்தியாகவும் அமைந்துவிடும். தாம் எப்படி வெறியாட்டம் போட்டாலும் சட்டத்தின் பிடியில் சிக்க சந்தர்ப்பம் இல்லை என்ற நம்பிக்கையை குற்றவாளிகளுக்கு ஏற்படுத்துவதோடு இன்னும் சில புதிய குற்றவாளிகளையும் உருவாக்கிவிடும். ஒரு பெண்ணின் வாழ்வை கவனத்தில் கொண்டு மௌனம் சாதிக்க முற்படுவதால் பல பெண்களின் சிறுமிகளின் பாதுகாப்பே கேள்விக்குறியாகிவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுவிடும் என்பதே யதார்த்தமாகும். தம்மீதான வன்முறைகளை ஆக்கிரமிப்புக்களை தடுக்க முயல்வதும், முடியாதவிடத்து குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்த ஆவன செய்வதுமே இத்தகைய வன்முறைகளை ஒழிக்க சிறந்த வழியாகும். இது சமூகத்தில் உள்ள அனைவரதும் ஒத்துழைப்போடும் களையப்படவேண்டிய ஒரு வன்முறை என்பதை அனைவரும் உணர்ந்து அதற்காகச் செயற்பட முன்வருவதன் மூலமே தீர்க்கப்படக்கூடிய பிரச்சினையாகும்.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேர்களைத் தேடுவோம்

தமிழீழத்தின் இளைய தலைமுறை ஊடகக்காரர்களில் தி. தவபாலன் முக்கியமானவர். 'புலிகளின் குரல்' வானொலியில் பிரதம செய்தியாசிரியராகப் பணிபுரிகின்றார். சூழலியலிலும் அறிவியலிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். 'தமிழர் வாழ்வில் அறிவியலிலும் சூழலியலும் தேக்கமடைந்தே இருக்கின்றன. இவை இரண்டும் ஒன்றில் ஒன்று சார்ந்தே இயங்குகின்றன. இவற்றில் நாம் கொள்ளும் அக்கறையே எம்மை உலகப்பொது ஓட்டத்துடன் இணைத்துக் கொள்ள உதவும்' என்று கூறும் தவபாலன் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து நீண்ட காலமாகத் தன் பங்களிப்பைச் செய்து வருபவர். இவர், தமிழீழத் தேசியத் தலைவரின் தங்க விருதையும் பெற்றவர்.

செய்தி, அறிவியல், மற்றும் அரசியல் விடயங்களுடன் கலை, இலக்கியத்திலும் இவருக்கு ஆர்வம் உண்டு. தன் ஒளிப்படங்கள் மூலம் பலரது கவனத்தை ஈர்ந்தவர். அழகும் பொருளும் ஒருங்கிணைந்து, காலத்தையும் சூழலையும் பதிவுசெய்யும் ஒளி ஓவியங்கள் இவருடைய படங்கள். தன்னை ஒரு ஒளிப்படக் கலைஞர் (Photograper) என்றே கூறிக்கொள்கிறார். 'மனித வாழ்வை காலமும் சூழலுமே ஒழுங்குபடுத்துகிறது' என்று சொல்லும் இவர் இந்தப் பிரக்ஞை எல்லோரிடத்தும் வளரவேண்டும் என்று விரும்புவர். தன் சிந்தனைகளை எழுத்து – செயல் என இரு தளங்களிலும் ஒருங்கிணைத்துச் செயற்பட்டு வருகிறார். சிந்தனைவயப்பட்ட முகமும் துடிப்பும், ஆர்வமும் தவபாலனின் அடையாளங்கள்.



★ அறிவியல் துறையில் அதிகம் ஈடுபாடுடையவராகவே உங்களின் அடையாழம் இருக்கு. நமது அறிவியல் பார்வை தொடர்பாக என்ன கருத்து உங்களுக்குண்டு?

✱ அறிவியல் என்பது நாங்கள் கருதும் தொழில் நுட்பம் மட்டும் அல்ல. நாம் வாழும் யதார்த்த உலகை புரிதல் தான் அறிவியல். இந்த யதார்த்த உடன்பாட்டின் விளைவாகவே தொழில்நுட்பங்கள் உருவாகின்றன. அதனால் தன்னை, தன் வாழ்வு முறையை, தனது சூழலை முற்று முழுதாக தெரிதல் – புரிதல் தான் அறிவியல் என்பதன் அடிப்படையாகின்றது. இந்தப் புரிதலின் அடுத்த கட்டம் அது பற்றிய ஆராய்வு – இந்த ஆராய்வின் பயனாக சூழலிலிருந்து – சூலுக்கான தொழில்நுட்பங்கள் பிறக்கின்றன. எங்களது அறிவியல் கல்விமுறை சூழலைப் புறந்தள்ளியிருப்பதால் வெறுமனே உத்தியோகக் கல்வியாகவே அது இருந்துவருகிறது. அது எமக்கோ சூழலுக்கோ எதுவித பயனையும் தருவதில்லை. நான் எனது சூழலை அறிவதில்தான் கூடுதல் அக்கறை கொண்டுள்ளேன். நவீன அறிவியல் வளர்ச்சியையும் அறிகிறேன். எனது சூழலில் இந்த இரண்டு விடயங்களும் இரு துருவங்களில் இருந்தாலும் இரண்டு எப்படி இணையப் போகின்றன என்பதில் நான் ஆர்வம் கொண்டுள்ளேன். அப்படி இணையாது போனால் நாம் நமது வேர்களை இழக்கவேண்டிவரும்.

★ அறிவியல் படைப்புலகுக்கு எந்தவொரு பங்களிப்பையும் வழங்காது அதனை அனுபவிப்பவர்களா, நுகர்வோர்களாக மட்டும் இருக்கிறோம். இது நமது வளர்ச்சியின் மையைக் குறிக்கிறதல்லவா?

✱ இதற்கான காரணம் எமது வாழ்வின் மீதான ஆக்கிரமிப்பே ஆகும். ஐரோப்பியர் வருகைக்கு முன் எங்களது வாழ்வுமுறை எப்படி இருந்தது என்பது எமக்கு தெரியாது. ஆனால் சுயமாக நம் முன்னோர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அந்நியர் வருகையின் பின் நாம் அவர்களின் உற்பத்திகளின் நுகர்வோராகவே இருந்து வருகிறோம். நாங்கள் எந்த ஒரு பங்களிப்பையும் அறிவியலுக்கு வழங்குவது பற்றி சிந்திக்கவில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேர்காணல்

திதவபாலன்

குறிப்பாகச் சொல்லப் போனால் நாங்கள் சிந்தனை என்ற அலகற்ற வர்களாகவே வாழ்ந்து வருகிறோம். கல்விமுறையும் எங்களைச் சிந்த னைக் குருடர்களாக்கிவிட்டது. எமது புத்திஜீவிகள் கூட பிரதிபலிப்பான்க ளாகத்தான் உள்ளார்களே தவிர சுயமானவர்கள் இல்லை. சிறீலங்கா சுதந்திரமடைந்ததான பின்னர்கூட கொழும்பை மையப்படுத்தி நமது கல்வி – வாழ்வு முறை ஆக்கப்பட் டது. இதனால் நாம் தொடர்ந்தும் நுகர்வுப் பயணிகளாகவே இருந்து வருகிறோம். புத்திஜீவிகள் எனப்படு பவர்கள் அரசியல் தனித்துவம் இருந்தாலே சுயவளர்ச்சித் தன்மை கிட்டும் என்கிறார்கள். அதேவேளை தமிழர்க்கான அரசியல் தனித்துவத் திற்கான இன்றைய போராட்டத்தை குழப்புபவர்களாகவே பெரும்பான் மைப் புத்திஜீவிகள் உள்ளனர். இதை நீங்கள் நன்றாக கவனிக்கவேணும்.

நுகர்பவர்களாக மட்டுமே நாங் கள் இருந்தால் தொழில்நுட்ப உற்பத்தியாளர்களிடம் நாம் ஒட்டு மொத்தமாக எம்மை அடகுவைக்க வேண்டியவர்களாகிவிடுவோம்.

எஞ்சுவது சுயமற்ற வெறும் நாம் தான். இப்படி ஒரு மனிதகுழாம் வாழ்வதில் அர்த்தம் இல்லை. ஆகவே அறிவியல் ரீதியான எமது வளர்ச் சிக்கு நாம் அரசியல் தனித்துவத்தை எட்ட உழைக்கவேண்டும். இன்றைய உலகில் அறிவியல் என்பதே முக்கிய மானதாகின்றது. மீண்டும் கூறப்போ னால் நாம் எம்மை அறியவேண்டும். இந்த அறிதல் என்பது எமது அரசி யல், வரலாறு, பண்பாடு, வாழ்வு முறை, இயற்கை ஆகியனவற்றை உள்ளடக்கியதாகும். இதுவே அறிவி யலின் அடிப்படை.

★ நாம் நமது சுயசிந்தனையை இழந்து நான்கு நூற்றாண்டுகளாகி விட்டன. இன்றும் சுய சிந்தனைக் கான தத்தளிப்பில்தான் இருக்கி றோம். நமக்கான சிந்தனை மரபை எப்படிக் கட்டிவளர்க்கலாம்?

நான்கு நூற்றாண்டுகளாக இழந்த சுயசிந்தனையை திடீரெனக் கட்டியெழுப்புவது என்பது கடின மான ஒரு செயலே ஆகும். பயனா ளிகளாக மட்டும் நான்கு நூற் றாண்டுகளாக வாழ்ந்து வரும் நாம் திடீரென மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம்தான். ஆனால் இன்று உலகமயமாகிய – மக்களின் சிந்தனையை தீர்மானிக் கும் சக்திகளாக ஊடகங்கள் உள் ளன. இந்த ஊடகங்கள் மூலமாகவே நாம் எமது மக்களிடையே எம்மைப் பற்றிய சிந்தனையை கட்டியெழுப்ப முடியும். இன்றைய வணிகமயப் பட்ட அறிவியல் உலகில் நாம் விலை போபவர்களாக மாறவேண்டிய நிர்ப் பந்தம் இருப்பதால் – எமது தனித் துவத்தைப் பேணவேண்டிய அவசி யம் இன்னமும் வலுவாகின்றது.

★ நீங்கள் ஒரு ஊடகக்காரரும் கூட, இந் நிலையில் நமது ஊடகப் பண்பாடு எப்படி இருக்கவேண்டும்?

இன்று உலகில் மூன்று வகை ஊடக வடிவங்கள் மக்களை ஆள் கின்றன. கேட்டல், வாசித்தல், பார்த் தல் என்ற வகையில் அமையும் ஊட கங்களே மக்களை கட்டியாள்கின் றன. இந்த ஊடகங்களே மக்களின் சிந்தனையைத் தீர்மானிக்கின்றன. அதனால் எமது ஊடகங்கள் மக்க ளின் சிந்தனையை கட்டியெழுப்ப வேண்டும். தமிழீழத் தேசியத் தலை வர் அவர்கள் தனது உரைகளில் கருத்துலகத்தை ஊடகங்களே கட்டி யெழுப்புகின்றன என்பதை வலியு றுத்துகின்றார். எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை எதிரான ஒரு கருத்துலகை சிறீலங் காவின் ஊடகம் மற்றும் வணிக மயப்பட்ட பிற ஊடகங்களும் கட்டி யெழுப்ப முயல்கின்றன. இது எமது சுயத்தை இழக்கச் செய்வதான நாச கார நடவடிக்கையாகும். இதற்கு எதி ராக எம்மைப் பற்றிய உண்மைக ளைக் கண்டறியவும் கட்டியெழுப்ப வும் நமது ஊடகங்கள் பாடுபட வேண்டிய கட்டாயம் எழுகின்றது.

எங்களது ஊடகங்கள் என்றால் – நான் பணிபுரியும் புலிகளின் குரல் வானொலி என்ற கேட்டல் ஊடகம், நிதர்சனம் – பார்த்தல் ஊடகம், மற்றும் அச்சு ஊடகங்கள் எமது சூழலில் இயங்குகின்றன. இந்த ஊட கங்களுடாகவே நாம் மக்களிடையே சிந்தனை மாற்றங்களைக் கொண்டு வரமுடியும். இவை புதிய உலகையும், எங்கள் உலகையும் தெரியவைக்க வேண்டும். அப்போதே எமது நிலையை நாம் உணர்ந்து கொள்ளமுடியும்.

★ நீங்கள் வானொலியினூடாகத் தொழிற்படுகிறீர்கள், கருத்து விரி வாக்கத்தில் இன்று வானொலிகள் வகிக்கின்ற முக்கியத்துவம் எப்படி இருக்கிறது?

இன்று உலக மட்டத்தில் வானொலிகள் ஒடுக்குமுறையை மேற் கொள்ளும் பணியையே அதிகளவில் செய்கின்றன. அதாவது ஆதிக்க சக் திகள் தம் நலன் பேணி சிறுபான் மையினர் மற்றும் ஏனைய மக்களை ஒடுக்கவும் சிந்தனை வளர்ச்சியை மழுங்கடிக்கவும், சுயத் தன்மையை இழக்கச் செய்யவுமே இவை இயக் கப்படுகின்றன. எமது வானொலி இத்தகைய ஒடுக்குமுறை ஊடகங்க ளுக்கு எதிராகவும் அவை கட்டி யெழுப்பும் மாயச் சிந்தனை முறையை மறுதலித்து உண்மையை புரிய வைப் பதற்காகவும் இயங்குகின்றது. விடுத லைப் போராட்டத்தின் நியாயப் பாட்டை உணர்த்துவதும் – எம்மை தெரியவைப்பதும் புதிய உலகை அறிமுகப்படுத்துவதும் தான் எமது வானொலியின் பிரதான நோக்கம். இன்று உலகமெங்கும் தமிழ் வானொ லிகள் இயங்குகின்ற போதும் – தமிழரால் – தமிழருக்கென்று தமிழ் மண்ணில் தன் சுயத்தோடு இயங் குகின்ற ஒரே வானொலி புலிகளின் குரல்தான். இதில் மாறுபாடான கருத்து இல்லை.

★ புலிகளின் குரல் வானொலி யில் நீங்கள் மேற்கொண்ட பண்பு களை சரியாக வெளிப்படுத்த போர் ஒரு சவாலாக இருக்கின்றதல்லவா? நமது போராட்டத்தை முன்னெடுக் கும் மிக வலுவான தொடர்பூடக மாகவும் அது இருக்கிறதால் போருக்கு முகம் கொடுக்க வேண்டும் தானே.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

✷ போர் ஒரு சவால் என்பது முக்கியமான விடயம்தான். ஆனால் தமிழர்கள் தமது அரசியல் தனித்துவத்தை – சுயத்தைப் பேணவும் மீட்கவுமாக இந்தப் போராட்டம் நடக்கின்றது. இந்தப் போராட்டம் வெற்றிகரமாக நிறைவுபெற்ற பின்பே அடுத்தகட்ட நகர்வை முழுமையாக எமது வானொலி செய்ய முடியும். இன்று சிறீலங்கா அரசு முடுக்கிவிட்டுள்ள போர் உச்சக்கட்டத்தை எட்டி தமிழர்களின் வாழ்வை சிதைத்து வருகின்றது. இந்த நிலையில் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கவும் – மக்கள் விரக்தி நிலைக்குச் செல்வதைத் தடுக்கவும் – மக்கள் மனதில் ஆரோக்கியமான கருத்துலகை கட்டியெழுப்புவதுமாக எமது வானொலி இயங்க வேண்டிய நிலையில் உள்ளது. அதனையே செய்தும் வருகின்றது. இன்று தாயகத்தில் மக்களுடன் கூடுதல் உறவுகொள்ளும் ஊடகமாக எமது வானொலியே இருக்கின்றமை குறிப்பிடவேண்டிய விடயம்.

★ ஊடகங்களுடன் எப்படி உங்களுக்குத் தொடர்பேற்பட்டது?

✷ ஊடகங்கள்தான் இன்று எல்லோரையும் ஆளுபவையாக உள்ளன. மாற்றத்தை, வளர்ச்சியை இவையே ஏற்படுத்துகின்றன. எனது ஆர்வமாக பிரதான ஊடகமாக ஒளிக்கலையே 1990 வரை இருந்தது. வானொலி ஊடகம் எமது மண்ணில் இல்லாதபடியால் அது குறித்து சிந்திக்கவேண்டிய ஆர்வம், கொள்ள வேண்டிய சேவை எனக்கிருக்க நியாயமில்லை. ஆனால் வானொலிகளைக் கேட்பவனாக இருந்திருக்கிறேன். புலிகளின் குரல் வானொலி ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்தின் முன் மட்டுமே அதற்கான பணிகளை நான் தொடங்கினேன். எனது வானொலி ஊடக அனுபவமும் – புலிகளின் குரல் வானொலியின் ஆரம்பத்துடனேயே தொடங்குகின்றது. ஏனென்றால் புலிகளின் குரல் வானொலி ஊடகமூடாகவே நான் வானொலி அனுபவத்தைப் பெற்றுக்கொண்டேன். இதில் எனது வளர்ச்சி என்பதை வானொலியில் எனது படைப்புகளூடாக நுகர்வோரே தீர்மானிக்க வேண்டும். நான் உரு

# வழி நெடுகிலும்

தமிழ்மாறன்

இரைச்சல் எகிறி எகிறி உயரவெழும்
கடலின் அலைகளின் நடுவே போரிட்டு
குருதியில் நனைந்து நனைந்து
நிகழுகின்றன நம் பயணங்கள்

இலக்கின் வீச்சுக்காய் முனைப்பாகி
நீரலையில் நுரைப் பெடுக்கும்
வெண்மணற்பரப்பில்
பதிந்தன பாதங்கள்.

மீண்டும் நகர்த்தலுக்காய்
இனி வனப்படர்ந்த மரங்களைக் கடந்து
முட்காடுகளினூடாகவும்
நதிகள் பிரவாகித்துச் செல்லும்
வழிகளினூடாகவும்
சுரிகள் நிறைந்த சதுப்பு நிலங்களினூடாகவும்
புதைந்து புதைந்து
கண்ணயர்ந்திடாது
களைப்புற்றுக் களைப்புற்று
வேதனைகள் சுமந்து
நிகழ்ந்தன பயணங்கள்.

தொலைவுகளுக்கப்பாலும்
நகரங்கள் அனைத்தும்
வெளிப்புற்றிருக்கையில்
ஆழ்ந்துறங்கும் வனத்துள்ளே
போராளிகள் நாம் விரைகிறோம்.

இத்தனைக்குள்ளும் வழிநெடுகிலும்
போர் நிகழ்கையில் வீழ்ந்த நம் தோழர்
வனத்துள்ளே விதைக்கப்பட்டனர்.
முற்றத்து மலர்களினால்
அஞ்சலிக்க முடியாதற்காய்
மனதில் வருந்தி நகர்ந்தோம்
காட்டு மரங்கள் மட்டும்
யாரும் பறிக்காமலே பூக்களைச் சொரிந்தன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாக்கும் எனது நிகழ்ச்சிகளை நான் சுய பரிசோதனை செய்யும்போது ஏதோ ஒரு போதாமை இருப்ப தாகவே உணர்கிறேன். நுகர்வோர் மட்டத்திலேயே அது பற்றிய உண் மையான மதிப்பீட்டை பெறமுடியும்.

★ வானொலியூடாகவும் பிற இதழ்களிலும் அறிவியல் விண்ணி யல் சூழலியல் விடயங்களைப் பேசி வருகிறீர்கள்! வெளிப்படுத்தி வருகி றீர்கள் அதேவேளை மாணவருக் கேற்ற முறையிலும் அறிவியல் விட யங்கள் எழுதப்படுகின்றன. பாட சாலைக் கல்விக்காலத்திலேயே அறி வியல் தொடர்பான விழிப்புணர்வு நம்மிடையே இல்லையல்லவா?

✹ ஆம். முன்னரே கூறியதுபோல எமது கல்விமுறை சூழலுக்கும் – நவீனத்துக்கும் ஏற்றது போல் இல்லை. வளர்ச்சியற்ற ஒரு கல்வி முறையான இது உத்தியோகத்தை அடிப்படையாக மட்டும் கொண் டது. இங்கு கணிதப் பாடத்தை கூட கரும்பலகையில் பார்த்து எழுதி சூத்திரங்களை மனப்பாடம் செய்து ஒப்புவித்து 4 ஏ எடுக்கும் வகையில் தான் இந்தக் கல்விமுறை உள்ளது. இந்தப் பெறுபேறுகளை மையமாகக் கொண்டே கல்விமுறை அமைந்துள் ளது. இது மாணவர்களை சிந்த னையற்றவர்களாக ஆக்கிவிட்டது. முளையிலேயே சிந்தனை ஆற்றலை மழுங்கடிக்கும் கல்வி முறையான இதை எமது ஆசிரியர் சமூகம் வலுப் படுத்துவது துக்கத்துக்குரியது. மன னம் செய்வதால் சிந்தனையாற்றல் குறைகின்றது. இதன் காரணத்தா லேயே கொம்பியூட்டர் சாதனங்கள் பதிவுகளுக்கு வந்துள்ளன. இதன் மூலம் மனநம் என்ற முறையைக் கைவிட்டு மாணவர்கள் சிந்தனை ஆற்றலை வளர்க்க முடியும். ஆனால் இலங்கையிலோ நிலைமை பூச்சியம். இங்கு சகாதேவன் என்ற நண்பர் இருக்கிறார். இவர் உயர்தரம் கலைப் பிரிவில் படித்தவர். ஆனால் கூடுதல் ஆர்வம் விவசாயம், உயிரியல் விட யங்களில்தான். அரிக்கன் லாம்பு அடைப்பொறி, துப்பாக்கி எண் ணெய் இவரது தயாரிப்புக்கள் கல் விக்கும் – இவரது ஆர்வத்துக்கும் என்ன தொடர்பு உள்ளது? இவரது ஆர்வத்துக்கு கல்வி எந்தளவு துணை போயுள்ளது என்பதைப் புரியமுடி யும்?

★ உங்களுடைய கற்றல் மனோ பாவம் பாடசாலைக் காலத்திலும் பின்பும் எப்படி இருந்துள்ளது?

✹ எனது இப்போதைய வயது 29. உயர்தரம் கணிதம் கற்றேன். பல பாடசாலைகளில் கல்விகளைக் கற்ற போதும் நீண்ட பாடசாலை நாட் கள் யாழ் மத்திய கல்லூரியில் கழிந் தது. பிறப்பிடம் யாழ் தீவகம் –ஊர் காவற்துறை, புளியங்கூடல். வாழ் வின் அதிக நாட்கள் யாழ் நகரை அண்மிய பகுதிகளிலேயே சென்றன.

ஊடக ஈடுபாடுகளில் எனது நுழைவு ஆர்வம் எப்படி ஏற்பட்ட தென்றால் எப்பொழுதும் நான் – நான் வாழும் சூழலை அறியவே முயன்று வந்துள்ளேன். இதனால் கூடுதல் அவதானிப்புத் திறனை வளர்த்துக் கொண்டிருக்கிறேன். யதார்த்தம் மீது அதிக ஈடுபாடு கொண்டதால் அது சார்ந்த ஊட கங்களே அதிகளவில் மனதில் ஆதிக் கம் செலுத்தின. யதார்த்தத்தை அதி கமாகப் பதிவு செய்யும் காரணத் தாலே ஒளி ஊடகம் என்னை ஆட் கொண்டது. 1988 வரை நான் கமரா சாதனம் எதுவும் இல்லாத வெறும் காட்சிப் பார்வையாளனாக மட் டுமே இருக்க முடிந்தது. 1988 –ல் நண்பரொருவரின் கமராவினை இர வல் பெற்று குறைந்த எண்ணிக் கையில் ஒளிப்படங்களை எடுக்க ஆரம்பித்தேன். புலிகளின் குரலுடன் இணைந்த பின் நேரம் கிடைக்கும் போது ஒளிப்படங்களை எடுத்து வருகிறேன். ஒளிப்படப்பிடிப்பு மூலம் ஒரு திருப்தியை நான் எட்டுகிறேன்.

எனது மூத்த சகோதரர் சிறந்த வாசிப்பாளராக இருந்தபடியால் நானும் வாசிக்க, அறிய மூலங்கள் கிடைத்தன. வாசிப்பில் எனது கூடு தல் விருப்பு யதார்த்த உலகை – சூழலை – இயற்கையை கொண்ட வற்றின் மீதே உள்ளது. சிறுகதை, நாவல், சினிமா, வானொலி எதுவா னாலும் இதையே நான் தேடுகிறேன். எனது சூழலின் மீதான தேடலே எனக்கு கூடுதல் வாசிப்புத்திறனை ஏற்படுத்தியது. 1988–ன் பின் கலை, இலக்கிய நண்பர்களின் தொடர்பு கள் புதியவற்றை அறியவும் – கருத்து ரீதியான தெளிவை அடையவும் உதவின.

தேடலின் ஒரு கட்டமாகவே நவீன அறிவியலின் போக்குகளை அறியும் ஆர்வம் எனக்கு உண்டாக் கியது. முடியும் என்ற உண்மையே அறிவியல் என்பதால் அதன் மீதான ஆர்வம் எனக்கு அதிகமாகியது. அறிவியலின் மூலம் அற்புதங்கள் என்பவை உடைக்கப்படுகின்றன. நிகழ்தல் என்பது உண்மையானால் அதில் எதுவித அற்புதங்களும் இல்லை. ஆச்சரியம் வியப்பு இருக்கலாம்.

அறிவியல் போக்கு குறித்துப் பார்த்தால் மனிதனின் சிந்தனைத் திறன் குறித்தே வியப்படைய வேண் டும்.

★ உங்களுடைய ஒளிப்படங்கள் காலப்பதிவாகவும் சூழலின் அடை யாளமுமாக இருக்கின்றன. எங்கள் சமூகத்தின் ஒளிப்படக்கலை குறித்த அக்கறை – அறிவு பற்றி என்ற கூறு கிறீர்கள்?

✹ ஒரு காலகட்டத்தில் ஓவியம் மூலம் காலம் பதிவானது. ஒளிப்பட வருகையின் பின் ஓவியம் சுயாதீன ஆக்க வேலைகளை தொடங்கியது. இது நவீன ஓவியம். ஒளிப்படம் எங்கள் சமூகத்தில் சடங்குச் சாதன மாகவே உள்ளது. காலத்தின் சூழ லில் பதிவுகளை அது செய்யவில்லை. சடங்குகளை பதிவு செய்வதில்கூட முறையற்ற தன்மை. சடங்கை ஒளிப் படம் பதிவு செய்ய வேண்டும். ஆனால் ஒளிப்படக்காரர்கள் தமக்கு ஏற்ப சடங்குகளை நெறிப்படுத்தி ஒளிப்படத்துக்கான சடங்காக மாற்றியிருப்பது பின்னடைவான விடயம்.

உலகம் இயங்கிக்கொண்டுள்ளது. இந்த இயக்கத்தை அதன் போக்கிலே விட்டுவிட்டு – அதனை மூன்றாம் மனிதனாக நின்று பதிவு செய்தாலே ஒளிக்கலைஞனின் பணி, இயங்கு பவை – இயங்குபவையாகவும் அல் லாதவை சடமாகவும் இருக்கவேண் டும். இயங்குபவற்றை நிறுத்தி பதிவு செய்வது ஒரு சடலத்தை படமெடுப் பதற்கு சமமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத் தைப் பொறுத்தவரை ஒளிப்படமே



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறையச் சாதிக்கின்றது.

ஏனென்றால் ஒரு வரலாற்றுக்கு ஒளிப்படத்தை விட மேலான சாட்சி எதுவுமில்லை. 2–ம் உலகப்போர் – வியட்னாம் போர் போன்றவற்றை அவதானித்தீர்களானால் இங்கு ஒளிப்படச் சாதனையை விளங்க லாம். ஒளிக்கலை தமிழீழ விடுத லைப் போராட்டத்தில் சிறப்பான பங்களிப்பை வழங்குகிறது. இந்தச் சூழலில் உள்ள ஒளிக்கலை நிறுவ னங்கள் கமராக்களை சடங்குச் சாத னமாக மட்டும் பயன்படுத்துவது ஆரோக்கியமற்றது. அத்துடன் கமராவை தொழில்நுட்பச்சாதன மாக மட்டும் கருதுவது தவறான விடயம்.

இன்று உலகளவில் ஒளிப்படங்க ளுக்கே கூடுதல் இடம் உள்ளது. என்னைப் பொறுத்தவரை நான் எமது சூழலை, அதன் இயக்கத்தை, பரிமாணத்தை எம்மைப் புலப்படுத் தும் அடையாளங்களுடன் ஒளிப் படங்களை எடுப்பதிலேயே ஈடுபடு கிறேன். இன்று உலகின் ஒளிப்படக் கலைஞர்கள் இதனையே செய்கின் றனர்.

★ வாழ்க்கை முறைகளும் கலாச் சார அடையாளங்களும் பிரதிபலிக் கக் கூடிய வகையில் மேற்கின் ஓவி யர்கள் பல நூற்றாண்டுகளாகச் செயற்பட்டிருக்கிறார்கள். பிறகு இதை ஒளிப்படம் செய்யத் தொடங்கியது. நமக்கு ஓவியத்திலோ ஒளிப்படத் திலோ இன்றுவரை இப்படி ஒரு பழக்கம் இல்லையே. இது ஏன்?

✸ இதற்கு எமது சூழலில் ஒளிப் படத்தை அறிமுக காலத்தில் கையாண் டவர்கள் தவறு விட்டுவிட்டார்கள். மேற்குலகில் காலத்தைப் பதிவு செய் தல் என்பதில் கூடுதல் ஆர்வம் ஈடு பாடும் கொண்ட மனிதர்கள் அதற் கான தேவை கருதியே இந்தச் சாத னத்தைக் கண்டுபிடித்தனர். அதற்கே அதனைப் பயன்படுத்தினர். ஆனால் அது எமது சூழலில் அறிமுகப்படுத் தப்பட்ட போது அதனைக் கையாண்ட எமது முன்னோர்கள் சூழலில் இருந்து அதனைப் பிரித்து ஒரு அறையுள் முடக்கி ஒரு சடங்குச் சாத னமாக்கினர். இதுவே தொடர்ந்து ஒரு மரபாகிவிட்டது. இந்த மரபே மக்களுக்கு ஒரு சூத்திரமான ரசனை யாக்கப்பட்டது. அதனால் இதனை மீற எவரும் முற்படவில்லை. மக்கள் இதனையே விரும்புகிறார்கள் என் பது சாதனக்காரர்களின் வாதம். ஆனால் இவர்கள் ஏதாவது மாற் றத்தைக் கொண்டு வந்து மக்கள் முன் வைத்து கருத்தறிந்தார்களா என்றால் அது இல்லை. அப்படி சாதனத்தைக் கையாளுபவர்களின் மனதில் மாற்றம் ஏற்படவில்லை. மாற்றத்துக்கும் அவர்கள் தயாரில்லை. அது தமிழர்களின் தலைமுறைப் பழக்கமாக உறுதி எழுதியாகிவிட்ட நிலைமைதான்.

உண்மையில் கூறப்போனால் கம ராவுக்கு விடுதலை வேண்டும் என் பதே இப்போதைய கோரிக்கை. ஏனென்றால் காட்சி ஊடகமாகவே காலத்தைப் பதிவு செய்தால் மேற் குலகம் தனக்கென ஒரு வரலாற்றை போதிய ஆதாரங்களுடன் பேணி யுள்ளது. அதுவே அவர்கள் மாற்றங் களைக் காணவும் உதவியது. ஆனால் எம்மிடம் சாதனம் இருந்தும் வர லாற்றை பதிவு செய்யாத தவறை ஒளிப்படக்காரர்கள் செய்கிறார்கள்.

★ எங்களுடைய கல்வியின் குறை பாடு நாம் பிறரிடம் தங்கி வாழும் நிலைமையும் சரணாகதி மனோபா வத்தையுமே வழங்கி வருகிறது. இந்த நிலையில் நமது வேர்களைக் கண் டறியவும் நம் வாழ்வை மீட்கவும் அவசியமான எமது விடுதலைப் போராட்டத்தில் இளைய தலை முறையை இணைக்கவும் முழு மக் களை ஒருமுகப்படுத்தவும் என்ன செய்யலாம்?

✸ இதில் இருக்கும் பிரச்சினை யைப் பார்த்தால் நாங்கள் சகலவிதத் திலும் எங்களை இழந்தவர்களாகவே உள்ளோம். வேர்களை விட்டு நாம் சிந்தனை, பண்பாட்டு ஆக்கிரமிப்பி னுள் ஆளாகி இருக்கிறோம். அதா வது நம் கல்வி முறை ஒடுக்குமுறை சக்திகளின் சிந்தனையே எம்மீது திணித்துள்ளது. இது எம்மை எம் சூழலில் எம் சூழலுக்கு இசைவாக வாழவிடவில்லை. இத்தகைய சூழ லில் நாம் எம்மைப்பற்றி உணர்ந்தவர் களாக இல்லை. எம் வேர்களை நாம் உணரவேண்டும். இதற்காக பின் னோக்கி நாம் செல்ல வேண்டும் எனக்கூறவில்லை. உலகின் சமகால போக்கிற்கு ஏற்ப நாம் எமது சூழலில் இருந்து அதன் அடிப்படையில் மாற் றத்தைக் கொண்டுவர வேண்டும். இது இல்லாது போகும்போது எமக்கு எம் நிலை குறித்த பிரக்ஞை ஏற்பட சாத்தியம் இல்லை. நீண்ட நோக்கில் எமது எதிர்காலத்தினை அடிப்படையாக பார்த்தாலும் சம காலத்தில் பார்த்தாலும் நாம் ஒட்டு மொத்தமாக போராட்ட உணர்வை பெற அல்லது இசைய எம் சிந்தனை எமது சூழலிருந்து பிறக்கவேண்டும். இதற்கு நாம் சீனாவை உதாரணமாக கொள்ளலாம். அந்நியர் வருகையு டன் நாம் இருந்ததை இழந்துபோ னோம். சீனாவில் அந்நியர் வருகை யின் போது இழக்கப்பட்டதை மீட் டதுவும் புதியதொரு கட்டத்துக்கு நாட்டை நகர்த்தியதும் ஒரே கட் டத்தில் நிகழ்ந்தன. இந்தியாவிலும் ஓரளவுக்கு இத்தகைய போக்கு இருந்தது. ஆனால் நாம் இத்தகைய போக்கை வளர்க்கவில்லை.

இத்தகைய போக்கை நாம் ஏற்ப டுத்தினாலேயே ஒட்டுமொத்த மாற் றத்தையும் தேசியம் மீதான பற்றை யும் உருவாக்க முடியும். இதற்கு நமது சூழலில் பண்பாட்டுத்தளத்திலும், அறிவுத் தளத்திலும் இயங்குபவர்கள் முதலில் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் இவர்களே சமூகத்தின் கருத்துருவாக்கிகளாக உள்ளனர்.

இங்கு மாற்றத்தை ஏற்படுத்தும் செயலே பெரியதொரு போராட்டப் பங்காக இருக்கும். இந்த கருத்து ருவாக்கிகள் இந்த தளத்திலிருந்து மீறிச்செல்வது என்பது அவர்கள் தமிழ்த் தேசியப்போராட்டத்துக்கு இழைக்கும் மிகமோசமான துரோ கமாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெற்றிமனையில் ஒருநாள்

தமிழவள்

உங்களுக்கு எத்தனை வயது?

29 வயது. 20 வயதில் கலியாணம் செய்தனான்.

வருத்தம் ஏதாவது இருக்கா?

சின்னனில வலிப்பு வந்ததாம். இப்ப கலியாணம் செய்தாப்பிறகு இடைக்கிடை வரும்.

வீட்டை போக விருப்பமா உங்களுக்கு?

ஓ... வீட்டை போனால் தோட்டம் ஏதும் செய்யலாம். செய்தா சங்கிலி காப்பாவது வேண்டலாம் தானே? நீங்கள் என்ன சொல்லுறியள்?

சங்கிலி காப்பு விருப்பமா?

ஓ... விருப்பம். படிச்சனாங்கள் எண்டபடியா இப்படிச் சொல்லுறம். இங்க இருக்கிற மற்றதுகளுக்கு ஒன்றும் விளங்காது.

வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் எல்லோரும் கோயிலுக்குப் போய் வருகினமாம். நீங்கள் போறேல்லையோ?

இல்லை நான் போறேல்லை. கோயிலுக்குப் போறதெண்டால் வீட்டைபோய் அப்பா, தங்கையோடு மனுசன் பிள்ளைகளோடதான் போவேன். நாங்கள் படிச்சனாங்கள் எண்டபடியால் இப்படி யோசிக்கிறம். இஞ்ச இருக்கிறதுகள் இப்படி யோசிக்காதுகள்.

எத்தனையாம் வகுப்பு மட்டும் படிச்சனீங்கள்?

ஏழோ எட்டாம் வகுப்புப்படிச்சிருக்கவேணும்.

★★★

உங்கட பெயர் என்ன?

சர்மிளா.

சர்மிளா என்ன படிச்சனிங்கள்.

சகோரங்களால கவலை.

சர்மிளாவுக்கு எத்தனை வயது?

தெரியாது.சகோரங்களால கவலை.

இந்த பூக்கன்றுகள் எல்லாம் நீங்களா வளர்க்கிறீர்கள்?

ஓம். எனக்கு சகோரங்களால கவலை.

எத்தனை சகோதரங்கள் உங்களுக்கு?

எனக்கு சகோரங்களால சரியான கவலை.

(மிகமிக மெதுவான குரலிலேயே கதைக்கும் இந்த 18 வயது சர்மிளாவின் கதையை மிகவும் சிரமப்பட்டே கிரகிக்க முடிகிறது.)

★★★

அம்மா! எப்ப இங்க வந்தனீங்கள்?

92–ம் ஆண்டு கொண்டுவந்து விட்டிட்டினம்.

பிள்ளைகள் இருக்கினமா அம்மா?

ஓ... மூன்று பிள்ளைகள். உங்களுக்கு பராசக்தி ரீச்சரை தெரியுமா?

உங்கட கணவர் என்ன செய்கிறார்?

என்ர நகை காசு எல்லாத்தையும் அழிச்சிட்டு என்னையும் கைவிட்டுட்டார். பராசக்தி ரீச்சர் இருக்கிறாவல்லோ? அவ எங்கட அக்கா.

நிறைய சீதனம் கொடுத்தா கலியாணம் செய்தனீங்கள்?

ஓ... 3 லட்சம் காசு, ஆறு சோடி காப்பு, 3 பரப்பு வீடு வளவு, சங்கிலியள். பராசக்தி ரீச்சரை சந்திப்பிங்களா?

உங்களைப் பார்க்க ஒருவரும் வருவதில்லையா?

என்ர எல்லாச் சொத்தையும் பறிச்சு அழிச்சிட்டு என்னை இங்க கொண்டு வந்து தள்ளிவிட்டுட்டு எல்லோரும் போயிற்றினம். (அழுகை)

★★★

சாந்திமதி அம்மா! இங்க எப்படி பொழுதுபோகுது?

ரீ.வி பார்ப்பம், பாட்டுக் கேட்பம்.

பாட்டு விருப்பமா?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்கு ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடும் சினிமாப் பாட்டுகள் விருப்பம். சோகப் பாட்டு, காதல் பாட்டு எல்லாம் விருப்பம்.

ஒரு பாட்டுப் பாடிக் காட்டுறீங்களா?

நாளை நமதே படத்தில் ஜேசுதாஸ் சுசீலா பாடிய பாட்டை பாடட்டுமா?

நீல நயனங்களில் ஒரு நீண்ட கனவு வந்தது.... (ஆண் குரலும் பெண் குரலுமாக தானே குரலை மாற்றி மாற்றி பாடலை முழுமையாக ரசித்து பாடுகிறார்).

இங்க சந்தோஷமாய் இருக்கின்றீர்களா?

ஓ மனமகிழ்ச்சியா சந்தோஷமா இருக்கின்றன்.

இங்க வரமுன் என்ன செய்துகொண்டு இருந்தனீங்கள்?

பிச்சை எடுத்துக் கொண்டு திரிஞ்சனான்.

★★★

உங்களுக்கு இப்பவும் வலிப்பு மனக்குழப்பம் அடிக்கடி வருகுதா?

இல்லை இப்ப குறைவு. இருந்திட்டு வரும்.

எப்ப உங்களுக்கு இந்த வருத்தம் தொடங்கினது?

என்ர அண்ணை ஒருத்தர் நல்லாய்ப் படிச்சவர். படிச்சுப் படிச்சு அவருக்கு திடீரென்று மூளை சுகமில்லாமல் போச்சு. அவரைப் பற்றி யோசிச்சு யோசிச்சு எனக்கு இந்த வருத்தம் வந்திட்டுது. நான் எஸ்.எஸ்.சி படிச்சனான். (மிகவும் படித்த குடும்பத்திலிருந்து வந்த இவர் சாதாரணமாக கதைக்கும்போது ஆங்கிலச் சொற்களை அதிகமாகப் பாவிக்கிறார்).

நான் ஒரு பாட்டுப் பாடிக் காட்டட்டுமா?

உலகோர் உன்னைப் பகைத்தாலும்
உண்மையாய் அன்பு
செய்வாயா?
உற்றார் உன்னை
வெறுத்தாலும்
உந்தன் சிலுவை
சுமப்பாயா?...



கோடானுகோடி உயிர்கள் தங்கள் தங்களுக்கென ஒரு இடத்தை தேடிக்கொண்டிருக்கும் உலகில் தங்கள் தங்களுக்கென தனித்தனி உலகங்களையே உருவாக்கி அதில் சகலமும் தாங்களே ஆகி வாழுகின்ற இவர்களின் எதிர்காலம் எப்போதுமே கேள்விக்குறிதான்



★★★

ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாத இந்த உரையாடல்கள் குழப்பத்தைத் தருகிறதா? உங்களுக்கு மட்டுமல்ல இவர்கள் தங்களுக்குள்ளேயே புலம்பிக் கொண்டு பெரும்பாலான நடவடிக்கைகளில் குழந்தைகளாகவே இருப்பவர்கள். சமூகத்தால் மனநோயாளர்களாக இனங்காணப்பட்டவர்கள். இங்கு குறிப்பிட்ட பெயர்கள் நிஜமில்லையே தவிர இவர்கள் எமக்கு மிக அருகே இருப்பவர்கள்தான்.

கோடானுகோடி உயிர்கள் தங்கள் தங்களுக்கென ஒரு இடத்தை தேடிக்கொண்டிருக்கும் உலகில் தங்கள் தங்களுக்கென தனித்தனி உலகங்களையே உருவாக்கி அதில் சகலமும் தாங்களே ஆகி வாழுகின்ற இவர்களின் எதிர்காலம் எப்போதுமே கேள்விக்குறிதான். தத்தமது உலகத்தில் தனித்தனி நியாயங்களையும் நடைமுறைகளையும் உருவாக்கி வாழும் இவர்கள் தாம் புரியும் எந்தக் காரியத்திற்கும் ஒரு காரணம் உண்டு என்பதை உறுதியாக நம்புபவர்கள். அவர்களின் காரியங்களுக்கான காரணங்கள் சாதாரண மனிதருக்குப் புரிவதில்லை. எனினும் அவர்களுக்கு அவை சரியானவை. ஏனெனில் அவர்களின் உலகத்தில் எல்லாமே அவர்கள் மட்டுமே.

வீதிகளிலும் வீடுகளிலும் அலைந்து துன்பப்பட்ட, மனநிலை பாதிக்கப்பட்ட மனநோயாளர்களுக்கான வெற்றிமனை என்ற பெயரோடு இயங்கும் இல்லமானது 91–ம் ஆண்டு காலப்பகுதியிலேயே உருவாக்கப்பட்டுவிட்ட ஒன்று. ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் நாவாந்துறை பின்னர் விசுவமடுவிலும் வைத்துப் பராமரிக்கப்பட்டு தற்போது அக்கராயனில் "வெற்றிமனை" ஆக உருவாக்கம் கண்டுள்ளது.

இங்குள்ளவர்கள் பலவிதமான தாக்கங்களால்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோயாளரானவர்கள். பிறப்பிலேயே புத்திசுவாதின மற்றவர்கள் ஒரு சிலரைத் தவிர மீதி அனைத்துப் பேரும் புறச்சூழ்நிலைகளால் இந்த நிலைக்கு ஆளானவர்களே. சிறுமிகள் தொடக்கம் இளவயதினர், மூதாட்டிகள் என்ற பலதரப்பட்ட பருவத்தினரும் இந்த பராமரிப்புக்குட்பட்டிருக்கின்றனர்.

திருமணமாகிய பின் கணவன் மற்றும் அவனது உறவினர்களால் துன்புறுத்தப்பட்டும், வலிப்பு மற்றும் மன நிலை குழப்பம் உள்ளவர்கள் என்றிருந்து கணவனால் கைவிடப்பட்டும், கொண்டு சென்ற சீதனப்பொருட்கள் அனைத்தும் சுரண்டப்பட்டு கணவனால் அடித்து விரட்டப்பட்டும், உறவுகள் யாருமற்று பிச்சை எடுத்துப் பிழைப்பு நடத்திய வேளை பாலியல் வக்கிர எண்ணம் கொண்டவர்களால் சீரழிக்கப்பட்டும், குடும்ப வறுமை காரணமாக திருமண வாழ்வு மறுக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டும், நெருங்கிய உறவுகள் மனநோயாளிகளாகி விட்டார்களே என்பதை எண்ணி, எண்ணி மனநிலை பாதிக்கப்பட்டும், வீட்டு வேலைக்காக நின்ற இடங்களில் எஜமானர்களால் துன்புறுத்தப்பட்டு மனநோயாளியாகியும், பாலியல் ரீதியான துன்புறுத்தலினால் பாதிக்கப்பட்டும், சொந்த சகோதரிகளால் துன்புறுத்தப்பட்டு பாதிப்புக்குள்ளாகியும் என பலதரப்பட்ட காரணங்களால் இவர்கள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

இங்குள்ள ஒவ்வொருவரின் கதையும் ஒவ்வொருவிதம். மனச்சாட்சி உள்ள ஒவ்வொருவரையும் உலுக்கி எடுக்கும் அவர்களது கடந்த கால வாழ்க்கை மிகவும் அவலம்



**தம்மைத் தேடி உறவுகள் யாரேனும் வருவார்களா என்று ஏக்கத்தோடு பார்த்திருக்கும் அந்த உள்ளங்களை ஒருதரமேனும் நேரில் சென்று சந்தியுங்களேன்.**

நிறைந்ததெனினும் தற்போது அவர்கள் கொஞ்சம் மகிழ்ச்சியாகவும் நோயின் தாக்கங்களில் இருந்து சற்றேனும் விடுபட்டவர்களாகவும் இருப்பது மன நிறைவையே தருகிறது.

மாதம் ஒரு தடவை மருத்துவப் பரிசோதனை மற்றும் உளவளத்துணையாளர்களின் வருகை போன்றவை இவர்களை ஓரளவு நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளது. இவர்களுக்கான உளவளத் துணையாளர் ஒருவர் "நாம் இவர்களுடன் உரையாடும்போது மிகவும் சந்தோஷமாக இருப்பார்கள். கொஞ்ச நாட்களுக்கு அந்த சந்தோஷம் அவர்களிடம் இருக்கும். தொடர்ந்து கதைப்பதினால் அவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவர முடியும். தங்களின் சுமைகளை இறக்கிவைக்கும் பாத்திரங்கலாக அவர்கள் எங்களை கருதுகிறார்கள். எங்களது பணியும் அதுதான். ஆனால் தொடர்ந்து அவர்களுடன் உரையாடுவதற்கு எமக்கு நேரப் பிரச்சினை தடையாகிறது" என்றார்.

எனினும் இவர்கள் முழுமையாக குணமடைந்து சாதாரண மனிதர்களாக வெளியேறி இயல்பு வாழ்விற்கு திரும்புவதென்பது சாத்தியமற்றதாகவே உள்ளது. ஏனெனில் ஒரு சிலரைத் தவிர ஏனையோரைப் பொறுப்பெடுக்கவோ, இயல்பாக குடும்பங்களில் கலந்து வாழ்ந்து அரவணைப்பதற்கோ, உறவுகள் யாரும் இல்லை என்பதும் ஒரு காரணமாகும்.

"வெற்றிமனை" நிர்வாகத்தினர் இவர்களுக்கு சில சிறிய கைத்தொழில் பயிற்சிகளை ஆரம்பிக்கும் திட்டத்துடன் இருந்தாலும் இதுவரை ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டத்திற்கமைய எந்தப் பயிற்சிகளும் அளிக்கப்படவில்லை. வீட்டுத் தோட்ட அளவிலான பயிர்கள் செய்வது. பூங்கன்றுகளை நட்டு அவற்றை பராமரிப்பது. தமக்கான சமையற் கூடத்தில் சிறு சிறு உதவிகள் செய்வது. மற்றும் ஆரம்ப கல்வி கற்பது போன்றவையே இன்றுவரை அவர்களது மனதை ஒரு நிலைப்படுத்துவதற்காக நடைமுறையில் உள்ளவையாகும்.

இவற்றைவிட அவர்களுக்கான பொழுது போக்காக திரைப்படங்கள் போடுதல், பாட்டுக்கேட்பதற்கான ஒழுங்குகள், வெள்ளி, செவ்வாய் நாட்களில் கோயில்களுக்கு அனுமதித்தல் போன்ற சலுகைகளும் அவர்களுக்கு உண்டு.

யுத்த சூழ்நிலைகளால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதுகாப்பு நெருக்கடிகளுக்குள் அநாதரவான சிறுவர் சிறுமியரின் எதிர்கால நல்வாழ்வு கருதியும் உருவாக்கப்பட்டு சிறப்பாக



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயங்கிவரும் செஞ்சோலை மற்றும் அறிவுச் சோலை இவர்களின் வரிசையில் வெற்றிமனையும் ஒரு மனிதாபிமான முயற்சியே.

பலதரப்பட்ட பாதிப்புக்களால் இந் நிலைக்குத் தள்ளப்பட்ட அனைவரும் இயல்பு நிலைக்குத் திரும்புவது சாத்தியமில்லை எனினும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் அவர்களுக்குக் கிடைக்கும் பராமரிப்புக்களினாலும் அன்பான அரவணைப்புக்களினாலும் இயல்பு நிலைக்கு திரும்பக்கூடியவர்களே. அவர்களுக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் அன்பும் அரவணைப்பும். தமது துன்பங்களைச் சொல்லி ஆறுவதற்கான உறவுகளுமே. மிகச் சிரமம் வாய்ந்த இந்தப் பணியினை வெற்றிமனை நிர்வாகத்தினர் செவ்வனே நடத்தினாலும் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புணர்வோடும் சமூகசேவை மனப்பாங்குடனும் தமது வாழ்நாளில் ஒரேயொரு நாளைத் தன்னும் இவர்களுக்கென்று ஒதிக்கி அவர்களிடம் சென்று உரையாடி சந்தோஷப்படுத்தி உதவிகள் புரிந்தால் அது அவர்களுக்குக் கிடைக்கும் மாபெரும் சிகிச்சையாக அமையும் என்பது முற்றிலும் உண்மை.

அந்த அழகான தென்னஞ் சோலை வளாகத்தினுள் தம்மைத் தேடி உறவுகள் யாரேனும் வருவார்களா என்று ஏக்கத்தோடு பார்த்திருக்கும் அந்த உள்ளங்களை ஒருதரமேனும் நேரில் சென்று சந்தியுங்களேன். இதில் சொல்லாத எத்தனையோ விடயங்கள் மனதை உலுக்கும் சோகங்கள், சிலரின் பலவீனங்களை தமக்கு சாதகமாக்கிய மனித வக்கிரங்கள் உங்களுக்குத் தெரிவரும்.

# சாயங்காலத் துடிப்புகள்



உரமேறிய கால்கள் பலமற்றுப் போயின
வலுவேறின கைகள் உணர்வற்றுத் தொய்ந்தன
இளமைத்துடிப்பில் அன்று திளைத்தது
முதுமைச்சுமையில் இன்று களைத்தது.

கண்கள் வெளிறி ஒளியை இழந்தன
சீண்டாதப் புண்கள் புரையோடிப்போயின.

ஒட்டிப்பிடித்த சொந்தங்கள் இன்று
ஓட்டம் பிடித்தன அவர் நிலைகண்டு.

அன்புடன் தழுவிய நட்புகள்
அகன்றன அவரது வெறுங்கை பார்த்து

தோள்மீது தூக்கி வளர்த்திட்ட பிள்ளையும்
தொல்லையென விரட்டி அடிக்கிறான் வெளியே.

'வயதான காலத்தில் சத்தங்கள் போடாதே
தேவாரம் படிப்பதாய் கத்தித் தொலையாதே
பசிகாதை யடைத்தாலும் வாய்விட்டுக் கேட்காதே
என்னவளிடம் இங்கிதமில்லாமல் நடவாதே'
போர்ப்புழுதிசூழ்ந்தது.
வெந்தணலில் நித்தமும் வேகின்ற மனமும்
மௌனமாய்க் கதறியழும் தவிப்புடனே தினமும்.

ஏன் மனிதா இப்படிப் பாதகம் உன்னுள்?
இளமையும் முதுமையும் நாடியே செல்லும்
கருணையும் அன்பும் பாரினில் வெல்லும்
உரிமையும் உணர்வுமே ஓர்பெருஞ் செல்வம், உணர்.

வி.அகல்யா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூது




அன்பின் அண்ணா!

உங்களின் கடிதத்தைப் பார்த்ததும் கவலை ஏற்பட்டது. வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழரும் தாம் படுகின்ற துன்ப துயரங்களை மீறி இயந்திரம் போல ஓய்வின்றி உழைக்கிறார்கள். இந்த உழைப்பு வசதியான ஒரு வாழ்வைத் தந்திருந்தாலும் அந்நாடுகளில் நீங்கள் படும் அந்நிய உணர்வும், தாயக நினைவுகளும் மகிழ்வையும் நிறைவையும் தராமல் தத்தளிப்பில் உங்களைத் தள்ளிவிடுகின்றன. பிறந்த மண்ணைவிட்டு ஒரு மனிதன் எத்தகைய மேலான வாழ்வையும் நிம்மதியுடன் வாழமுடியாது. உங்களின் கடிதங்களின் அடிநாதம் இதுதான். ‘என்று தமிழினம் தமிழீழத்தில் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்கின்றதோ அன்றேல் தமிழர் உலகத்தில் தலை நிமிர்வார்கள்’ என்று நீங்கள் எழுதியதை நண்பர்களுக்குக் காட்டினேன். மகிழ்ந்தார்கள்.

மேலும் இங்கே இராணுவ நடவடிக்கைகளும் அரசின் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையும் மிகமோசமாகத் தொடர்கிறது. எவ்வளவுக்கு சமாதானத்தைப் பற்றி அரசு பெரும் பிரகடனங்கள் செய்கிறதோ அவ்வளவுக்கு அதற்கெதிராக அது செயற்படுகிறது. கடந்த மாதம் 51–வது சுதந்திர தினத்தை அரசு கொண்டாடியது. சுதந்திரமற்ற நிலையில் பெரும்பீதியுடனே அது நடந்தது. மட்டக்களப்பில் விபுலானந்தர் கல்லூரி மாணவிகள் இலங்கையின் தேசிய கீதத்தை இசைப்பதற்கு மறுத்துவிட்டனர். இது பாராட்ட வேண்டியதல்லவா? இது தவிர இங்கே பல இளைஞரும் யுவதிகளும் போராட்ட உணர்வுடன் இயக்கத்தில் சேருகிறார்கள். இங்கு நடக்கும் ஒவ்வொரு நிகழ்விலும் மக்கள் உணர்வுடன் பங்கேற்கிறார்கள். இராணுவத் தாக்குதல்களால் காயப்படும் மக்களுக்கும் போராளி களுக்கும் குருதித்தானமும் செய்கின்றனர்.

அண்ணா! அருளம்மா அக்காவின் மூத்தமகன் ‘கொலரா’ தாக்கி இறந்துவிட்டான். தமிழீழ சுகாதார சேவையினர் கொலரா தடுப்பில் ஈடுபட்டு அதை கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர். உங்களின் நண்பர் குமரண்ணா அவர்களுடைய வீட்டைப் பார்க்கச் சென்று மிதிவெடியில் சிக்கி இடது காலை இழந்து விட்டார். உங்களது நண்பர்கள் உங்களை விசாரித்தனர். இப்பொழுது கடும் வெயிலும், இரவில் பனிக்குளிரும் வாட்டுகிறது. இடம்பெயர்ந்தவர்கள், குழந்தைகள் படும் அவதி கொஞ்சமல்ல. நெல் அறுவடையும் தொடங்கிவிட்டது. மாரிமழையின் ஒழுங்கின்மையால் சரியான விளைச்சலில்லை. முத்தையன் கட்டுப்பகுதியில் அறுவடை செய்ய முடியாமல் வயல்களுக்குள் ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கின்றன. அங்கே செல்ல மக்கள் அஞ்சுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தலைவெட்டப்பட்ட உடல் ஒன்று தெருவில் கிடந்ததாகத் தகவல். வடமராட்சியில் தமிழ்க் குழுவொன்றின் முகாமினுள் மக்கள் புகுந்து தாக்கி அங்கிருந்த உடைமைகளுக்குத் தீமூட்டிக் கொழுத்தியுள்ளார்கள். ‘ரணகோஷ’ என்ற புதிய இராணுவ நடவடிக்கையால் மீண்டும் அகதிகளாகியுள்ளனர் நம் மக்கள். செழிப்பான வன்னியின் கிராமங்கள் சில மேலும் படையினரால் சிதைக்கப்படுகின்றன. மல்லாவியில் இடம்பெயர்ந்து தங்க இடமின்றி குடும்பமொன்றின் 3 மாதக் குழந்தை மரத்தின் கீழ் படுத்ததால் கடுங்குளிரில் விறைத்து இறந்துவிட்டது.

காந்தரூபன் அறிவுச்சோலையில் விளையாட்டுப் போட்டியும் இசைமாலையும் நடைபெற்றது. செஞ்சோலையிலும் இதே போல் நடந்தது. கரும்புலிகள் நினைவாக ‘தேசத்தின் புயல்கள்’ இரண்டாவது ஒலிநாடாவும் வெளியிடப்பட்டுள்ளது. இப்படி இன்னும் பல நிகழ்வுகள் போரினுள்ளும் நடக்கின்றன. எந்த நிலை வந்தாலும் உறுதி தளராது போரிட்டு வாழ்வோம் என்று கூறி முடிக்கின்றேன்.

இப்படிக்கு அன்புடன் தம்பி

**க.சங்கீதன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்



ஈழத்தின் வரலாற்றுக் காலம் தேவநம்பிய தீஸனின் ஆட்சியோடு ஆரம்பமாகின்றது. அநுராதபுரத்தினை தலைநகராகக் கொண்டு இம்மன்னனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒற்றை ஆட்சி அமைப்பு வட –கிழக்கு மாகாணங்கள் உட்பட ஈழம் முழுவதும் அநுராதபுர அரசின் இறுதிக்காலம் வரை (கி.பி.10–ம் நூற்றாண்டுவரை) நீடித்திருந்தது எனப் பாளி நூல்கள் எடுத்தியம்புகின்றன. ஆனால் பாளி நூல்களை உற்றுநோக்கும் போது வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தில் பல சிற்றரசுகள் காணப்பட்டது தெரிகிறது. இத்தகைய சிற்றரசுகள் பல நாடளாவிய விதத்தில் காணப்பட்டதைப் பிராமிக் கல்வெட்டுக்களும் எடுத்தியம்புகின்றன. இலக்கிய ஆதாரங்களில் வடபகுதியில் நிலைபெற்றிருந்த நாகதீபநாகநாடு அரசு பற்றிய குறிப்புகள் உள்ளன.

வடபகுதியில் இத்தகைய அரசு காணப்பட்டது போன்று றோகணைப் பகுதியிலும் இரு அரசுகள் தேவநம்பிய தீஸன் காலத்திற் குறிக்கப்படுகின்றன. இவை கதிர்காமம், சண்டனாகம ஆகிய இடங்களிற் காணப்பட்ட சிற்றரசுகளாகும். பாளி நூல்கள் இவர்களைக் கதிர்காமச் சண்டனாகமச் சத்திரியர்கள் என அழைக்கின்றன. தேவநம்பியதீஸன் காலத்திற்குப் பின்னர் இவைக்கு என்ன நடந்தன என்று கூடக் குறிக்காவிட்டாலும் இவ்வரசுகள் மட்டக்களப்புத் தமிழகத்தில் காணப்பட்டதற்கான சான்றுகள் பிராமிக் கல்வெட்டுக்களில் உள.

கதிர்காமம் இன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்தாலும் கூட அன்று மட்டக்களப்பு தமிழகத்தின் ஓர் பகுதியாக விளங்கியதை கதிர்காமத்திலும் மட்டக்களப்புத் தமிழகத்திலும் மேலோங்கி நிற்கும் முருக வழிபாட்டம்சங்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமை எடுத்துக்காட்டுகின்றது. இப்பகுதிக் கல்வெட்டுக்கள் இவ்வம்சத்தில் பத்துச் சகோதரர்கள் இருந்தனர் என்றும், இவர்களுக்கிடையே கூட்டாட்சி நிலவியதையும் எடுத்துக் காட்டுகின்றன.

கலாநிதி சி.க. சிற்றம்பலம்
தலைவர்,
வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

இவர்களில் மூத்தோர் வம்சம் கதிர்காமத்தினை மையமாகக் கொண்டு காணப்பட, இளையோன் வம்சம் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்பட்டு படிப்படியாக அம்பாறை மாவட்டத்திலும் செல்வாக்கினைப் பரப்பி மாகவில் (திஸமகாராமவில்) தமது ஆட்சியை நிலை நிறுத்தியதை எடுத்துக் காட்டுகின்றன. இவ்வம்சத்தவர்கள் வழிவந்தவனே துட்டகைமுனு ஆகும். இவ்வம்சம் 'ஆய்' வம்சமே என்பதனை இக்கல்வெட்டுக்களில் காணப்படும் 'ஆய்' என்ற முழுப்பெயர் உணர்த்துகின்றது. அத்துடன் இக்கல்வெட்டுக்களில் ஒற்றை மீன் சின்னம் காணப்படுவதோடு 'மீனவன்' எனப் பொருள் தரும் 'மஜ்ஜ' என்ற பதமும் காணப்படுகின்றது.

இவ்வொற்றை மீன் சின்னம் பழைய பாண்டியரது நாணயங்களிற் காணப்படுவது ஈண்டு அவதானிக்கத்தக்கது. இச் சிற்றரசுகளின் மன்னர் சூடியிருந்த பெயர்களில் 'உரி'யும் ஒன்றாகும். உதய, என்ற பெயர் தேவநம்பிய தீஸனின் தம்பியின் பெயராகவும் காணப்படுகிறது.

வவுனியா மாவட்டத்திலுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் 'உதி' என்ற சிற்றரசன் பற்றிக் கூறுகின்றன. திரு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோணமலை மாவட்டத்திலுள்ள நாச்சியார் மலையிலுள்ள கல்வெட்டுகள் 'உதி'யின் கீழ் இப் பகுதியிற் காணப்பட்ட அரசு பற்றிக் கூறுகின்றன. இதற்கும் சங்க இலக்கியங்களிற் காணப்படும் உதி, உதயன் என்ற சேர மன்னர்கள் சூடி இருந்த பெயருக்குமிடையே உள்ள ஒற்றுமை நோக்கற்பாலது. திருகோணமலை மாவட்டத்தில் நிலவிய செரு, சோம என்ற பிற இரு சிற்றரசுகள் பற்றியும் தாதுவம்சத்தில் குறிப்புளது. இதனால் ஒற்றை ஆட்சி அமைப்பு அநுராதபுரத்தை அண்டியுள்ள பகுதிகளில் மட்டும் காணப்பட பிற இடங்களில் சிற்றரசுகள் பெருமளவுக்கு சுதந்திரமாக இயங்கின எனக் காணமுடிகிறது. இத்தகைய அமைப்பு வட – கிழக்கு மாகாணங்களிலும் காணப்பட்டன எனலாம்.

எனினும் ஈழத்து அரசியல் வரலாற்றில் இதனை புவியியல் ரீதியில் மிக அண்டியுள்ள தமிழகத்திலிருந்து ஏற்பட்ட படையெடுப்புகள் ஓர் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

தேவநம்பியதீஸன் தம்பியாகிய குரதீஸன் காலத்தில் குதிரை வணிகர்கள் புத்திரர்களாகிய தமிழர்களாகிய சேனன், குத்திகன் ஆகிய இருவர் அநுராதபுரத்தில் இவனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி 22 வருடங்கள் ஈழத்தினை ஆண்டதாக மகாவம்சம் கூறுகிறது. இவர்களின் பின்னர் தேவநம்பியதீஸனின் இன்னொரு தம்பியாகிய அசேலன் காலத்தில் எல்லாளன் என்பவன் சோழ நாட்டிலிருந்து ஈழத்தில் ஆட்சியைக் கைப்பற்றி 44 வருடங்கள் நீதி தவறாது ஆண்டதாக மகாவம்சம் கூறுகிறது. இதே காலத்திற்குள் ஆய் வம்ச மன்னனாகிய துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்குமிடையே போர் ஏற்பட்டது. இப்போரை ஓர் இனப்போராக மகாவம்சம் சித்தரித்தாலும் இது ஓர் இனப்போரல்ல.

உள்நாட்டில் எழுச்சிபெற்ற அரசனொருவன் வெளிநாட்டிலிருந்து வந்து ஈழத்தைக் கைப்பற்றி அரசாண்ட போது அவனது ஆட்சியிலிருந்து ஈழத்தினை மீட்க மேற்கொண்ட போராகவே இது விளங்குகின்றது. எல்லாளன் துட்டகைமுனுவுடன் நடந்தபோரில் மரணமடைய அவனுக்கு உதவியாக பலுகா என்ற அவனது மருமகன் ஆறாயிரம் படை வீரருடன் வந்தபொழுது மரணமடைந்தான்.

துட்டகைமுனுவுக்குப் பின்னர் வந்த மன்னர்களுள் ஒருவனாகிய வலகம்பாகு அல்லது வட்டகாமினி என அழைக்கப்படும் மன்னன் காலத்தில் (கி.மு.104) தமிழகத்தின் பாண்டி நாட்டிலிருந்து படையெடுப்பு நிகழ்ந்தது. இப் படையெடுப்பை நிகழ்த்தியவர்கள் ஏழு தமிழ்ப்பாண்டியர்கள் என மகாவம்சம் குறிப்பிடுகிறது. இவர்களுள் இருவர் தமிழகத்திற்கு மீள மிகுதி ஐவர்கள் புலஹதன், பாஹியா, பணயமாற, பழையமாற, தாதிகன் ஆகியோர் பதின்நான்கு வருடமும் ஏழு மாதமும் மாறி மாறி ஆட்சி செய்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. இதன் பின்னர் ஆண்ட தமிழர்களாக வடுகன், நீலியன் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது கிறிஸ்தாப்பத்திற்கு முந்திய வரலாற்றுக் காலத்தினை உள்ளடக்கிய 220 வருட காலத்தில் 1/3 காலப் பகுதியில் தமிழர் ஆட்சி ஈழம் முழுவதும் வியாபித்திருந்தமையைப் பாளி நூல்களே ஒத்துக்கொள்கின்றன.

ஈழத்தின் வடபகுதியில் அனுராதபுர மன்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பௌத்த நிறுவனங்களுக்கு அவர்கள் கொடுத்த தானங்களாக அமைந்ததையே பாளி நூல்கள் குறிப்பது அவதானிக்கத் தக்கது. இப் பகுதி இவர்கள் ஆட்சிக்குள் அமைந்திருந்ததால் ஏன் இவர்களது அரசியல் நடவடிக்கைகளை இந் நூல்கள் கூறவில்லை என்ற கேள்வி அடுத்து எழுகிறது. இத்தகைய அரசியல் நடவடிக்கையை வல்லிபுரப் பொன்னேடு எடுத்துக் காட்டுகின்றது எனக் கூறப்படுகின்றது. இதன் காலம் கி.பி 2–ம் நூற்றாண்டாகும். இப்பொன்னேடு 1936–ம் ஆண்டில் பௌத்த விகாரையின் அடித்தளத்தில் கண்டெடுக்கப்பட்டது. இது வக என்ற மன்னன் காலத்தில் அவனது தேசாதிபதியாக இசிகிரயன் என்பவன் விளங்கிய போது புயங்குதிஸ என்பவனால் கட்டப்பட்ட விகாரை பற்றிக் கூறுகிறது. இதில் குறிப்பிடப்படும் மன்னன் அனுராதபுரத்தினை ஆண்ட "வசப்" மன்னன் என ஆராய்ச்சியாளர் கருத்து தெரிவித்தாலும்கூட இவ்வசப் மன்னன் வெளியிட்ட பிற சாசனங்கலை உற்று நோக்கும்போது இம் மன்னன் அவற்றில் வசப் என்ற முழுப் பெயருடன் காணப்பட, ஏன் வல்லிபுரப்பொன்னேட்டில் மட்டும் "வக" என்ற பெயருடன் குறிக்கப்படுகின்றான் என்பது விந்தையாகவே இருக்கின்றது.

இதனால் வல்லிபுரப் பொற்சாசனம் குறிக்கும் "வக" என்ற மன்னன் அனுராதபுரத்தினை ஆண்ட வசபனா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதனால் இது குறிக்கும் வக என்ற மன்னன் வடபகுதியில் காணப்பட்ட ஓர் அரசனாகக்கூட இருக்கலாம். இப் பொற்சாசனத்தின் நோக்கம் பௌத்த விகாரை அமைத்ததை குறிப்பதாகும். இதனால் இச் சாசனம் பௌத்த மதத்திற்குரிய பிராகிருத மொழியில் அமைந்திருப்பது வியப்பன்று. தென்னிந்தியாவிலும் பிராகிருத மொழியே பௌத்த மதத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

இம் மொழியில் அமைந்த சாதனங்களைக் கொண்டு ஒருவரும் அங்கு திராவிடர் இருக்கவில்லை என்று கூறவில்லை. ஈழத்திலும் திராவிடரே (ஏழு மொழி பேசியோரில் மூதாதையினர்) இம் மொழியின் செல்வாக்கால் தம் மொழியின் தனித்துவத்தினை இழந்து பிற்காலச் சிங்கள மொழி பேசுவோராக மாறியதைப் பிராமிச் சாசனங்கள் எடுத்துக்காட்டுவது போல் வல்லிபுரப் பொற்சாசனமும் திராவிட மொழிகளில் ஒன்றாகிய தமிழ் பேசப்பட்ட பகுதியில் இவ்விகாரை கட்டப்பட்டதையும் தமிழரின் ஆதரவு இதற்குக் கிடைத்ததையும் எடுத்துக்காட்டியுள்ளது எனலாம். இப் பொன்னேட்டில் காணப்படும் பல பதங்கள் இப்பகுதி தமிழ் மொழி வழக்கிலிருந்த பகுதியென எடுத்துக்காட்டியுள்ளது. வடகரை என்பது இவற்றில் ஒன்றாகும்.

அத்தான என்பது இடம் எனப் பொருள் பட்டாலும் இது ஒரு சமயம் வடகரையில் இருந்த ஓர் குறிப்பிட்ட இடத்தினையும் குறித்திருக்கலாம். இதன் மூல வடிவம் குடத்தனை போன்று அத்தானையாகவும் இருந்திருக்கலாம். "நாகதீப" என்பது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னோர் வடிவமாகும். இதில் தமிழுக்கே உரிய வல்லினம் "க" பயன்படுத்தப்பட்டுள்ளது. இசிகிரய என்ற வடிவம் பற்றியும் ஆராயப்பட்டது. "ராய" என்பது "ராஜ" என்பதன் மருவுதலே எனக் கொள்ளலாம்.

"இசிகி" என்பதைச் சிலர் "ஈழ" எனப் பொருள் தருகிறது எனவும் கொள்வர். எவ்வாறாயினும் சங்க இலக்கியங்களில் காணப்படும் முரஞ்சியூர் முடி நாகராயர் போன்ற பெயர்களும் பிற்காலத்தில் "மலவராயர்" "சேனாதிராயர்" போன்ற பெயர்களும் தமிழ் மக்களில் "ராயர்" என்ற வடிவம் காணப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது எனலாம். இதனால் வல்லிபுரப் பொன்னேடு சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான சான்றாகும். அநுராதபுர அரசின் ஓர் பகுதியாக விளங்கியதற்கான சான்றாகும் விளங்குகிறது எனக் கொள்ளமுடியாது.

ஒரு மதத்தின் மொழியில் அமைக்கப்பட்ட சாசனத்தைக் கொண்டு அப்பகுதி மக்கள் எல்லோரும் இம் மொழியையே பேசினர் எனக் கொள்வது தவறு. இப்பொன்னேட்டில் காணப்படும் தமிழ் வடிவங்கள் இக் கூற்றினை மறுப்பதாக அமைகின்றது எனலாம்.

கிறிஸ்தாப்தத்திற்குப் பின்னரும் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடையே காணப்பட்ட தொடர்புகளை தமிழ் – சிங்கள நூல்கள் கூறுகின்றன. கி.பி. 2–ம் நூற்றாண்டில் கரிகால சோழன் ஈழத்தின் மீது படையெடுத்து 12 ஆயிரம் மக்களை சிறைப்பிடித்துச் செல்ல முதலாவது கஜபாகு தமிழ் நாடு சென்று இரட்டித்த மேற்கூறிய தொகையுடன் ஈழம் மீண்டதாக இராஜவலிய என்ற சிங்கள நூல் கூறுகிறது. இம் மன்னனே கண்ணகி வழிபாட்டை ஈழத்தில் புகுத்தியதாக சிலப்பதிகாரம், இராஜவலிய போன்ற நூல்கள் கூறுகின்றன.


வடபகுதியில் கந்தரோடையில் இருந்து முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை இது அடைந்ததாக நாட்டார் பாடல்கள் கூறுகின்றன. வட கிழக்கு மாகாணங்களை ஒருமைப்படுத்தும் வழிபாடாக இது இக்காலம் தொட்டு இன்றும் விளங்கிவருவது அவதானிக்கத் தக்கது.



பின்னர் சூழவம்சத்தில் கி.பி 5–ம் நூற்றாண்டில் நடைபெற்ற தமிழர் படையெடுப்புகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்ற இவர்களில் ஏழு பேர் குறிக்கப்படுகின்றன. மித்தசேன, பண்டு, குட்டபரிண்ட, திரிதர, டாதிய, பிதிய ஆகியோரது ஆட்சி 22 வருடங்கள் நீடித்தது. யாழ்ப்பாண வைபவமாலையிலும் பாண்டு மன்னர் ஆட்சி பற்றிய குறிப்பு இக்காலத்துக்குரியதாக அமைகின்றது. இதில் பாண்டு மன்னன் கீரிமலைப் பகுதியிலிருந்து முக்குவர்களை மட்டக்களப்பு நோக்கி துரத்தியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது வடபகுதியில் ஏற்பட்ட பாண்டியர் ஆட்சியையா அல்லது அனுராதபுரத்தில் ஆண்ட பாண்டியர் ஆட்சியையா குறிக்கின்றது என்பது ஆராயற்பாலது.

தமிழகத்திலிருந்து ஏற்பட்ட படையெடுப்புக்கள் மாத்திரமன்றி ஈழத்திலிருந்தும் தமிழகம் சென்று தமிழ் இராணுவத்துடன் திரும்பி வந்து அனுராதபுரத்தில் சிங்கள மன்னர் அரசாட்சியை நிலை நிறுத்தியதற்கும் சான்றுகள் உள. இவ்வாறு சென்ற முதல் மன்னர் ஈழநாக (கி.பி. 33 — 43) ஆகும். இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தமிழகத்திற்கு உதவி கோரிச் சென்றவனாக அபயநாக (கி.பி. 231 — 240) குறிக்கப்படுகிறான். மேலும் 250 ஆண்டுகளுக்குப் பின்னர் முதலாவது மொகலான என்பவன் (கி.பி. 491 —508) தமிழகம் சென்று படை உதவியுடன் தனது அரசுரிமையைப் பெற்றான்.

கி.பி 6–ம் நூற்றாண்டுக்கு முன்னருள்ள காலப்பகுதி முற்பட்ட அனுராதபுர காலமாகும். இக் காலத்தில் தமிழகத்தில் சங்க காலம் சங்க மருவிய காலங்கள் காணப்படுகின்றன. சங்கமருவிய காலத்தில் (கி.பி 3–ம் நூற்றாண்டு வரை) இங்கே களப்பிரார் ஆட்சி நடந்தது. அரசியல் அமைதியின்மை காணப்பட்டது. இதனால் கிறிஸ்தாப்தத்திற்கு முன்னர் நடைபெற்ற தமிழகப் படையெடுப்புக்கள் போல் இக்காலத்தில் தமிழகப் படையெடுப்புக்கள் ஈழத்தின் மீது ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றன.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிதறிப்போன வாழ்வு



சிங்களப் பேரினவாத அரசுகளின் ஒடுக்குமுறையாலும் இராணுவ அட்டூழியங்களாலும் எட்டு இலட்சம் தமிழ் மக்கள் தாயகத்தை விட்டுப் புலம்பெயர்ந்துள்ளனர். கண்டம்விட்டு கண்டம் தாவி, முற்றிலும் புதிய சூழலில் அகதிகள் என்ற அடையாளத்துடன் தஞ்சம் புகுந்த மக்களின் துயரம் சாதாரணமானதல்ல. கடந்த மூன்று தசாப்தங்களாகத் தொடரும் இந்தத் துன்பியல் நிலை இன்றும் தொடர்கிறது.

தன் தாயகத்தை இழந்து எவராலும் வேறொரு நாட்டில் சுய அடையாளத்தோடும் கௌரவத்தோடும் வாழமுடியாது. நமது கலாச்சாரம், கல்வி, வாழ்க்கைமுறை, சூழல், மொழி என்ற அடிப்படையான அம்சங்களுக்கும் புகலிடத்திலுள்ள அடிப்படைப் பண்புகளுக்குமிடையில் சமாந்தரம் கொள்ளமுடியாத இடைவெளி எப்போதுமே நிரந்தரமாக இருக்கும். இது புலம் பெயர்ந்த எம் மக்களின் உள்ளத்தில் எப்போதும் ஒரு சிறுமை உணர்வை உண்டுபண்ணிக்கொண்டேயிருக்கும்.

உலகில் எத்தனையோ இன மக்கள் இத்தகைய நெருக்கடிகளின் போதெல்லாம் தம் தாயகத்தை விட்டு வெளியேறி இப்படிச் சிதறித் தஞ்சமடைந்து வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால், சில இனங்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிக்கெதிராக போராடி மீண்டும் தம் தாயகத்துக்கு வெற்றியுடனும், சுதந்திரத்துடனும் திரும்பியிருக்கிறார்கள். சில இனத்தவர் தம் தாயகத்திலிருந்து போராடும் மக்களுக்கு ஆதரவுதந்து, இணைந்து நின்று போராடி தாயகம் திரும்பியுள்ளார்கள். வேறு சில இன மக்கள் தாம் தப்பினால் போதும் என்ற உணர்வுடன் புகலிடத்திலுள்ள நிலமைகளுக்கு ஏற்ப தம்மை விட்டுக்கொடுத்து வாழ முற்பட்டு தம் சுயத்தையும் கௌரவத்தையும் இழந்துள்ளார்கள். மிகவும் வருத்தம் தரும் வகையில் உதிரிகளாகச் சிதறிப்போன வாழ்வு இவர்களுடையது.

ஆனால், புலம்பெயர்ந்த எமது மக்களைப் பொறுத்தவரை நாம் மகிழ்வும் தெம்பும் கொள்ளும் படியாகவே அவர்களின் இன்றைய செயற்பாடுகள்

*தமிழீழத்திலிருந்து வெளிவரும் 'வெளிச்சம்' மாசி– பங்குனி 99 சஞ்சிகையில் இருந்து...*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைந்திருக்கின்றன. தாயக நினைவுடனும் தம் கலாச்சார அடையாளங்களையும் இனத் தனித்துவத்தையும் பேண வேண்டும் என்ற விழிப்புணர்வுடனும் முனைப்புடனும் நின்றுழைப்பது கவனிக்கத்தக்கது. இவை மட்டுமன்றி இங்கே தாயகத்தில் நடைபெறும் போராட்டத்துக்காக தம்மாலான பங்களிப்புகளை சகல வழிகளிலும் வழங்கி வருவது எம்மை மேலும் உத்வேகப்படுத்துகின்றது. (எல்லைக்கப்பால்) வெகு தொலைவில் வாழுகின்றபோதும் தாய்மண்ணின் விடுதலைக்காக ஆதரவை நல்கும் நம் மக்களின் விடுதலையுணர்வும் சுதந்திரதாகமும் பாராட்டப்படவேண்டியது.

உலகமெங்கும் பரந்து சிதறியிருந்தாலும் நாங்கள் தமிழீழ மக்களே எனும் உணர்வுடன் அந் நாடுகளில் நடக்கும் தமிழீழ விடுதலைப் போராட்ட சித்தரிப்பு நிகழ்வுகளிலும் பங்களிப்பு வேலைகளிலும் தம்மை ஈடுபடுத்தும் மக்களை நாம் நன்றியுடன் நினைக்கின்றோம். தமது வரலாற்றுக் கடமையைச் செய்ய வேண்டுமென்ற உணர்வும் எமது தலைவரின் வழிகாட்டலில் நடைபெறும் போராட்டத்தின் மீதான நம்பிக்கையுமே எம்மக்களின் இத்தகைய செயலூக்கத்துக்குக் காரணமாயிருக்கிறது. ஆனால் இது வரையான செயற்பாடுகளுடன் தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளாமல், எமது தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதுபோல "அனைத்துலகமெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் உலகத்தின் மனச்சாட்சியை உறுத்தும் வகையில் தாயகத்து உண்மை நிலைகளை சர்வதேச சமூகத்துக்கு இடித்துரைக்க வேண்டும்" அத்துடன் தாயக விடுதலை வரையும் சாத்தியப்படும் சகல வழிகளிலும் தேவையான சகலதையும் செய்துமுடிக்கும் முழு மனதுடன் ஒத்துழைக்கவேண்டும்.

ஒருவன் தன் தாய் மண்ணுக்காக ஆற்றும் பணியே உலகில் சிறந்த செயலாக இருக்கின்றது. இந்தப் பணியை எம் உறவுகள் ஆற்றுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

உலகமெங்கும் பரந்து சிதறியிருந்தாலும் நாங்கள் தமிழீழ மக்களே எனும் உணர்வுடன் அந் நாடுகளில் நடக்கும் தமிழீழ விடுதலைப் போராட்ட சித்தரிப்பு நிகழ்வுகளிலும் பங்களிப்பு வேலைகளிலும் தம்மை ஈடுபடுத்தும் மக்களை நாம் நன்றியுடன் நினைக்கின்றோம்

# முனைப்பு

**கலைக்கதிர்**

காற்றின் பூவாசத்தை விழுங்கும்

பிணவாடை
நரிகளின் ஓயாத ஊளைகள்
எதை
யார்...?
என்று பந்தயம்
நகக் கீறல்கள்...
தொங்கும் சதைகள்

எப்படி...?
எதனால்...?
என்று அரங்க விவாதங்கள்

நாறியதைத் தின்னும்
அவற்றின் நாசிகளில் குமட்டல்...

இரத்தங்கள் உதிர்த்த
கருப்பைகளின் ஏக்கம்

ஏன் குருவிகள்
கிளறக் கூடாது?
இடமோ எங்கள் சொந்தம்
உள்ளிருப்பதோ
நம் உறவுகள்
பார்க்க வேண்டும் குஞ்சுகளை

ஐயோ
அநாதரவாக்கப்பட்ட
அக்குஞ்சுகளை...
ஏன் இன்னும்
தின்ன நீட்டிய நாக்குகளின் காவல்?

முகங்களைக் காணும் துடிப்புடன்
மண்வெட்டி தேடும் முனைப்பு.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வானமே கூரை

- எஸ்.பி.கிருஷ்ணன் -

எறிகணைகள் அடுத்தடுத்து விழுந்து வெடித்தன. முன்னேறி வந்த படைகளிடம் அகப்படாமல் வலிகாமத்தை விட்டு வெளியேறி தென்மராட்சியை நோக்கிய நெடுஞ்சாலையில் கடலென நகர்ந்து கொண்டிருந்த மக்களுடன் சேர்ந்துகொண்டார் அவர். வாடகை வீட்டில் பாவனைப் பொருட்களை விட்டுப்போகிறேனே என்ற கவலை நாகநாதனுக்கு இருந்தாலும் "பிறந்த மண்ணும் சொந்த வீடும் இந்த நேரத்தில் கை கொடுக்கும்" என்றெண்ணி உள்ளூர மகிழ்ந்தார்.

காலை ஆறு மணிக்கு தெருவில் காலடி வைத்தவர் அரியாலைச் சந்தியை வந்தடைந்த நேரம் பத்து மணி.

அது ஒன்றும் அதிசயமல்ல.

செம்மணித் தரவையிலும் அரியாலைத் தென்னந் தோப்பிலும், வயல்வெளியிலும் அவர் கண்ட மக்கள் வெள்ளம் அதிர்ச்சியூட்டியது. மக்கள் மட்டுமா? பொதிகள் ஏற்றிய மாட்டு வண்டிகள், கனரக வாகனங்கள், சைக்கிள்கள், ஆடுகள், கோழிகள், பசுக்கள், கன்றுகள், நாய்கள்...! நல்லூர்த் திருவிழாக்களில் சிலமணிநேரம் கூடிக் கலையும் பக்தர் தொகையைப் பார்த்து வியந்திருக்கிறார். செம்மணிச் சந்தியில் இருந்து நாவற்குழிப் பாலம் வரை தெரிந்த திருவிழாக் கோலத்தை இந்த வயதுவரை எந்தக் கோயிலிலும் அவர் கண்டதில்லை.

முன்சென்றார் அடியெடுக்கும் வரை நின்று அடியெடுத்து வைத்து அவர் நடந்தார்.

வெய்யில் சுட்டது. நா வரண்டது. நடை தளர்ந்தது. பாலத்தை அடுத்த தென்னைகளும் இளநீர்க் குலைகளும் நினைவில் வந்தன. ஆனால் அவற்றில் தேங்காயோ இளநீர்க்குரும்பைகளோ தென்படவில்லை. உப்பாற்று நீர் ஓடிக்கொண்டிருந்தது. தாகம் தீர்க்க தண்ணீர் இல்லை.

என்ன அதிசயம்! வானம் கறுத்தது. இடியும் மின்னலும் தொடர மழை பொழிந்தது. காய்ந்த மேனிகள் நனைந்தன.


சிலர் கையில் குடை இருந்தது. நாகநாதருக்கு முன்னாலும் ஒரு குடை விரிந்தது. குடையில் கொட்டிச் சிந்திய மழைத்துளிகளை ஏந்தி வாயில் விட்டுக்கொண்டார்.

பாலத்தைக் கடந்தபோது மழை விட்டிருந்தது. காற்று வீசிற்று. பகலவன் உச்சியில் தெரிந்தான். சட்டையும் வேட்டியும் காய்ந்தன. மீண்டும் தாகம் எடுத்தது. தென்னை மரங்களைப் பார்த்தார். தரையில் தேங்காய், குரும்பை, கோம்பைகள் குவிந்து கிடந்தன. "முதல் நாள் வந்தவர்களின் வேலை இது" என எண்ணிக் கொண்டார்.

சற்றே தொலைவில் பலர் தெருக்கரையில், வாளியில் இருந்து தண்ணீர் குடிப்பதைக் கண்டார். அந்த இடத்தை அடைய அரைமணி நேரம் எடுத்தது. ஒரு கப் தண்ணீர் கிடைத்தது.

நாவற்குழிச் சந்தி வந்தது. பயணம் அப்பால் சுலபமாக தோன்றியது. நேரே மறவன் புலவு, தச்சன் தோப்பு, தனங்கிளப்பு முதலாம் கிராமங்களை பிரிந்து ஒரு கூட்டம் சென்றது.

நாகநாதர் கைதடி நோக்கி நடையைத் தொடர்ந்தார். ஆயுர்வேத மருத்துவமனையிலும் வயோதிபர் இல்லத்திலும் பெருமளவு மக்கள் இருந்தனர். இளைப்பாறினர். கைதடிச் சந்தியில் ஆயிரக்கணக்கில் இருந்தனர். அங்குள்ள கோயில்களிலும் பாடசாலைகளிலும் அவர்களைத் தங்கவைக்கும் முயற்சியில் அவ்வூர் தொண்டர்கள் துரிதமாக





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈடுபட்டிருந்தனர்.

இன்னும் மூன்று மைல் நடந்தால் நுணாவில் சந்தி. அங்கிருந்து வடக்கே திரும்பி அரை மைல் போனால் அவருடைய வீடு.

நேரம் இரண்டு மணி.

கைதடிப் பாலத்தைக் கடந்ததும் இரு கரையும் பனையும் தென்னையும். அவை இடையே சிறு குடிசைக் கடைகள். சிலவற்றில் வடையும் தேநீரும் இருந்தன. அங்கே மக்கள் முண்டியடித்து நின்றனர். நாகநாதர் தோளில் இருந்த பொதியை இறக்கி வைத்துவிட்டு ஒரு ஐந்து ரூபாவை நீட்டி, "தம்பி வடையும் தேத்தண்ணியும்" என்றார். வீண்முயற்சி. அவருக்கு தேநீர் வருமுன் ஐம்பது பேராவது பின்னால் வந்தாக வேண்டும். அவர் பொதியைத் தூக்கிக் கொண்டு நடந்தார். "இன்னும் இரண்டரை மைல்" என எண்ணியவர், எட்டி அடி வைத்தார். மக்கள் பல திசைகளில் பிரிந்து போய்விட்டதால் பயணம் சுலபமாக அமைந்தது.

வீடு வந்து சேர்ந்த நாகநாதருக்கு வியப்பு. இடம்பெயர்ந்து வந்தோர் இருபது பேர் வரை — அயலவர், இனத்தவர் — அங்கே இருந்தனர். முதல்நாளே வந்துவிட்ட அவரது மனைவி பிள்ளைகளுடன் சேர்ந்து வந்தவர்கள் என்றாலும் அவருக்கு ஏமாற்றம் இல்லை. பரந்த வீடு. பின்புறம் நிழல் தரும் மா, பலா, தென்னை, பனை, வேம்பு.

அவர் பிறந்த மண், மணல் செறிந்த கோவில் வீதிகளும் கேணியும், தாமரைக் குளமும், வயலும், வாழையும், கரும்பும் நிறைவாய்த் துலங்கும் பேரூரில் புகலிடமா இல்லை.பொதியை முற்றத்தில் வைத்துவிட்டுத் தெருவுக்குப் போனார். இரு திசையும் பார்த்தார். இடம்பெயர்ந்து வந்தவர்கள் அவரைக் கடந்தும் போய்க்கொண்டிருந்தனர்.

"அப்பா வாங்கோ, தேத்தண்ணி குடியுங்கோ" உள்ளிருந்து ஒரு குரல். வாங்கிக் குடித்தார். பின்பக்கம் போனார். தென்னைகளில் தேங்காய் குலைகுலையாய் ஓலைகள் ஆங்காங்கே விழுந்தபடி, மட்டைகள் காய்ந்து கிடந்தன. மாவும் பலாவும் காய்த்துத் தொங்கின. "மாமரத்தின் கீழ் ஒரு கொட்டில் கட்டினால் படுத்துறங்கலாம்..." என எண்ணினார். மறுநாளே செயலில் இறங்கினார். இளைஞர்கள் இருவர் உதவிக்கு வந்தனர். தடிகள் வெட்டினர். ஓலைகல் கிடுகுகளாகின பனையோலை வெட்டி நாரும் ஈர்க்கும் எடுத்தனர். இரண்டே நாளில் கொட்டில் உருவாயிற்று. கவனிப்பாரற்றுக் கிடந்த கட்டில் ஒன்று இவருக்கு ஏகாந்த அமைதி தந்தது.

காலையில் கோயிலுக்குப் போனார். பூசை நேரத்து மணியோசையின் இசையை மெய்மறந்து அனுபவித்தார். குளத்தில் குளித்தார். தாமரையைத் தண்டுடன் பறித்தார். கொய்யாப் பற்றைக்குள் பழங்களைத் தேடினார். அணிலும், கிளியும் பழம் கொறித்து உண்ணும் அழகை ரசித்தார். அவரைக் கண்டு எட்டாத கொப்புகளில் தாவிய குரங்குகளைப் பார்த்து நின்றார்.

அன்றுபோலவே இன்றும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மாணவப்பருவத்தில் அவர் இதே சூழலில்தான் வாழ்ந்தார். அதே இயற்கை வளம் கொஞ்சும் மண் இன்றும்.

நண்பர்கள், அயலவர், இனத்தவரைப் போய்ப் பார்த்தார். பேசி மகிழ்ந்து, விருந்துண்டு பொழுது போக்கினார்.

பத்தே மைல் தொலைவில் எதிரி படையோடு நிற்கிறான்; எந்த நேரமும் உள்ளே வந்துவிடுவான் என்ற எதிர்பார்ப்பும் அச்சமும் இல்லை; இரவு பகலாய் தெரு நிறைந்த மனித நடமாட்டம் இங்கு, ஐப்பசி 30–ல் ஆரம்பித்த நடைப்பயணம் இன்னும் தொடர்கிறது. கிளாலிக் கடல் தாண்டி வன்னிக்குப் போகின்றவர்களும், தனிக் குடித்தனம் இருக்க கொட்டில் கட்டுகின்றவர்களும், கோயில் மண்டபங்களைவிட்டு பாடசாலையை நாடுகிறவர்களுமாக தலையிலும், கையிலும் பொதிகளுடன் எங்கும் காணப்படும் மனிதர்கள் வந்தவர்கள் அமைதியாக, நிம்மதியாக, நிலையாக படுத்துறங்க வழி தேடி அலைந்துகொண்டிருக்க வந்தது சித்திரை 19.

"தென்மராட்சியை விட்டு வன்னிப் பெரு நிலப்பரப்புக்குப் போ" என்று சொல்வது போல மட்டுவில் பனிறித்தளச்சி அம்மன் மேற்கு வீதியில் எதிரியின் படைகள் வந்து நின்றன.

மறுபடியும் ஒரு பயணம். மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் தெருவில் நின்றனர். நாகநாதர் வீடும் பூட்டப்பட்டது. மேற்கிலிருந்து வந்த எறிகணைகள் அவர் வீட்டுக்கு மேலால் பறந்துபோய் கிழக்கில் வயலில் வெடித்துச் சிதறின.

"இது போலத்தான் அப்ப வேரற்கேணி முருகன் கோயில் திருவிழாவில் வான வேடிக்கை நடக்கும்" என்று சொல்லிக்கொண்டே நடந்தார். அதை காதில் வாங்கிக் கொள்ளும் நிலையில் யாரும் இல்லை.

கிளாலிக் கரையை அடைந்தபோது பொழுது விடிந்திருந்தது. அங்கே சனசமுத்திரத்தைப் பார்த்தவுடன் திரும்பிப் போய்விடலாமா? என மனம் தவித்தது. மூன்றாவது நாள் அவர்களுக்கு படகில் இடம் கிடைத்தது. அக்கரையில் இறங்கி இரண்டு மணித்தியாலம் இருந்தபின் கிளிநொச்சி போக வாகனங்கள் வந்தன.

"ஆனையிறவு இங்கிருந்து பத்து மைல் இருக்கும். இங்கும் கொலைகாரர்கள் வரமாட்டார்களா? எறிகணைகள் வராதா? என்று கேட்ட நாகநாதருக்கு யாருமே பதில் சொல்லவில்லை. கூட வந்தவர்களும் பயணம் சொல்லாமலே வெவ்வேறு வாகனங்களில் பிரிந்து சென்றனர்.

நாகநாதர் குடும்பத்துக்கு திருவையாற்றில் ஒரு கொட்டில் கட்ட இடம் கிடைத்து.

ஆடி மாதம் பத்தொன்பதாம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திகதி மாலைப் பொழுது.

ஆனையிறவில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் வன்னியில் நாலா பக்கமும் விழுந்து வெடித்தன. திருவையாறு தாண்டி இரணைமடுவிலும் விழுந்தன. அன்றிரவு மல்லாவி நோக்கிய பயணம்.

இரணைமடு கட்டுக்குளம் அருகே நீரோடும் வாய்க்கால்கள் இருக்க விவசாயம் செழித்த மண், திருவையாறு. பாலும் பழமும், காய் பிஞ்சும், கிழங்கும் மலிவாகக் கிடைத்த மண்ணில் இருந்து வாழக் கிடைக்கவில்லை என்ற கவலை நாகநாதருக்கு.

"மல்லாவி எப்படி இருக்குமோ?" என எண்ணியவராய் திருவையாறை விட்டு இரவிரவாக நடந்தார். முன்னும் பின்னும் மக்கள் வெள்ளத்தில் நாகநாதர் குடும்பமும் கலந்தது.

பாரிய விருட்சங்களும் பராமரிப்பற்ற வாய்க்கால்களும் நீர் நிலைகளும் வயல் நிலங்களும் உள்ள மல்லாவியில் மக்கள் வளமாக வாழமுடியவில்லை. வெய்யிலும், மழையும், நோயும் எதிரிகளாய் அமைந்தன. நோய்க்கு மருந்தில்லை. போதிய உணவுப் பொருள் இல்லை. மக்கள் அநாதைகளாய் அலைந்தனர்.

மற்றொரு கொட்டில் மல்லாவியில்.

"இதெல்லாம் தமிழ் மண். இதை திருத்தி பண்படுத்தினால் ஏதிலிகளாய் நாம் அலையவேண்டாம்." என்றெண்ணி மகிழ்ந்தார் நாகநாதர். "அதற்கொரு காலம் வரும் வரும்..." என தனக்குள் சொல்லிக் கொண்டார்.

அதற்கு முன் ஆவணி வந்தது.

மழை பொழிந்தது. எங்கு பார்க்கிலும் வெள்ளம், சேறு. தெருக்களின் குறுக்கே ஓடிய வெள்ளம், கொட்டில்களிலும் புகுந்தது. எங்கும் இரவும் பகலும் கொசுக்கள் படையெடுத்தன. மனித இரத்தத்தை உறுஞ்சிப் பாடிக் களித்தன.

அகதிகள் கொட்டில்களை விட்டுப் போய் பாடசாலைகளில் இருந்தனர். மழை தணிந்தது. வெயில் எறித்தது. நிலம் காய்ந்தது. கூடவே மலேரியா பலரையும் பற்றிக் கொண்டது.

நாகநாதர் காச்சல் என்று படுத்தார். நடுங்கிக் குலுங்கினார். "முருகா! முருகா! என தன் ஊர் முருகனை அழைத்தார். காய்ச்சல் குறையவில்லை. மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கே மலேரியாவுக்குப் போதிய மருந்தில்லை என்று சொல்லப்பட்டது. "இருக்கும் மருந்தை" பங்கிட்டுக் கொடுத்தனர். பலபேர் வாழ்வை முடித்துக் கொண்டு 'பிணம்' என்று பெயர் பெற்று, கொட்டில்களுக்குத் திரும்பினர்.

நாகநாதருக்கு நீண்ட வாழ்நாள். அவர் சுகமடைந்து, உடல் ஒட்டி எலும்புக் கூடென உருமாறி கொட்டிலுக்கு திரும்பினார். உடல் தேறி வழமைக்குத் திரும்ப இரண்டு மாதமாயிற்று.

வெயில் சுட்டது. மாலை ஆறு மணியானாலும் வெப்பம் நிலைத்தது. என்ன மழை! என்ன வெயில்! என்ன செய்வது! எங்கே போவது?

சில கொட்டில்களில், மண் வீடுகளில் இருந்தவர்களைக் காணவில்லை. விசாரித்தபோது, அவர்கள் இந்தியா போய்விட்டனர் என அறிந்தார். தெரிந்தவர் அறிந்தவரிடம் பேசினார். துணுக்காய் வழி சென்று இலுப்பைக் கடவையில், இரவு எட்டு ஒன்பது மணியளவில் படகு ஏறினால் விடியும் வேளை அக்கரை சேர்ந்துவிடலாம். அங்கே அகதி முகாம்களில் தங்கும் வசதி செய்து கொடுக்கிறார்கள் என்ற தகவலுடன் கொட்டிலுக்குத் திரும்பினார்.

சித்திரைப் பௌர்ணமி இரவு. கடல் எங்கும் பளபளக்கும் நிலவு. நாகநாதர் குடும்பம் உட்பட முப்பது பேரை ஏற்றிக் கொண்டு அக்கரை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது, படகு.

போன வருஷம் இதே நாளில்

**வேலணையூர் சுரேஷ் கவிதைகள்**

# தழும்பு

பொருது களமொன்றில்

சன்னங்களால் ராவப்பட்டிருந்தன
அவனிரு கரங்களும்
தீயின் நாக்குகளால் தீண்டப்பட்டது
அவனுடல் நிர்வாணமாக்கப்பட்டு
உலையில் வேகிய இரும்பாய்
சரீரம் தழும்புகளால் ஆக்கிரமிக்கப்பட்டு
குருதி கசிந்து சிவந்திருந்தது.
மிதமிருந்த நம்பிக்கையும் முடிச்சவிழ
அவன் ஓவென்று கத்தினான்; உரக்க.
'என் தழும்புகளை ஆற்றி விடுங்கள்
நான் போவதற்கு....'
என் தாயகத்தின் தழும்புகளை அகற்ற!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாலம்

நிச்சயமாகிக் கொண்டிருந்தது
அந்தப் போராளியின் சாவு
கண்டு
கேவிக் கேவி அழுதபடி
கெஞ்சியது அவன் துப்பாக்கி
"என்னைத் தனிக்கவிட்டுப் போகாதே!"

# தியாகி

மீண்டும் மூச்சாய்
பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்
அந்தப் போராளி.
இவனால் இனி ஏலுமா...?
ஈயக் குண்டின் வடுபட்டு
சகஜத்திற்கு திரும்பி நாட்கள் சிலதான்
என்னுள் வியப்பு எழ...
கேள்விச் சரங்களாய் விழுந்தன பல
எது எதற்கோ விடைதேடி
என்னுள் நான் முட்டிமோத
அவன் போகின்றான்; உரிய திசையில்
"இந்த ஆவி அடங்குதற்குள்
என்னால் இயன்றதைச் செய்ய"
என்றோ அவன் உதிர்த்த வார்த்தைகள்
என் நெஞ்சில் உதைத்தன.
ஓ அவன் தியாகி!

தான் கிளாலிக் கடலைக் கடந்தோம்.

"மேலே வட்டமிட்ட 'கிபிர்' விமானங்களைப் பார்த்து பதறித்துடித்தோம்" என்றார் நாகநாதர்.

"நீங்கள் அழவில்லையோ..." என்றான் எதிரே இருந்த இளைஞன்.

"இல்லை... அழுதால் அவனுக்குக் கேட்குமா? அந்த நிலவில் நான் ஆகாயத்தையே பார்த்தபடி இருந்தேன்".

"அடேயப்பா பயமில்லாத மனிதர்..."

"இனி அச்சமில்லாமல் வாழலாம், தமிழ் நாட்டில்... இல்லையா தம்பி... இனி எந்தச் சத்தமும் கேட்காது".

பேரலைகள் படகில் மோதின. கடல்நீரில் படகினுள் விழுந்தது. நீரை வெளியேற்ற டின்கள் கிடந்தன. அவற்றைப் பயன்படுத்தி நீரை வெளியே ஊற்றினர் இளைஞர். படகு விரைந்துபோய்க்கொண்டிருந்தது. தூரத்தே தீபங்கள் உருண்டுகொண்டிருந்தன.

"வெளிச்சம் தெரிகிறதே, கரையிலா...? என்று கேட்டார் நாகநாதர்.

"இல்லை பெரியவரே, அது மீன்பிடிப் படகுகள்" என்றான் ஒருவன்.

அதிகாலை ஐந்துமணி. அக்கரை கிட்டவே தெரிந்தது. எஞ்சின் இயக்கம் நின்றது. "சத்தமிடாம இறங்குங்க..." என்றான் ஓட்டி. பொதிகளைத் தலையில் வைத்துக் கொண்டு இறங்கி இடுப்பளவு நீரில் நடந்தனர். கடலைத் தாண்டியதும் மணலில் கால்கள் புதைந்தன. தெருவோ, வாகனமோ, மனிதரோ கண்ணுக்கெட்டியவரை தென்படவில்லை. தாகமெடுத்தது. பொதிகளை இறக்கிவைத்து இளைப்பாறினர். தூரத்தே ஒரு வாகனம் வருவது தெரிந்தது. எழுந்து கை உயர்த்திக் கொண்டு விரைந்து நடந்தனர். பயனில்லை. அது போய்விட்டது. நடந்தனர். கிழக்கில் சூரிய ஒளி பளிச்சிட்டது. ஒரு சந்தி வந்தது. பேரூந்து ஒன்று வந்தது. கை காட்டினார்கள். நின்றது பேரூந்து. "நீங்க அகதிகளா?" என்று சாரதி கேட்டார். பதிலுக்கு காத்து நிக்காமல் பேரூந்து போய்விட்டது. நடையைத் தொடர்ந்தனர்.

"கடலோரக் காவல்" தெரிந்தது. அது காவல் நிலையம்.

"வாங்க..." காவல் அழைத்தனர், அன்பாக. அகதிகள், பொதிகளை இறக்கி வைத்தனர். தண்ணீர் கேட்டனர். பானையில் தண்ணீர் வந்தது.

பொறுப்பதிகாரி வந்தார். விசாரணை தொடங்கியது. பெயர், வயது, வந்த தோணியின் பெயர் காரணம் என பல கேள்விகள் முடிந்ததும் தொலைபேசியில் யாருடனோ பேசினார். "உட்காருங்க..." என்றார் அவர்களைப் பார்த்து.

ஒரு மணி நேரம் கழித்து ஒரு அதிகாரி பேரூந்தில் வந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறங்கினார். எதிர்த் திசையில் வந்த பேரூந்தில் முப்பது பேரையும் ஏறவைத்து தானும் ஏறிக்கொண்டார். அத்தனை பேருக்கும் கட்டணத்தை அவரே கொடுத்தார். அகதிகளிடம் ஏது பணம்? அதுவும் இந்தியப் பணம்.

முகாம் வந்தது. அது "தாயகம் திரும்பியோர் தங்குமிடம்" என்று முகப்பில் எழுதப்பட்டிருந்தது. உள்ளே போனவர்களை "உட்கார்... உட்கார்..." என்றான் ஒருவன். அலுவலக வாசலில் மணலில், வேப்பமர நிழலில் அமர்ந்தனர். சோதனை – விசாரனை தொடங்கிற்று. பொதிகளிலிருந்து அனைத்தையும் வெளியே எடுக்கச் சொல்லி சோதித்தனர். இளைய வயதினைப் பார்த்து "பயங்கரவாதிகளுடன் தொடர்பு இருக்கா?" எனக் கேட்டனர். ஒரு காலில்லாதவன், "எறிகணை தாக்கியதால் கழட்டப்பட்டது" என்றபோது, "எறிகணை உன் காலை மட்டுமா உடைத்தது" என்று கேட்டான் ஒருவன். பின்னால் இருந்து நடப்பதை அவதானித்த நாகநாதருக்கு வந்த சினத்தை சூழல் கருதி அடக்கிக் கொண்டார்.

விசாரணையைத் தொடர்ந்து தனித்தனியாகவும் குடும்பமாகவும் நிழல்படம் எடுக்கப்பட்டது. வரிசையில் விட்டு வீடியோ படம் எடுத்தனர். வெள்ளைச் சோறும் சாம்பாரும் பப்படமும் ஒரு மேசைக்கு வந்தது. சாப்பிட்ட பின் அவர்களை ஒரு அறைக்கு அனுப்பினர். அங்கே ஊசி மருந்து ஏற்றினர். "காய்ச்சல் வந்தால் சாப்பிடு" எனச் சொல்லி வில்லைகள் கொடுத்தனர்.

"நாளைக்கு வந்து அடையாள அட்டை எடு. சரி போ..." எல்லோருக்கும் பொதுவான கட்டளை. நேரம் ஐந்துமணி ஆயிற்று. வீடுகள் கட்டி திறப்புக் கொடுக்கவென ஒருவன் முன் செல்ல அகதிகள் பொதிகளைத் தூக்கிக் கொண்டு அவரைப் பின் தொடர்ந்தனர். கதவைத் திறந்து காட்டி திறப்பைக் கையளித்துவிட்டு அவன் போய்விட்டான்.



தூசியும் குப்பையும் அகற்றி, கழுவிக் காயவிட்டு, பாய்வாங்கிப் படுக்கும் வரை தூக்கம் வராதா?

ஒதுக்கப்பட்ட வீடுகளின் முன்னால் பொதிகளைத் தலையணையாக வைத்து படுத்துக்கொண்டனர்.

நாகநாதருக்கு நித்திரை வரவில்லை. தூரத்தே வெளியில் சிலர் படுத்திருப்பது நிலவொளியில் தெரிந்தது.

நாகநாதர் எழுந்து சிறிது தூரம் போனார்.

அங்கே படுத்திருந்த ஒருவன் "என்னய்யா நித்திரை வரேல்லையோ?" என்று கேட்டான்.

இப்பதான் தம்பி வந்தனாங்கள். வீடு துப்புரவாக்காமல் எப்படிப் படுக்கிறது? நீங்கள் எப்ப வந்தனீங்கள்? ஏன் வெளியில் படுத்திருக்கிறீர்?"

"நான் வந்து கனகாலம் பெரியவர்... உள்ள படுக்க இடமில்லை. வெளியில படுத்தால் காற்றும் விழும்..."

"எத்தனை அறை தம்பி? முன்பக்கம் யன்னலும் இல்லை"

"இது சீமெந்துக் கூரை வீடு... கிறில் யன்னல்... அறை எண்டில்லை. குசினியெண்டு ஒரு அடைப்பு. ஆறுக்கு நாலு –?"

"அங்கால ஓட்டு வீடுகளும் இருக்கே?"

"அதெல்லாம் முதல் வந்தவைக்கு குடுத்தாச்சு... அதுவும் டச்சுக்காலத்துக் கட்டிடங்கள்... மழை வந்தால்..."

"ஏன் திருத்தித் தராங்களே?"

"அது சிற்பி ஓடு. அந்தக் காலத்தான்... நல்ல மழைக்கு தாங்காது... இப்பவும் அப்படித்தான் சில வெடிப்புகள்... மழைக்கு ஒழுகும். ஒருமாதிரி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிக்கட்டி இருக்கவேண்டியதுதான்..."

"படுக்க பாய் கீய் தருவாங்களே...?"

"முந்திக் கொடுத்தவங்களாம்... இப்ப எதுவும் இல்லை. நாங்கதான் வாங்க வேணும். காசு தருவாங்கள்..."

"எவ்வளவு தம்பி...?"

"மாதம் இரண்டு தடவை... ஆளுக்கு 65 ரூபா... குடும்பத் தலைவருக்கு நூறு ரூபா."

நாகநாதர் சிரித்தார்.

"மாதம் நூற்றி முப்பது போதுமா தம்பி?"

"ஏன் சிரிக்கிறியள்...? மாதம் நூற்றி முப்பது காய் பிஞ்சு வாங்க வெள்ளை அரிசி முப்பது கிலோ தாறாங்கள் சலுகை விலையில். கிலோ 55 சதம், பங்கீட்டு அட்டைக்கு சீனி, மண்ணெண்ணை எல்லாம் தருவாங்கள். அடையாள அட்டை தந்தவங்களே...?"

"இல்லை... நாளைக்கு வந்து எடு என்றான்" நாகநாதர் குரலில் கடுமை தொனித்தது.

"வந்திட்டான்... இனி எங்கட தகுதிக்கு இங்க இடமில்லையெண்டாலும்...ஒரு மாதிரி அனுசரித்துப் போகவேண்டியதுதான்..."

"சரி தம்பி வாறன்... போய்ப் படுத்துப் பார்ப்பம்" துவாயை விரித்து கையை மடித்து தலையணையாக்கி மணலில் படுத்துக் கொண்டார் அவர்.

பயணம் தொடங்கிய நேரம் தொட்டு அதுவரை பட்ட அனுபவங்கள் அபூர்வமானவை. உடலும் உள்ளமும் அலுத்துப் போன நிலை. அடுத்த நிமிடமே அவரை நித்திரை அரவணைத்தது.

காலையில் அவர் எழுந்த போது அவரைச் சூழ மனைவி பிள்ளைகள் இருந்தனர். தேனீர் குடிக்கும் நேரம் கடை எங்கே உள்ளது என்றது தெரியவில்லை. கையில் இருப்பது எங்கட காசு. இங்கு செல்லாது என நினைத்து எழுந்து நடந்தார். இரவு அவருடன் பேசிய இளைஞனிடம் போனார். "தம்பி எங்கட காசை எங்க மாத்தலாம்?" என்று கேட்டார்.

"இருங்கோ பெரியவர். தேத்தண்ணி தரலாம்..." என்றவன் உள்ளே போய் கையில் ஒரு சாடி தேனீருடன் வந்தான். "கொண்டுபோய்க் குடியுங்கோ காசு மற்றொருவன் வருவான். அகதிகள் வந்ததை அறிந்து உடனே வருவான். நூற்றுக்கு அறுபது சிலவேளை 63 ரூபா தருவான். போங்கோ நான் வாறன்..."

"நன்றி தம்பி..." நாகநாதர் தேனீரை எடுத்துக் கொண்டார்.

அப்துல்காதர் யாரும் அழைக்காமலே வந்தான். நேற்று வந்தவர்கள் 30 பேர் என்று தெரிந்துகொண்டுதான் வந்தான்.

"சிலோன் காசு இருக்கா? மாற்றித் தரலாம்...?"

அவனைச் சுற்றி நேற்று வந்த சிலர் கூடினர்.

"ஆயிரத்துக்கு எவ்வளவு தருவீங்கள்?.."

"அறுநூறு ரூபா தர்றேன்... நீங்க எங்க போனாலும் அதுதான் ரேட்"

"அறுநூற்றம்பது எடுக்கலாம்... அந்த இடம் எனக்குத் தெரியும்..." ஏதோ தெரிந்தவன் போல, ஒருவன் சொன்னான்.

"சரி அறுநூற்றுமுப்பது தர்றேன்..." என்றான் அப்துல்காதர். எல்லோரும் ஐந்நூறு, ஆயிரம் ரூபா தாள்களைக் கொடுத்து இந்திய ரூபாய்களாகப் பெற்றுக்கொண்டனர்.

முகாமுக்கு வெளியே நடைபாதையில் கடைகள் இருந்தன. காலைச் சந்தையும் இருந்தது. வீட்டுப் பாவனைப் பொருள்கள் யாவையும் வாங்கலாம்.

நாகநாதரும் மனைவியும் அவருடன் வந்து அடுத்தடுத்த வீடுகளில் இருந்தவர்களும் வெளியே செல்லப் புறப்பட்டார்கள். தேவையான பொருள்களை வாங்கினார்கள். திரும்பி வந்து வெளியில் அவற்றை வைத்து விட்டு வீட்டைத் துப்பரவு செய்தனர். பிளாஸ்டிக் வாளிகளில் அருகிலிருந்த கொட்டுக் கிணற்றில் நீர் எடுத்துக் கழுவினார்கள்.

அரிசி, உப்பு, மிளகாய், தேங்காய், பருப்பு, சமையல் பாத்திரங்கள் சிலவும் வாங்க அடுத்த பயணம். இப்போது பெண்களும் போனார்கள். "முதலில் குக்கர், மண்ணெண்ணெய், தேயிலை , சீனி" நாகநாதரிடம் மனைவி சொல்லிக்கொண்டாள். "முட்டை வாங்கினால் நல்லது பொரிக்கலாம்" என்றார் நாகநாதர்.

"முட்டை என்ன விலை தம்பி...?" ஒரு கடையில் கேட்டார். "மூணு ரூபா" என்றான் கடைக்காரன். கம்பிக்கூடையில் இருந்த முட்டையுடன் தொங்கிய அட்டையில் ரூபா 1.10 என்றிருந்ததைக் காட்டி "அது வேறு முட்டையா?" என்று கேட்டார்.

"நீ எப்ப வந்தே?" என்றான் கடைக்காரன். நாகநாதர் முட்டை வாங்கவில்லை திரும்பிவிட்டார்.

அவர் மனைவி வாங்கிய காய் பிஞ்சுகளுடன் முட்டையும் இருந்தது கண்டு "என்ன விலை முட்டை?" என்று கேட்டார். "ஒரு ரூபாய் பத்து சதம்".

"என்னை ஏமாற்றப் பார்த்தான் அந்தக் கடைக்காரன். நீ எப்ப வந்தே எண்டு கேட்கிறான். ஆளைப் பார்த்து யாவாரம் பண்ணுறாங்கள் போல இருக்கு..."

சாமான்களை வாங்கிக்கொண்டு எல்லோரும் ஒன்றாய்த்திரும்பினார்கள். வாங்கியவற்றின் விலைகள் பற்றி பேசிக்கொண்டே நடந்தனர்.

"தேயிலை நூறு கிராம் 17 ரூபா, எங்கட பணத்தில் 26 ரூபாய்க்கு சமன்..."

"ஓ... இரண்டு மூண்டு சாமான்களைவிட மற்றதெல்லாம் நெருப்பு விலை.இட்லி காலணா, பால் பத்தணா எண்டதெல்லாம் அந்தக் காலம்..."

"சரி நடவுங்கோ அடையாள அட்டை எடுக்கப் போகவேணும்" என்றார் நாகநாதர்.

அடையாள அட்டையில் குடும்பத்தலைவரின் படமும் குடும்பப்படமும் ஒட்டப்பட்டிருந்தது. பங்கீட்டு அட்டையில் அரிசி, சீனி, பருப்பு, மண்ணெண்ணை என எழுதப்பட்டிருந்தது.

முதலாந் திகதி சம்பளம் என்று



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கப்படும் கொடுப்பனவு. அடையாள அட்டையையும் பங்கீட்டு அட்டையையும் மேசையில் அடுக்கிவிட்டு வரிசையில் நிற்கவேண்டும். பெயர் அழைக்கப்படும் போது போய் கையொப்பம் இட்டு காசு வாங்கவேண்டும்.

"நீங்கள்" "உட்காருங்கள்" "வாருங்கள்" போன்ற வார்த்தைகள் அவர்கள் பேச்சு வழக்கில் இல்லை போலும். "சரி நீ போ" "நீ வா உட்காருடா..." இத்தகைய வார்த்தைகள்தான் அவர்கள் வாயில் வரும்.

வரிசையில் நின்ற நாகநாதர் இதையெல்லாம் அவதானித்தார். முயன்று பொறுமையைக் கடைப்பிடித்து தன்முறை வந்தபோது கையொப்பத்தை இட்டு பணத்தைப் பெற்றுக்கொண்டார்.

மாலை வேளையில், மரநிழலில், மணலில் அமர்ந்து மாநாடு கூடிப் பொழுதுபோக்கும் அகதிகளில் அவரும் ஒருவர். அகதி வாழ்வு தொடக்கம் அரசியல் வரை பல விடயங்களும் அங்கே அலசப்படும். ஒருநாள் திரும்பிப் போகின்றவர்களுக்கு கடவுச் சீட்டு எடுக்க கலெக்டர் கடிதம் தருவார் என்ற தகவலை ஒருவன் சொன்னான். அதுபற்றி விபரமாக அறிந்துகொண்டு எழுந்தார் நாகநாதர்.

"இவங்களிட்ட கையேந்தி நிற்பதைவிட சுடுபட்டாலும் உதைபட்டாலும் பிறந்த மண்ணில் செத்திடலாம்" என்ற முடிவிற்கு வந்தவர் மனைவியிடம் விபரமாக விடயத்தைச் சொன்னார்.

விண்ணப்பம் எழுதிக் கொண்டு கலெக்டரிடம் போனார். திரும்பிப் போக விரும்புவதாகக் கூறினார். அனுமதி கிடைத்தது. கலெக்டர் கொடுத்த கடிதத்தை எடுத்துப்போய்க்காட்டி கடவுச் சீட்டு, விசா அலுவல்களை முடித்துக்கொண்டார். மனைவியின் நகைகளை விற்று செலவுகளையும் பார்த்துக் கொண்டார்.

திருச்சியில் விமானம் ஏறினார்கள். கொழும்பில் இறங்கி திருகோணமலைக்குப்



பயணமானார்கள்.

பருத்தித்துறையில் கப்பலைவிட்டு இறங்கிய நாகநாதர் குடும்பத்தினர் ஐந்து நாட்கள். தடைமுகாமில் வைத்து விசாரிக்கப்பட்டனர். பின்னர் மீளக் குடியேறும் உதவிப் பணமாக ஐயாயிரம் ரூபா பெற்றுக்கொண்டனர். ஊர் விட்டு உடைமைகளைவிட்டு நாடு விட்டுப்போய் இரண்டாண்டுகளாயின. அன்று விமானம் பொழிந்த குண்டுகளால் உடைந்த வீடுகளும் மாடிகளும் கோவில்களும் கடைகளும் புற்கள், பற்றைகள் வளர்ந்து மூடப்பட்டுத் தோன்றின. புதிதாக ஆளை மறைக்கும் மண்மேடுகள், காப்பரண்கள், முட்கம்பி வேலிகள், அகழிகள், காவல் நிலையங்கள், ஆயுதமேந்திய காக்கிகள் காட்சியளித்தன.

அவற்றைப் பார்க்க உதவுவது போல மெல்லவே ஓடிக்கொண்டிருந்தது கொடிகாமம் பேரூந்து. பஸ் இடையில் ஐந்து இடங்களில் நிறுத்தப்பட்டது.

"தம்பி இந்த பஸ் மட்டுவில் போகுமா?" என்று கேட்டார் நாகநாதர் நடத்துனரை நோக்கி.

"போகும் ஐயா... நீங்கள் எங்க இறங்க வேணும்...?"

"வேரற்கேணி முருகன் கோவிலடி தம்பி"

பேரூந்து நுணாவில் சந்தியில் திரும்பி ஓடிக்கொண்டிருந்தது. இந்த ஊருக்கு பேரூந்து விடக்கோரி வடபகுதி போக்குவரத்துச் சபையுடன் போராடிய அந்த நாட்கள் அவர் நினைவில் வந்தன. பேரூந்து மட்டுவில் சாலையால் கொடிகாமம் வரை ஓடியபோது ஊரக நற்பணி மன்றம் எடுத்த முயற்சியால் கட்டப்பட்ட நிழல் குடை முருகன் கோவில் அருகே தெரிந்தது.

"எங்கள அந்த நிழல்குடையில் இறக்கிவிடும்" நாகநாதர் குடும்பம் வந்து இறங்கியதைப் பார்த்தவர்கள் ஓடி அருகில் வந்தனர். கேள்விக் கணை தொடுத்தனர்.

"வந்தாயிற்று... இனி ஆறுதலாய்ப் பேசுவோம்..." என்று சொல்லிக் கொண்டு கிழக்கே திரும்பி முருகா என்றபடி நடந்தார்.

அவர் வீட்டு வாசலில் அயலவர் சுற்றத்தார் கூடி நின்று வரவேற்றனர். புன் சிரிப்பு தவழும் முகத்துடன் நாகநாதர் விரைந்து முன்னேறினார். மனைவி, பிள்ளைகள் ஓட்டமும் நடையுமாக,

அதோ வீடு,
அதுவா அவர் வீடு?
அதுதான் வீடு;
அதன் கூரை எங்கே?
அவருக்குப் புரியாதா,
என்ன நடந்திருக்கும்?
என்று.

வீட்டின் கூரைத் தகடுகள் மரங்கள் இல்லை. உள்ளும் புறமும் புற்கள், செடிகள் வளர்ந்து பசுமையாய்த் தெரிந்தன.


முற்றத்தில் விழுந்து படுத்தார் நாகநாதர். அவரைச் சுற்றி மனைவி பிள்ளைகள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகப்பரப்பில் மாவீரர் நாள்






























தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர் நிலம்விழுங்க விரியும் பேரினவாதப் பெருவாயை
கிழத்தெறியத் திரள்கிறது தமிழர்சேனை !

